# தமிழரசு

16-3-1990 ரூ.1







25-வது இந்திய தொழில் திறனாய்வுத் தேர்வில் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாகத் தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக வழங்கப்பட்ட குடியரசுத் தலைவரின் சுழற்கேடயத்துடன் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள்.

# இந்த இதழில் ...

பவள விழாக் காணும் இராணி மேரி கல்லூரி ... 2

சேமிப்பின் அவசியம் ... 5

கலைமாமணி விருது பெற்ற கண்மணிகள் ... 7

தமிழீழத்தில் தமிழர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் — முதல்வர் கலைஞர் ... 10

உங்கள் குறைகளைச் சொல்லி ஆறுதல் பெற ஒரு துணை ... 15

கன்னியாகுமரி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள் ... 17

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ... 21

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் ... 27

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 29

தலைநகரின் தாகந் தீர்க்கும் சென்னைக் குடிநீர் வாரியம் ... 33

அண்ணலைக் கவர்ந்த ஆச்சார்ய நரேந்திர தேவா ... 37

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

பங்குனி 2

மலர்:20 இதழ்:18

16-3-1990



மறைந்த பேரணமல்லூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. எட்டியப்பன் அவர்களின் மனைவி திருமதி எட்டியம்மாளுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 7.3.90 அன்று சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் எம். தமிழ்க்குடிமகன் அவர்கள் முன்னிலையில் ரூ.50,000/-க்கான காசோலையை வழங்கினார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன் அவர்களும் உடன் இருக்கிறார். (சட்டமன்ற உறுப்பினர் பதவிக் காலத்தில் மரணமடைந்தால், அவரது குடும்பத்தினருக்கு ரூ.50,000 வழங்கப்படும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்.)

முதல் அட்டை சொல்லும் செய்தி:

# பவளவிழாக் காணும் இராணிமேரி கல்லூரி




சென்னையில் இராணிமேரி கல்லூரியின் பவள விழா 7.3.1990 அன்று காலை 10.30 மணியளவில் தொடங்கியது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரை முருகன் அவர்களும், மாநிலங்களவை உறுப்பினர் திரு. டி..ஆர். பாலு அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. வைஜெயந்திமாலா பாலி அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. என். கணபதி அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மாண்புமிகு உணவு - கூட்டுறவு அமைச்சர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களும், மாநிலங்களவை உறுப்பினர் திரு. வை. கோபால்சாமி அவர்களும், திருமதி. மீனா முத்தையா அவர்களும் விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்தனர்.

விழா தொடங்குமுன் - மஞ்சள் வண்ணச் சீருடையும் தலையில் கிரீடமும் அணிந்து இருமருங்கும் அணிவகுத்து நின்ற கல்லூரி மாணவியர் மலர் தூவியும், வணங்கியும் வரவேற்பு வழங்க - கல்லூரி பாண்டு வாத்தியக் குழு இசையோடு மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மற்றவர்களையும் விழா மேடைக்கு அழைத்து வந்தார் கல்லூரி முதல்வர் டாக்டர். நிர்மலா தியாகராசன்.

இராணிமேரி கல்லூரியின் முன்னாள் மாணவியர், விரிவுரையாளர்கள், பேராசிரியைகள், அலுவலர்கள் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பொன்னாடை அணிவித்துச் சிறப்பிக்கப்பட்டது.

கல்லூரி மாணவியர் பேரவை சார்பில் முதலமைச்சர் நிதிக்கெனப் பத்தாயிரம் ரூபாய் காசோலை வழங்கப்பட்டது.

கல்லூரிக் கல்வி இயக்குநர் டாக்டர். பி.எஸ். சுப்பிரமணியம் வரவேற்புரையாற்றினார். பொருளியல் பேராசிரியை திருமதி லலிதா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி) பவளவிழா அறிக்கையைக் கல்லூரி முதல்வர் டாக்டர். நிர்மலா தியாகராசன் படித்தார். ''நாளும் வளர்ச்சி பெற்று நற்கலைகள் பலவும் பயிற்றுவிக்கும் இராணிமேரி கல்லூரி இப்போது எழுபத்தைந்து ஆண்டுகள் முடிந்து பவளவிழா காணுகிறது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 15 ஆண்டுகளுக்கு முன்பு இக்கல்லூரியின் வைர விழாவைத் தொடங்கிவைத்த சிறப்பால் அரசு மகளிர் கல்லூரிகளிலேயே தன்னாட்சி பெற்ற ஒரே கல்லூரியாக எங்கள் கல்லூரி உயர்ந்திருக்கிறது. பெண் கல்விக்காக நமது முதல்வர் அவர்கள் அளித்திருக்கும் சலுகைகள் மகத்தானவை. இக்கல்லூரியில் படித்துக் கல்விப்பயன் பெற்றோர் பலர் உலகளவிலே பல சிறப்பான நிலைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு பல்கலைக்கழக மானியக் குழுவைப் பவளவிழாக்காணும் இக்கல்லூரிக்கு இருபது இலட்சம் ரூபாய் வழங்கக் கேட்டிருக்கிறோம். அதற்கு இணையாகத் தமிழக அரசும் அளித்தால், நல்லதோர் நூலகம், ஆய்வுக் கூடமெல்லாம் கொண்ட பவளவிழா நினைவுக் கட்டிடம் கட்டும்படியான

தமிழ்நாட்டிலேயே
75 ஆண்டுகளாக
மகளிர்க்கு
உயர் கல்வி அளித்து
பவளவிழாக் காணும்
முதல் மகளிர் கல்லூரி
இராணிமேரி கல்லூரியே!

வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' - என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2,268 சதுர அடிப்பரப்பில் ரூ.4.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறைகள் பற்றிய தொழில் நுட்ப அறிக்கையினைப் பொதுப்பணித் துறையின் கட்டடப்பிரிவுத் தலைமைப் பொறியாளர் திரு. ஏ.வி. சத்தியகாமன் படித்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி. ராஜாத்தி அம்மையார், முன்னாள் மாணவியர் சங்கத்தலைவியும் - பவளவிழாக் குழுத் தலைவியுமான திருமதி. மீனா முத்தையா, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களின் துணைவியார் திருமதி. வெற்றிச் செல்வி ஆகியோர் விழாவைச் சிறப்பிக்கும் வகையில் குத்துவிளக்கேற்றி வைத்தனர்.

புதிதாகக் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைகளைத் திறந்துவைத்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். துரைமுருகன் அவர்கள் பேசுகையில் - ''பூக்களில் சிறந்தது தாமரை என்பது போல, ஆறுகளில் சிறந்தது காவிரி என்பது போல, மன்னர்களில் சிறந்தவன் சோழ மன்னன் என்பது போல, மகளிர் கல்லூரிகளில் சிறந்தது இராணி மேரி கல்லூரியே'' என்றார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர். மு. தமிழ்க்குடிமகன் அவர்கள், பவளவிழா மலரை வெளியிட்டார். அன்னை தெரசா பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் திருமதி. வசந்திதேவி முதல் மலரைப் பெற்றுக் கொண்டார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் தமது வாழ்த்துரையில் - ''பெண்கள் சமஉரிமை பெற வேண்டும் என்று இந்த அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் - கண்டு வரும் கனவுகள் இப்படிப் பட்ட கட்டுக்கோப்பான மகளிர் கல்லூரிகள் மூலமே நிறைவேறியாக வேண்டும்'' என்றார். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் இராணிமேரி கல்லூரியின் முன்னாள் முதல்வர்கள் டாக்டர் ஐராவதி, திருமதி.என். சண்முகசுந்தரம், செல்வி கே. ஜெகதாம்பாள், திருமதி இனயதுனிசா முனவர், செல்வி சரோஜினி, திருமதி. ராஜ ராஜேசுவரி ஆகியோருக்கும், தற்போதைய முதல்வர் டாக்டர் நிர்மலா தியாகராசனுக்கும் சிறப்பு செய்யப்பட்டது.

மாண்புமிகு கலைஞர் அவர்கள் சிறப்புரையாற்றும் போது குறிப்பிட்டதாவது:- ''இன்று நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற கல்லூரிகளுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற வகையிலே இந்தக் கல்லூரி அமைந்திருக்கின்றது. நல்ல கட்டுப்பாட்டோடு, கடமை உணர்வோடு, கண்ணியத்தோடு இந்தக் கல்லூரியிலே பயிலுகின்ற மாணவியர்கள் விளங்குகின்றார்கள் என்பது - நான் கேள்வியுற்று மகிழ்ச்சியடைகின்ற ஒரு செய்தி. எனவே, அத்தகைய தேன் பாயும் செய்தியை என்னைப்போன்றவர்களுக்கு வழங்குகின்ற இந்தக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவிகள் அனைவருக்கும் - அவர்களை அந்த வகையிலே பயிற்றுவிக்கின்ற ஆசிரியப்





பெருமக்களுக்கும் என்னுடைய பாராட்டுதலை - மகிழ்ச்சியை - வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இதுபோன்ற பெண்கள் கல்லூரிகள் இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஐம்பதுக்கும் மேற்பட்டவை இருக்கின்றன. மேலும் இத்தகைய கல்லூரிகள் உருவாக வேண்டும் - வளரவேண்டும் - பெருகிட வேண்டும் என்பது என்னுடைய ஆசை. ஒவ்வொரு கல்லூரியும் எல்லா வகையிலும் சிறந்து விளங்க வேண்டுமென்று அந்தக் கல்லூரியிலே பயிலுகின்ற மாணவர்களும், அவைகளை நடத்திச் செல்கின்ற நிர்வாகிகளும் விரும்புவது இயற்கை. அதனால் தான் இந்தப் பவள விழாவை முன்னிட்டு மத்தியப் பேரரசிடம் இருபது இலட்ச ரூபாய் நிதி உதவி கேட்டிருப்பதாகவும், அந்த நிதி உதவி கிடைக்குமேயானால் அதற்கு ஈடாக மாநில அரசும் நிதி வழங்க வேண்டுமென்றும் கல்லூரி முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்கள்.

''மத்திய அரசு ஒன்றைச் செய்யும் போது, மாநில அரசும் அதற்கு இணையாக ஒன்றைச் செய்தால் மத்திய அரசும், மாநில அரசும் சமமாக ஆகிவிடும் என்பது பழைய காலக் கொள்கை. ஆனால் இன்றைக்கு மத்திய மாநில அரசுகள் சமமாக இணைந்து, நாட்டு நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்கின்ற ஒரு புதிய கொள்கை வகுக்கப்பட்டிருக்கின்ற கால கட்டத்தில் நாம் வாழ்கிறோம்.

''பிரதமர் வி.பி.சிங் அவர்கள் கூட, சில மாதங்களுக்கு முன்பு கேரளாவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியிலே கலந்து கொண்டபோது இனிமேல் மாநிலங்கள் மத்திய அரசிடம் யாசகம் கேட்கின்ற நிலையிலே கையேந்த வேண்டிய அவசியமில்லை. நமக்குக் கிடைப்பது ஒரு ரொட்டித் துண்டாக இருந்தாலும், அதனை மாநிலங்கள் என்ற சகோதரர்களோடு அனைவரும் பகிர்ந்து கொள்வோம் என்று குறிப்பிட்டார்கள். அது, மத்திய அரசும் மாநில அரசுகளும் சமமான மரியாதை கொண்டவை - என்பதைக் காட்டுகின்ற காரணத்தால் மத்திய அரசு எந்த அளவிற்குத் தொகை இந்தப் பவள விழாவை முன்னிட்டு வழங்க முன் வருகிறதோ, அதற்கு இணையான தொகையை வழங்க வேண்டுமென்று அம்மையார் அவர்கள் இங்கே கேட்டிருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கை நிச்சயமாக மாநில அரசால் பரிசீலிக்கப்படும் என்பதை எடுத்துக்கூறி, இருபது லட்சம் மத்திய அரசு தருமா என்ற அந்தக் கேள்

விக்கு எந்த வகையிலே விடை கிடைக்கிறதோ அந்த வகையில் அதற்கு இணையான நிதியினை வழங்க மாநில அரசு முன்வரும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

''மறைமலை அடிகள், 'அறிவுரைக் கோவை' என்ற நூலிலே பெண்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ள வாசகம் - நம் நெஞ்சிலே பதிய வைத்துக்கொள்ள வேண்டிய வாசகமாகும். அவர் அதிலே குறிப்பிடுகிறார்.

''கல்வியிலும் உடம்பு நலத்திலும் நல்லொழுக்கத்திலும் மேன்மேல் உயர்வதற்குப் பெருந்தடையாய் உள்ள சிறு பருவ மணத்தை அறவே ஒழித்தல் வேண்டும். (அந்தக் காலத்திலே நடைபெற்ற பால்ய விவாகத்தை அவர் எந்த அளவிற்குத் தீவிரமாக எதிர்த்திருக்கிறார் என்பதற்கு இந்தச் சொற்றொடர் சான்றாகும்) பெண் மக்களுக்கு இருபதாண்டும், ஆண் மக்களுக்கு இருபத்தைந்தாண்டும் நிரம்பும் முன் அவர்களை மணம் செய்வித்தல் ஆகாது. அங்ஙனம் மணம் செய்யுமிடத்தும், ஒருவரை ஒருவர் அன்பு பாராட்டுதல் அறிந்து அதன்பின் அவர்களை மணம் பொருத்தல் வேண்டும். ஆணையாவது, பெண்ணையாவது ஆடுமாடுகளைப் போல் விலை கொடுத்து வாங்கும் கொடிய வழக்கத்தை வேரோடு களைவதற்கு எல்லோரும் மடி கட்டி நிற்றல் வேண்டும். ஏனென்றால், அன்பில்லா வாழ்க்கையால் வரும் தீமைகள் அளவில்லாதவைகளாய் இருக்கின்றன. அன்பில்லா சேர்க்கையில் பிறக்கும் பிள்ளைகள் குறுகிய வாழ்நாளும் பல தீய தன்மைகளும் உடையவராய் இருக்கின்றனர். அன்பு வளர்ச்சிக்கு ஏதுவாக ஆண் மக்களும், பெண் மக்களும் கள்ளங்கபடமின்றி நடமாடச் செய்தல் வேண்டும். பெண் மக்களைக் கல்வியிலும் நன்முறையிலும் பழக விடாமல், மணமாகின்ற வரையில் அவர்களை அறைகளில் அடைத்து வைப்பதும் பெரும் தீமைகளை விளைவிக்கின்றது. பெண்மக்களைப் பெரும்பாலும் தமிழ் முதலிய தாய்மொழிக் கல்லூரியிலே கல்வி பயிற்றுவித்தல் வேண்டும். உணவமைத்தல், இல்லறம் நடப்பித்தல், குழந்தைகளைப் பாதுகாத்தல் முதலிய முறைகளில் தேர்ச்சி பெற வேண்டுவது பெண் மக்களுக்கு இன்றியமையாததாகும்.''



இராணி மேரி கல்லூரி பவள விழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்று, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கி நிறைவுரை ஆற்றினார்.

—என்று பெண்களுக்கு அறிவுரை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

''தமிழ்த் தென்றல் திரு.வி.க. பெண்களுக்காக வாதாடியவர். தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் போன்றவர்கள் எல்லாம் பெண்களின் சுதந்திரத்திற்காக, பெண்களின் உரிமைக்காக எத்தனையோ கருத்துக்களை அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொன்னவர்கள். அவர்கள் அறுபதாண்டுகளுக்கு முன்னால் நிறைவேற்றிய தீர்மானங்களையெல்லாம் இன்றுள்ள தமிழக அரசு சட்டங்களாக - திட்டங்களாக நிறைவேற்றிக் கொண்டு வருகின்றது.

''இன்றைக்குப் பெண்கள் முன்னேறியுள்ள ஒரு காலக் கட்டத்தில் வாழ்கிறோம். மூவாயிரம் மாணவியர் படிக்கின்ற ஒரு கல்லூரியின் பவள விழாவினைக் கொண்டாடுகின்றோம். படிப்பைப்பற்றிக் கவலைப் படாமல் ''அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு'' என்கின்ற நிலையில் அடுப்பூதிக் கொண்டிருந்த அந்தச் சமுதாயத்தில் இன்றைக்கு ஒரு மாறுதலை உருவாக்கியிருக்கின்ற அந்தப் பெரியவர்களை எல்லாம் எண்ணிப் பார்த்து, மகிழ்ச்சி அடைகிறோம்.

''எத்தனையோ தாய்கள் தங்களுடைய குழந்தைகளை வீரர்களாக ஆக்கியிருக்கின்றார்கள். அன்றைய தமிழகத்தில்-சங்க காலத்தில் நம்முடைய தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளை வீரர்களாக வளர்த்தார்கள். நாட்டுக்கு - மன்னனுக்கு - மக்களுக்குத் தீமை வந்தால், பகைப் புலத்தால் தீங்கு வருமேயானால், அந்த நாட்டைக் காப்பாற்றவும், மண்ணை மீட்கவும் போரிடக்கூடிய வீரர்களாக உருவாக்கினார்கள் - அப்படிப் போரிடக்கூடியவர்கள் நெஞ்சிலே வேல் தாங்கி, வாள் தாங்கி, விழுப்புண் பெற்ற வீரர்களாக மரணம் அடைய வேண்டும்; அந்த மரணம் அவர்களைப் பெற்றெடுத்த மாதாவிற்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியது என்கின்ற வகையிலே அன்றைக்குப்பிள்ளைகளை வளர்த்திருக்கின்றார்கள்.

''அப்படிப்பட்ட தாய்க்குலமாக இந்தக் கல்லூரியிலே பவள விழாக் காணுகின்ற நேரத்தில் அமர்ந்திருக்கின்ற நம்முடைய சகோதரிகள் எல்லாம் - மாணவிகள் எல்லாம் எதிர்காலத்திலே விளங்க வேண்டும் என்ற என்னுடைய வாழ்த்துக்களை அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.''

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள். முடிவில், இராணிமேரி கல்லூரி மாணவியர் தலைவி, செல்வி எஸ். உமாராணி நன்றி கூறினார்.

-பி. எல். ராஜேந்திரன்



# சேமிப்பின் அவசியம்



அ. ரகுமான்கான், எம்.எல்.ஏ.
துணைத்தலைவர், மாநில தேசிய
சேமிப்பு ஆலோசனைக்குழு

நாளைய தேவைக்காகப் பணத்தை இன்று தனியாக ஒதுக்கி வைத்துப் பாதுகாப்பதுதான் சேமிப்பு. இன்றைய மனித வாழ்வில் இது மிகவும் முக்கியமான ஒன்றாகும். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று வள்ளுவர் அன்றே சொல்லி இருக்கிறார். ''இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்'' என்பது நமது முன்னோர்கள் சொல்லி இருக்கும் முதுமொழி ஆகும். மனித சமுதாயத்தின் இயக்கமே பொருளாதாரப் போராட்டம் என்பதுதான், கார்ல் மார்க்ஸின் கண்டுபிடிப்பு. ஆகவே நாளைய உலகின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இன்றே பணத்தைச் சேமிக்க வேண்டியதின் அவசியம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

அடர்ந்த காட்டுக்குள் வாழ்கிறோம் என்பதற்காக மரங்களை நாசப்படுத்தினால், பிறகு காடு காடாக இருக்காது. மரங்கள் அற்ற பாலைவனமாகத்தான் இருக்கும். குன்றனைய செல்வம் இருந்தாலும் அது சேமிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படவில்லையென்றால் அந்தச் செல்வம் கோடையில் உருகிய பனியாகிவிடும். எனவே சேமிப்பு மிகவும் அவசியமானதாகும். இயற்கையின் படைப்புக்கள்கூட இந்த உண்மையை நமக்கு வலியுறுத்துகின்றன. எறும்பு தன் தேவைக்காகச் சேமித்து வைக்கிறது. தேனீக்கள் தங்களுக்கு வேண்டியதைத் துளித்துளியாக ஒன்று சேர்த்துச் சேமிக்கிறது. பாலைவனப் பயணத்திற்குத் தயாராகும் ஒட்டகக் கூட்டங்கள்கூட தங்களுக்குத் தேவையான தண்ணீரைச் சேமித்துக் கொண்டுதான் பயணத்தைத் தொடங்குகின்றன.

திடீர் வேலை இழப்பு, வணிக நட்டம், வருமானக் குறைவு, உடல்நலக் குறைவு, எதிர்பாராத விபத்துக்கள்-இப்படி, பலவற்றை மனிதன் தன் வாழ்வில் சந்திக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட துயரமான சூழ்நிலைகளில் வெறும் எதையும் தாங்கும் இதயம் மட்டும் இருந்தால் போதாது, பணத்தைச் சேமித்து வைக்கும் பழக்கம் தான் காக்கும் கரமாக இருந்து நம்மைக் காக்க முடியும்.

''வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'' என்ற

வள்ளுவரின் வாசகம் சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

''ஆகாறு அளவிட்டிதாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை'' என்ற குறளும் செல்வம் வரும் வழி அதிகமாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை, ஆனால் செல்வம் அழியாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று நமக்கு அறிவுரை கூறுகிறது.

ஆகவே சேமிப்பை நமது வாழ்வின் நெறியாக நாம் பின்பற்ற வேண்டும். சேமிப்பு என்பது தனி மனிதனின் அல்லது

## சிறுசேமிப்புப்பழமொழிகள்

- சிறப்பை அளிப்பது சிறு சேமிப்பு
செல்வம் தருவது சிறு சேமிப்பு.
- சேமிப்பு இல்லாக் குடும்பம்
கூரையில்லா வீடு.
- சிக்கனம் வீட்டைக் காக்கும்
சேமிப்பு நாட்டைக் காக்கும்.
- இன்றைய நமது சேமிப்பு
நாளைய சந்ததிக்குப் பாதுகாப்பு.
- ஒற்றுமையில் வலிமை
சேமிப்பினால் வளமை.
- வீட்டையும் நாட்டையும்
காக்கச் சிறு சேமிப்பு.

குடும்பத்தின் பாதுகாப்புக்காக மட்டுமல்ல, ஒரு சமுதாயத்திற்கும் அவசியமானது.

சேமிப்பிற்கு அடிப்படை சிக்கனம். கஞ்சத்தனம் என்பது வேறு. சிக்கனம் என்பது வேறு. சிக்கனம் என்பது தேவையானவற்றிற்கு மட்டுமே செலவழிப்பது. கஞ்சத்தனம் என்பது தேவையானவற்றிற்கும் கூட செலவழிக்க மறுப்பது. ஆகவே சிக்கனத்தின் மூலம் நாம் சேமிக்க வேண்டும். இதுவரை சேமிக்காதவர்கள் இனிமேலாவது சேமிக்க வேண்டும் என அன்பு வேண்டுகோள் விடுகின்றேன். ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை அரவணைக்க உங்களை அன்புடன் வேண்டுகிறேன். நீங்கள் சேமிக்கக்கூடிய பணத்தை அஞ்சலகங்களில் முதலீடு செய்யுங்கள். இந்த சிறு சேமிப்பு முதலீட்டுக்கு வங்கிகளைக் காட்டிலும் அதாவது 12% அதிக வட்டி உண்டு. நீங்கள் சிறுசேமிப்பு முதலீடு செய்வதற்கு இந்திரவிகாஸ் பத்திரங்கள், கிஸான்விகாஸ் பத்திரங்கள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள், குறிப்பிட்ட கால முதலீடு, பொது நலத்திட்டம், ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கான திட்டம், பள்ளி மாணவர்களுக்குரிய சஞ்சயிகா சேமிப்புத் திட்டம், மாதாந்திர வருமானத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. சிறுசேமிப்புத் துறையைச் சேர்ந்த அலுவலர்களை அணுகினால், அது பற்றிய விவரங்களைப் பெறலாம். வருமானவரி விலக்கிற்குக்கூட இத்திட்டங்கள் வழி வகைகள் செய்கின்றன.

சிறுசேமிப்புத் திட்டங்கள் மூலம் தனி மனிதர்கள் மட்டும் லாபம் பெறவில்லை. ஒரு சமுதாயமே பலன் அடைகிறது. சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் திரட்டப்படும் பெரும் நிதி மாநில அரசின் சமூக நலத்திட்டங்களுக்கும் மத்திய அரசின் நலத்திட்டங்களுக்கும் பயன்பெறுகின்றன. மாநில அரசின் நிதிநிலைப் பற்றாக்குறையைச் சரிக்கட்டும் அமுத சுரபியாக இந்தப் பெருந்தொகை பயன் படுகிறது. இந்த ஆண்டு சிறுசேமிப்புத் துறையின் மூலம் திரட்டப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூ.400 கோடி. இதில் 100 கோடி ரூபாய் மத்திய அரசிற்குச் சென்றுவிடும். மீதி 300 கோடி ரூபாய்தான் தமிழக அரசிற்குக் கிடைக்கும். இது சமுதாயத்தின் அடித்தள மக்களுக்குப் பயன்படும் வகையில் உதவுகிறது.

முட்டை, வைட்டமின் மாத்திரைகளுடன் கூடிய சத்துணவு, 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கல், இலவச சேலை வேட்டி வழங்கல், கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ.200/- வழங்குதல், திருமணம் ஆகாத இளம்பெண்களின் திருமணச் செலவிற்கு ரூ. 5,000/- வழங்கல், தொழிற்சாலைகள் உருவாக்கல், கல்விக்கூடங்கள் கட்டுதல், சாலை அமைத்தல், போக்குவரத்து வசதி செய்துகொடுத்தல் போன்ற பல திட்டங்களை நிறைவேற்ற இந்த நிதி பயன்படுகிறது.

ரூ.400 கோடி சிறுசேமிப்பின் மூலம் பெறப்படவேண்டுமென்ற இலக்கு நோக்கி நாங்கள் வேகமாக முன்னேறி வருகிறோம். இதுவரை ரூ.160 கோடி சேர்ந்துள்ளது. விரைவில் இலக்கை அடைவோம். இந்தத் துறை இப்போது மக்களின் கவனத்தை ஈர்க்கும் துறையாக மாற்றப்பட்டு வருகிறது. சேமிப்பாளர்களை ஊக்குவிக்கும் விதத்தில் பல திட்டங்களை நாங்கள் அறிமுகப்படுத்தி வருகிறோம். 1.12.89 முதல் கார் போன்ற பல பொருட்களைப் பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்துள்ளோம். ரூ.1000/- சிறு சேமிப்பு முதலீடு செய்து பரிசுக் கூப்பன் வாங்கினால் அவர்கள் கார் போன்ற பரிசைக் குலுக்கலின் மூலம் பெற முடியும். குலுக்கலில் கார் அல்லது பரிசுப் பொருட்கள் பெறவில்லையென்றால், அவர்கள் தங்கள் பணத்தை இழக்க மாட்டார்கள். வட்டியுடன் கூடிய முதலீட்டுப் பணத்தைப் பெறுவார்கள். இது மக்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இதுபோன்ற பல்வேறு சீரிய திட்டங்கள் இன்னும் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றன. நீங்களும் இதில் பங்கேற்றுப்பயன்பெற அன்புடன் அழைக்கிறேன்.

***(24.1.1990-இல் சென்னை வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து)***

# கலைமாமணி விருது பெற்ற கண்மணிகள்

இயல், இசை, நாடகம், நாட்டியம், திரைப்படம், கிராமியக் கலைகள் ஆகிய துறைகளில் சிறப்புமிக்க பணியாற்றிய கலைஞர்களுக்கும், பணியாற்றி வரும் கலைஞர்களுக்கும் ஆண்டுதோறும் கலை மாமணி விருது வழங்கிச் சிறப்பித்து வருகிறது தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம்.

தொடக்கத்தில் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்னும் பெயரைத் தாங்கியிருந்த இந்த அமைப்புக்கு 1973-இல் தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம் என்னும் பெயரை மாண்புமிகு முதல்வர் கலைஞர் சூட்டினார்.

1959-60 முதல், கடந்த முப்பதாண்டுக் காலத்தில் மொத்தம் 675 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது அளித்துள்ளது இந்த மன்றம்.

இந்த ஆண்டு (1989) 28 கலைஞர்களுக்கு விருது வழங்கப்படுகிறது.

விருது பெறும் கலைஞர்களின் உருவப் படங்களையும் வாழ்க்கைக் குறிப்புகளையும் வெளியிட்டுப் பெருமை கொள்கிறது 'தமிழரசு'.



திரு. வா.மு. சேதுராமன் (இலக்கியம்)



திரு. மன்னர் மன்னன் (இலக்கியம்)

## திரு. வா.மு. சேதுராமன் (இலக்கியம்)

இன்றைய பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைச் சேர்ந்த ஆண்ட நாயகபுரத்தில் திரு. வா.முத்து, திருமதி இராமாயி தம்பதிக்கு 1938 ஜூன் திங்கள் 15-ஆம் நாளில் மகனாகப் பிறந்தவர் திரு வா.மு. சேதுராமன் அவர்கள்.

பெரும்புலவர் ஆறுமுகம் பிள்ளை, தமிழ்க்கடல் இராமதாசர், தவத்திரு சுவாமி சாது குரு அடிகள், வித்வான் சுந்தரராச ஐயங்கார் போன்ற ஆசிரியர்களிடம் தமிழ் பயின்று; சென்னைப் பல்கலைக் கழகத்தின் எம்.ஏ. பட்டம் பெற்றவர் இவர். பேராசிரியர் ந.சஞ்சீவி அவர்களை வழிகாட்டியாகக் கொண்டு 'தமிழ் நூலில் கவிதைக் கருத்துக்களும் கற்பனைகளும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். சென்னையில் முசுலீம் மேல் நிலைப்பள்ளியில் தற்போது தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

காவியங்கள், கட்டுரைகள் என 56 நூல்களை இயற்றியுள்ளார்.

## திரு மன்னர் மன்னன் (இலக்கியம்)

புதுவை என்று அழைக்கப்பட்டுவரும் புதுச்சேரியில் பாவேந்தர் பாரதிதாசன் - திருமதி பழநியம்மாள் ஆகியோரின் மகனாக 3.11.1928 அன்று பிறந்தவர் திரு மன்னர் மன்னன் அவர்கள்.

கோபதி என்னும் இயற்பெயருக்குச்



திரு. நாகூர் அனீபா (இசை)



திரு. திருப்பாம்புரம் சண்முகசுந்தரம் (இசை)



திரு. களக்காடு இராமநாராயண அய்யர் (இசை)



திரு. ஆர். நடராசன் (ஓவியம்)



சொந்தக்காரரான இவர், தமது தந்தை பாவேந்தரிடமே தமிழ் பயின்றார்.

கவிதை, கதை, கட்டுரை, நாடகம் என எழுத்துக் களத்தின் பல துறைகளிலும் திறமை பெற்றுள்ள இவர், 14 நூல்களை உருவாக்கியுள்ளார். இவற்றில் இரண்டு நூல்கள் தமிழக அரசின் பரிசுகளைப் பெற்றுள்ளன.

புதுவை வானொலி நிலையத்தில் தமிழ் எழுத்தாளராகவும் பேச்சுத்துறை ஆசிரியராகவும் 16 ஆண்டுகள், சென்னை வானொலி நிலையத்தில் நாடகத்துறை, பேச்சுத்துறை, குடும்பநலத் துறை ஆகியவற்றில் 4 ஆண்டுகள் என 20 ஆண்டுகள் பணிபுரிந்திருக்கிறார்.

## திரு இ.எம். அனீபா
## (இசை)

இராமநாதபுரத்தில், ஜனாப் முகம்மது இஸ்மாயில், ஜனாபா முகம்மது மரியம் ஆகியோரின் புதல்வராக 1925 டிசம்பர் 25-ஆம் நாளன்று பிறந்தவர் திரு இ.எம். அனீபா அவர்கள்.

பன்னிரண்டாம் வயது முதல், தந்தையின் ஊரான நாகூரில் வாழ்ந்து வருகிறார். பள்ளியில் பயில்கின்ற காலத்திலேயே இன்னிசைப் பாடல்களை ஆர்வத்துடன் செவிமடுத்துத் தாமும் பாடுவதற்குப் பழகிக் கொண்டார்.

52 ஆண்டுகளாக இசைத் தொண்டு ஆற்றிவரும் இவருக்கு 1940-ல் கோகிலத் தொனி என்றும் 1945-ல் இசை முரசு என்றும் சிறப்புப் பட்டங்கள் வழங்கப் பட்டன. 1989-ல் கலைஞர் விருது பெற்றார்.

1938 முதல் சுயமரியாதை இயக்கத்தில் பங்கேற்று வரும் இவர் 1971 முதல் 76 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகப் பணி ஆற்றியுள்ளார். 1989 முதல் வக்பு போர்டு உறுப்பினராக இருந்து வருகிறார். பல வெளி நாடுகளுக்குச் சென்று இன்னிசை நிகழ்ச்சி நடத்தியுள்ளார்.

## திருப்பாம்புரம்
## சோ. சண்முகசுந்தரம்
## (இசை)

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பாம்புரத்தில், திரு ந. சோமசுந்தரம் பிள்ளை, திருமதி பட்டம்மாள் தம்பதியின் மகனாக 15-7-1937-ல் பிறந்தவர் திரு சோ. சண்முகசுந்தரம் அவர்கள்.

தமது எட்டாவது வயதிலிருந்து பதின்மூன்றாவது வயது வரை, சிறந்த இசைப் பேரறிஞரான தமது தந்தை சோமசுந்தரம் பிள்ளையிடமும், பின்னர் தமது பெரிய தந்தையார் புல்லாங்குழல் மேதை திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளையிடமும் இசை பயின்றார்.

முப்பது ஆண்டுகளாகக் கலைப்பணி புரிந்துவரும் இவர் தற்போது சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியின் முதல்வராகப் பணிபுரிந்து அதன் மேன்மைக்குப் பாடுபட்டு வருகிறார். எண்ணற்ற இசைக் கலைஞர்களை உருவாக்கியுள்ளார்.

## களக்காடு
## எஸ். இராமநாராயண ஐயர்
## (இசை)

திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு என்னும் ஊரில் திரு என். சுப்பையா பாகவதர், திருமதி மீனாட்சி அம்மாள் ஆகியோருக்கு மகனாக 1910 அக்டோபர் பத்தாம் நாளன்று பிறந்தவர் திரு களக்காடு இராமநாராயண ஐயர் அவர்கள்.

தமது 7-ஆம் வயதிலேயே தம் தந்தையிடம் இசைப் பயிற்சியைத் தொடங்கினார். இவரது தந்தையாரும் இசைத் துறையில் புகழ் பெற்றவர்; கொழும்பில் கனகசபை மகாராஜாவாலும், திருவனந்தபுரம் ஸ்ரீமூலம் திருநாள் மகாராஜாவாலும் சிறப்பிக்கப்பட்ட அவர் விவேகாநந்தரின் ஆசியையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் 1928-ல் சென்னைக்கு வந்து மன்னார்குடி சுவாமிநாதய்யர், முடிகொண்டான் சபாபதி ஐயர் ஆகிய இசையறிஞர்களிடம் 10 ஆண்டுகள் பயிற்சி பெற்றார்

ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு மேலாகக் கலைப்பணிபுரிந்து வரும் இவர் பல சிறப்புப் பட்டங்களையும், பல்வேறு பரிசுகளையும் பெற்றுள்ளார்.





திரு. சித்தூர் கோபாலகிருஷ்ணன் (வயலின்)



திரு. குருவாயூர் துரை (மிருதங்கம்)

41-ஆம் பக்கம் பார்க்க

**TNPSC**

**விளம்பர எண்: 7/90**

தமிழ்நாடு பள்ளிக் கல்விப்பணியில் கீழ்க்கண்டவாறு மாவட்டக் கல்வி அலுவலர்/மகளிர் பள்ளி ஆய்வாளர் பதவியில் 13 காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய 2.4.1990 அன்று மாலை 5.45 மணிவரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெளிச்சந்தையிலிருந்து | ... 10 | |
| | | அரசு அங்கீகாரம் பெற்ற உதவி பெறும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களிடமிருந்து | ... 3 | |
| **சம்பளம்** | : | மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2200-75-2800-100-4000 | | |
| | | (ஆதிதிராவிடர் வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | ... 2 | |
| | | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | ... 2 | (ஒரு இடம் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டது) |
| | | பிற்படுத்தப்பட்ட வகுப்பனர் (பி.வ.) | ... 4 | ,, |
| | | பகிரங்கப் போட்டி (ப.போ.) | ... 5 | ,, |
| **குறிப்பு** | : | தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர் கிடைக்கப்பெறாவிடில் அந்தக்காலியிடம் ஆண் விண்ணப்ப தாரரைக்கொண்டு நிரப்பப்படும். | | |
| **வயது** | : | **I. வெளிச்சந்தை:** 1.7.1990 அன்று 30 வயதிற்குக்குறைவாக. | | |
| | | **II. அரசு அங்கீகாரம் பெற்ற உதவி பெறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு:** 1.7.1990 அன்று 40 வயதிற்குக்குறைவாக. | | |

**QUALIFICATIONS:**

**I. For both open market and Teacher candidates:-**

i. A Master's Degree in any one of the following subjects viz.- Mathematics, Physics, Chemistry, Botany, Zoology, Commerce or Geography of any University in the State of Tamil Nadu with not less than 50% of marks or at least 'B' grade under the grading system in the Master's degree examination or a Degree of equivalent standard; and

ii. B.T., or B.Ed., Degree of any University in the State of Tamil nadu or a Degree of equivalent standard.

**NOTE:** Candidates who do not possess the B.T., or B.Ed., Degree may also apply. But such candidates, if selected, should acquire the said qualification before appointment.

iii. Must have taken Tamil under Part-I or Part-II in the Intermediate or Pre-University Course or Higher Secondary Course.

**II. For teachers employed in recognised aided Secondary Schools:-**

Teaching experience in a recognised School for a period of not less than twelve years after acquiring the B.T. or B.Ed. degree.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதி முறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப் பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக் கூடிய 1.3.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை, அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.3.90/அன்றோ அல்லது அதற்குப்/பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft) யுடன் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்கு மாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR 509/MS/90/ad.bureau/3119





# தமிழீழத்தில் தமிழர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும்

## — முதல்வர் கலைஞர்

**26-2-90** அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இலங்கையிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எப் குழுவின் சார்பில் சென்னை வந்த பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களும் பேச்சுவார்த்தையிலே கலந்து கொண்டார். அதற்குப் பிறகு முதல்வர் கலைஞர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

"1983இல் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இனக்கலவரம் தோன்றி, இனப்படு கொலை நடைபெற்ற அந்தக் கொடுமையான நாட்களிலிருந்தே தமிழீழ விடுதலைப் போராளிகள் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, அந்த ஒற்றுமை ஏற்படுவதற்குத் தொடர்ந்து முயற்சிகளை எடுத்து வந்திருக்கின்றேன். ஆனால் தமிழ்நாட்டு அரசியல் நிலவரங்களினால் அந்த ஒற்றுமைச் சூழ்நிலை பாதிக்கப்பட்டதோடு, எனது முயற்சிக்கு மாறாகப் போராளிக் குழுக்களிடையே பிளவு மனப்பான்மையை உருவாக்குவதில் சில சுயநல ஸ்தாபனங்கள் கடந்த காலத்தில் வெற்றிபெற்று விட்டன. அதன் விளைவாகவும், இந்தியா இலங்கையுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி எல்லா அதிகாரங்களும் வடகிழக்கு மாநிலமான தமிழீழத்துக்கு இலங்கை அரசிடமிருந்து இந்திய அரசு வாங்கித் தந்துவிட்டதாக முன்பு பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்களே பல கூட்டங்களில் திட்டவட்டமாகக் கூறியதைத் தமிழ்நாட்டு மக்கள் நம்பிய தன் காரணமாகவும் - அவ்வாறு நம்ப வைக்கப்பட, வானொலியும், தொலைக்காட்சியும் நாள்தோறும் பயன்படுத்தப்பட்டதனாலும் இந்திய மக்களும், குறிப்பாகத் தமிழ்நாட்டு மக்களும் திசை திருப்பப்பட்டார்கள்.

ஆனால் இலங்கைத் தமிழீழத்தில் ஆயுதம் தேடல் என்ற முறையிலும், இந்திய சிப்பாய்களைத் தாக்குவது என்ற நிலையிலும் ஈழத் தமிழர்களும் இந்திய சிப்பாய்களும் ஆயிரக் கணக்கில் உயிரிழக்க நேரிட்டது. அங்கே அமைந்த வடகிழக்கு மாநில அரசும் திரு. வரதராஜப் பெருமாள் அவர்கள் தலைமையில் அதிகாரமற்ற ஒரு அரசாகவே இருந்திடும் நிலை ஏற்பட்டுள்ளது. 1983-இல் சிங்கள ராணுவத்திற்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் யுத்தம்; பிறகு இந்திய ராணுவத்திற்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் யுத்தம்; அதன் பிறகு தமிழ்ப் போராளிகளே ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு யுத்தம் நடத்துகின்ற நிலைமை; இதற்கிடையே பிரதமர் ராஜிவ் காந்தி அவர்கள் இந்திய அமைதிப் படை கடந்த டிசம்பர் 31ஆம் தேதிக்குள் வாபசாகி விடும் என்று அறிவித்து, அதன்படி வாரந்தோறும் ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் இலங்கையிலிருந்து வாபஸ் வாங்கவும் தொடங்கி விட்டார்கள். இந்தியாவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய முன்னணி அரசு வி.பி. சிங் தலைமையில் உருவானதும் டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் அமைதிப்படை வாபஸ் என்பதை மாற்றி, மார்ச் 31-ஆம் தேதிக்குள் என்று அறிவிக்கப்பட்டு, மேலும் மூன்று மாத கால அவகாசம் தரப்பட்டது.

இந்த அவகாசத்தைப் பயன்படுத்தி தமிழீழத்தில் நடைபெறும் தமிழ்ப் போராளிகளுக்கு இடையேயான மோதுதலைத் தவிர்க்கவும், தமிழர்கள் ரத்தம் சிந்துவதை நிறுத்தவும் போராளிகள் குழுக்களுடன் பேச்சு வார்த்தை நடத்தும் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டு, எல்லா போராளிக் குழுக்களுடனும் பலமுறை, பல நாட்கள், பல மணி நேரம் பேசிவிட்டேன்.

அண்மையில் நடந்த பேச்சுவார்த்தைகளில் டெல்லியிலிருந்து வந்த மத்திய அமைச்சர் முரசொலி மாறனும் கலந்து கொண்டார்.

பேச்சுவார்த்தை விவரங்கள் அவ்வப்போது பிரதமர் வி.பி. சிங் அவர்களுக்கும், வெளி உறவுத்துறை அமைச்சர் குஜ்ரால் அவர்களுக்கும் விரிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன. பேச்சுவார்த்தையின் இறுதிக் கட்டமாகத் தமிழீழத்தில் போராளிகளுக்கிடையே மோதுதலைத் தவிர்க்க, போர் நிறுத்தம் ஏற்படவும், விடுதலைப் புலிகள் (எல்.டி.டி.ஈ.) ஜனநாயக அரசியலுக்குத் திரும்பவும் நான் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் - எல்.டி.டி.ஈ. யினர் ஜனநாயக வழிக்கு வருவதற்கு வசதியாகத் தற்போதுள்ள வடகிழக்கு மாகாண சபையை வரதராஜப் பெருமாளே முன்வந்து கலைப்பதற்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்றும்- 3, 4 மாதங்களுக்குள் அங்கே தேர்தலை நடத்தி மக்கள் ஆதரவின் அடிப்படையில் வடகிழக்கு மாநிலத்தில் புதிய அரசு அமைக்க வேண்டுமென்றும் விடுதலைப்புலித் தலைவர்கள் திட்டவட்டமாகக் கூறினார்கள்.

அதுகுறித்து ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப்., ஈராஸ், டெலோ, பிளாட் ஆகிய இயக்கத் தலைவர்களை அழைத்துப் பேசினேன்.

எல்.டி.டி.ஈ.யின் கருத்துக்கு ஈராஸ், டெலோ, பிளாட் ஆகிய இயக்கங்கள் ஒப்புதல் தெரிவித்து அதனை நடைமுறைப் படுத்துவதற்கு சில யோசனைகளையும் தெரிவித்துள்ளன.

ஈ.என்.டி.எல்.எப். குழுவினர் இந்தப் பிரச்சினையில் ஈ.பி.ஆர்.எல்.எப். என்ன முடிவெடுக்கிறதோ அதனை ஏற்றுக் கொள்வதாகக் கூறிவிட்டனர்.

ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப். குழுவினர் இப்போது வடகிழக்கு மாகாண சபையைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்துவதால் மோதுதல்கள் ஏற்படும் என்றும் - எல்.டி.டி.ஈ.க்குத் தேவையான பிரதிநிதிகளை வடகிழக்கு மாகாண சபையில் தாங்களே தருவதாகவும் கூறினர்.

அதன் தொடர்பாக மீண்டும் மீண்டும் இரு சாராரிடமும் நான் பல மணி நேரம் பேசினேன்.

மலையகத் தமிழர்களுக்கான தனி மாநிலம் - மாகாண அரசுக்கு வெளிநாட்டுத் தொடர்பு போன்ற 19 நிபந்தனைகளை முன்வைத்து அவைகள் நிறைவேற்றப்பட்டால்



எத்தனை பிரதிநிதிகளை வேண்டுமானாலும் மாகாண சபையில் எல்.டி.டி.ஈ. எடுத்துக் கொள்ளட்டும், தேர்தல் வேண்டாம் என்பது தற்போது ஈ.பி.ஆர்.எல்.எப்., எடுத்து வைக்கும் வாதம்.

ஜனநாயக வழிக்கு வரும் நாங்கள், மக்கள் ஆதரவு எங்களுக்குப் பெரும்பான்மையாக இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்ட விரும்பும்போது, எதற்காக மாகாண சபையில் இடங்களை யாசகம் பெறவேண்டும் என்பது எல்.டி.டி.ஈ. எடுத்து வைக்கும் வாதம்.

இன்று என்னை இலங்கை வடகிழக்கு மாகாண அரசிலிருந்து சபாநாயகர் திரு ராஜகாரியர், தொழில் அமைச்சர் திரு அபுயூசுப், மற்றும் திருமதி ஸ்ரீதரன், கந்தசாமி ஆகிய மாநிலக் கவுன்சில் உறுப்பினர்களும் திரு சாந்தன் அவர்களும் சந்தித்துப் பேசினார்கள்.

திரு வரதராஜப் பெருமாளும், திரு பத்மநாபாவும் எனக்கு எழுதியுள்ள கடிதங்களையும் என்னிடம் அவர்கள் அளித்தார்கள். நான் முதலில் குறிப்பிட்ட 19 நிபந்தனைகளையும் இன்று வந்த பிரதிநிதிகள் தான் எனக்குத் தெரிவித்தார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எப். குழுவினரும், எல்.டி.டி.ஈ. குழுவினரும் தாங்கள் எடுத்து வைக்கும் வாதங்களில் பிடிவாதமாக இருப்பதாலும், ஈ.பி.ஆர்.எல்.எப். 19 புதிய நிபந்தனைகளை இப்போது புதிதாக வலியுறுத்துவதாலும் நான் விரும்புகிறபடி ஒற்றுமையானதும், அமைதியானதுமான சூழ்நிலை உடனடியாக விளைந்திட, தடங்கல் ஏற்பட்டுள்ளது.

**நிருபர்:** தடங்கலை நீக்க என்ன செய்யப் போகிறீர்கள்?

**முதல்வர்:** இப்போதுள்ள நிலைமையை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். மேலும் இந்தப் பிரச்சினையிலே இரு சாராருக்கும் அனைத்து நிலைமைகளையும் விளக்கிச் சொல்லியிருக்கிறேன். இதிலே நான் எந்தக் கருத்தையும் யார் மீதும் திணிக்க விரும்பவில்லை. நான் திணிக்க விரும்புகின்ற கருத்து **தமிழீழத்தில் தமிழர்கள் ரத்தம் சிந்துவது நிறுத்தப்பட வேண்டும்.** இதிலே எந்தக் குழுவினர் மீதும் எந்தக் குழுவினர் கருத்தையும் நான் திணிக்க விரும்பவில்லை.

**நிருபர்:** இந்திய அமைதிப்படை திரும்புவது என்னவாகும்?

**முதல்வர்:** அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி முன்பே அமைதிப்படை திரும்பும் என்று சொல்லிவிட்டார். அதன்படி திரும்பி வருவதைத் தவிர வேறு வழியில்லை. அதனால் தான் அமைதிப்படை திரும்பி வந்த பிறகு, தமிழீழம் ரண களமாகவும் ரத்தம் சிந்தும் பூமியாகவும் ஆகிவிடக் கூடாது என்பதற்காகத் தான் நாங்கள் இவ்வளவு முயற்சிகளையும் மேற்கொண்டோம்.

**நிருபர்:** 19 நிபந்தனைகள் என்ன என்ன? என்ன எழுதியிருக்கிறார்கள்?

**முதல்வர்:** வரதராஜப்பெருமாளும், பத்மநாபா அவர்களும் எழுதிய கடிதம் வருமாறு:

“அன்பும் பண்பும் நிறைந்த தமிழக முதல்வர் அவர்களுக்கு,

ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைக் கரிசனையுடனும், ஆழ்ந்த அனுதாபத்துடனும் அணுகும் தங்கள் நற்பண்பை மிகவும் நேசத்துடன் வரவேற்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தங்களின் கூர்மையான கவனத்திற்கும்

மேலான அவதானத்திற்கும், இன்று ஈழத் தமிழர் முகம் கொடுக்க நேர்ந்திருக்கும் பிரச்சினைகளுக்குத் தான் நல்லதென சிந்திக்கும் தீர்வுகளை, இக்கடிதத்துடன் பிரேரணை மூலமாக முன் வைத்திருக்கிறது. இப்பிரேரணையுடன் எமது உயர்மட்ட தூதுக் குழுவொன்று தங்களை நேரடியாகச் சந்தித்து, கலந்துரையாட வருகின்றது. அன்புகூர்ந்து தாங்கள் தங்களது திடமான கருத்தினை வெளியிட்டு ஈழத்தமிழர் சமாதானமாகவும், நிம்மதியுடனும் வாழ வழி செய்வீர்கள் என அந்தரங்க சுத்தியுடன் எதிர்பார்க்கிறோம்.''

இவ்வாறு எழுதிவிட்டு அவர்கள் நிபந்தனைகளை எழுதியிருக்கிறார்கள்.

அவர்கள் நிபந்தனையிலே 1957-ஆம் ஆண்டு பண்டார நாயகாவிலிருந்து ஆரம்பிக்கின்றார்கள். மாகாண அரசாங்கம் வெளி நாடுகளுடனோ, அல்லது வெளி நாட்டு நிறுவனங்களுடனோ முதலீடுகள், நன்கொடைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்பது போன்ற நிபந்தனைகள் அதிலே உள்ளன.

இதிலே கவனிக்க வேண்டியது இரண்டு மூன்று மாதங்களாக பேச்சுவார்த்தை நடப்பதால் ஓரளவு மோதுதல் குறைந்திருக்கின்றது. சாவு எண்ணிக்கையும் குறைந்திருக்கின்றது என்பதையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

**நிருபர்:** பேச்சுவார்த்தை தோல்வி என்று சொல்லலாமா?

**முதல்வர்:** தடங்கல் ஏற்பட்டுள்ளது என்று தான் சொன்னேன். தொலைக்காட்சியிலே கூட தடங்கல் ஏற்பட்டால் பிறகு நிகழ்ச்சிகள் தொடருவதில்லையா? இதிலே யாராவது ஒருவர் விட்டுக்கொடுக்க முன் வர வேண்டும். பேச்சுவார்த்தை வெற்றியா தோல்வியா என்பதல்ல. அங்கேயுள்ள **தமிழர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும்** என்பது தான் எங்களுடைய கவலை.

**நிருபர்:** விடுதலைப் புலித் தலைவர்கள் பிரபாகரன், மாத்தையா போன்றவர்களைப் பார்த்துப் பேசுவீர்களா?

**முதல்வர்:** பாலசிங்கமும், யோகியும், பிரபாகரன், மாத்தையா போன்ற தலைவர்களிடம் பேசிவிட்டுத் தான் என்னிடம் வந்து பேசினார்கள். நால்வரும் ஒரே மாதிரியாகச் சிந்தித்து எடுத்த கருத்தைத் தான் தெரிவித்தார்கள். இதிலே ஒரு இறுதி முடிவு எடுக்கின்ற நிலைமை வந்தால் அவர்களுடனும் பேசலாம். அதில் ஒன்றும் இடைஞ்சல் இல்லை.

***—மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் (26.2.90) செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து.***

---

# நூல் நயம்

## வைரமுத்து வரை

**ஆசிரியர்:**
டாக்டர் சு. சண்முக சுந்தரம்

**வெளியீடு:**
காவியா புக்ஸ்,
16, 17வது குறுக்கு,
இந்திரா நகர், 2வது நிலை
பெங்களூர்-560 038.

மதுர பாஸ்கர தாஸ் முதல் வைரமுத்து வரை ஏறக்குறைய 600க்கு மேற்பட்ட திரைப்படப் பாடலாசிரியர்களின் திறமை, பெருமை குறித்தும் சாதனைகள் குறித்தும் எழுதப்பட்டுள்ள அரிய நூல் இது.

'மதுர பாஸ்கர தாஸ் முதல் வைரமுத்து வரை' என்றே நூலுக்குத் தலைப்புச் சூட்டியிருக்கலாம். இன்றைய கவிஞருக்கு இனிய வரவேற்பை நல்கும் நூலாசிரியர் சென்ற தலைமுறையைச் சிறப்பிப்பதில் தவறில்லையே!

இந்திய சரித்திரத்தில் ஆங்கிலேயர் காலத்தைக் குறித்து 1949ல் தொடர்கட்டுரை எழுதிய ஆனந்த விகடன் 'கிளைவ் முதல் ராஜாஜி வரை' என்றே தலைப்புச் சூட்டியிருந்தது. முதல் இருந்தால்தான் வரை என்பதற்குப் பொருள் இருக்க முடியும்.

இந்நூலில் சில பாடலாசிரியர்களின் வரலாறும் சாதனைகளும் விரிவாக உள்ளன. சிலரது சாதனைகள் அரைப் பக்கத்தில் முடிந்து விடுகின்றன. இதற்குக் காரணம், சாதனையாளர்களின் வரலாறுகள் தானே தவிர நூலாசிரியரின் எழுத்தாற்றலல்ல!

ஆசிரியரின் கடும் உழைப்புக்குக் கட்டியங் கூறுகிறது இந்நூல். ஒரு மாளிகையைக் கறுப்புக் கோடுகளால் ஒரு நொடியில் வரைந்து காட்டிவிட முடியும். ஆனால் அதனை மெய்யாகவே உருவாக்குவதென்பது எளிதான செயலன்று. இந்நூலும் உருவாக்கப்பட்ட ஒரு மாளிகை போல் திகழ்கிறது.

என்றாலும் இம்மாளிகையில் ஒரு சில குறைபாடுகள் இல்லாமல் இல்லை. ஒருவர் எழுதிய பாடல், வேறொருவர் எழுதியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பாடலாசிரியரைக் குறித்து இந்நூலிற்குத் தேவை இல்லாத தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர்த்திருக்கலாம்.

நூல் முழுதும் வைரமுத்து ஒளி வீசித் திகழ்கிறார். அவரது அணுகுமுறை - அவரது திறமை - பிற கவிஞரிடம் உள்ள ஈடுபாடு - தொடர்பு - மதிப்பீடு - ஆகியவை நன்கு விளக்கப்பட்டுள்ளன இந் நூலில்.

சில இசையமைப்பாளர்களும் உரிய விதத்தில் விமர்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மொத்தத்தில் இந்நூல் இமாலயச் சாதனையாக விளங்குகிறது.

— எஸ்.எஸ். சுந்தரம்

**TNPSC**

## விளம்பர எண்: 8/90

கீழ்க்காணும் பதவிகளுக்கு 2.4.90 அன்று மாலை 5.45 மணி வரையில் விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. மாதச் சம்பளம், வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி ஆகியன பதவிகளின் பெயர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. (நியமன ஒதுக்கீட்டு விதி இப்பதவிகளுக்குப் பொருந்தாது):-

**1. ஒரு ஒளிப்பதிவாளர் (Cameraman)**

(தமிழ்நாடு பொதுச் சார்நிலைப்பணி) தமிழ்நாடு திரைப்படப் பிரிவைச் சார்ந்தது. ரூ.1640-2900/-

**வயது:** 1.7.1990 அன்று 35-க்குக் குறைவாக.

**தகுதி:** அ. (i) ஸ்டேட்போர்டு ஆஃப் டெக்னிகல் எஜுகேஷன் அண்டு ட்ரெய்னிங், தமிழ்நாடு, சென்னை அவர்களால் வழங்கப்பட்ட சினிமாடோகிராபியில் ஒரு பட்டயம்,

மற்றும்

(ii) ஃபீட்சர் (feature) ஃபிலிம்ஸ் அல்லது டாக்குமெண்டரி ஃபிலிம்ஸ் அல்லது நியூஸ்ரீல் ஃபிலிம்ஸ் தயாரிப்பில் ஒளிப்பதிவாளராக மூன்று ஆண்டுகளுக்குக் குறைவாகச் செயல்வழி அனுபவம்.

அல்லது

ஆ. (i) குறைந்தபட்ச பொதுக் கல்வித்தகுதி மற்றும்

(ii) ஒளிப்பதிவாளராக ஏழு ஆண்டுகளுக்குக் குறையாத செயல்வழி அனுபவம்

**2. ஒரு இளநிலை வேதியியலர் (Junior Chemist)**

(தமிழ்நாடு தொழில் சார்நிலைப்பணி) புவியியல் மற்றும் சுரங்கத் துறையைச் சார்ந்தது. ரூ.1400-2600/-

**வயது:** 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக.

**தகுதி:** வேதியியலின் ஏதாவது ஒரு பிரிவில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பு முதுநிலைப் பட்டம்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கோரிக்கைகளிலும் விண்ணப்பத்திலும் பதவியின் பெயரைத் தெளிவாகப் பெரிய எழுத்துக்களில் குறிப்பிட வேண்டும்.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதி முறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும் நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.3.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட 10/-ரூபாய்க்கான (பத்து ரூபாய்) சென்னை, அண்ணாசாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.3.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப் பட்ட பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-600006-ல் செலுத்தத்தக்க ரூ.10/-க்கான ''கேட்புக் காசோலை'' (Account Payee Demand Draft)யுடனும், சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

குறிப்பு: ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே விண்ணப்பப் படிவ விலையைச் (ரூ.10/-) செலுத்தி, தனித்தனியே கோரிக்கை மனுவைச் சமர்ப்பிக்க வேண்டும்.

DIPR 507/MS/90/MCS

# உங்கள் குறைகளைச் சொல்லி ஆறுதல் பெற ஒரு துணை



பதினான்கு வயதுப் பெண் ஒருத்தி பருவமடைந்தபின், அதைத் தனக்கு வந்த தீராத நோய் என்று கருதி, பய உணர்ச்சி காரணமாகத் தற்கொலை செய்து கொள்கிறாள்.

இந்தச் செய்தி அந்தப் பகுதி முழுவதும் பரவுகிறது.

இந்தத் துயர நிகழ்ச்சி 'சார்டு வாரா' என்னும் பாதிரியாரின் மனத்தை வருத்தியிருக்க வேண்டும்.

அந்த இளம் வயதுப் பெண்ணுக்கு என்ன பிரச்சினை இருந்திருக்கும்? அவள் மனத்தில் அலை பாய்ந்த உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ள யாரும் இல்லையா? இது போன்ற நிலைமை நீடித்தால் சமுதாயம் என்ன ஆகும்?

உடனே அந்தப் பாதிரியாருக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

மனம் விட்டுப் பேசினால், மன பாரத்தைக் குறைத்து எந்தப் பிரச்சினையையும் சமாளிக்க உதவலாம். மற்றவர் குறைகளைக் கேட்டு ஆறுதல் கூறுவதும், தன்னால் ஆனவற்றைச் செய்வதும் ஒருவகைத் தொண்டு தானே!

மறுநாள் ஒரு விளம்பரம் செய்திருந்தார் அவர். அதில், உங்களுக்குப் பிரச்சினையா? மனம் விட்டுப் பேச, இந்தத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள் என்றும், அல்லது மாதாகோவிலில் இந்த நேரத்தில் என்னை வந்து சந்தியுங்கள் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பிறகு பலர் வர ஆரம்பித்தார்கள். அந்தத் துயர நிகழ்ச்சிக்குப் பிறகு Be Friend International என்னும் ஓர் அமைப்பே தோன்றியது.

இது நடந்தது 1953 ஆம் ஆண்டு, இலண்டனில்!

அன்று ஊன்றிய இந்த விதை தான் இன்று ஆலமரமாக வளர்ந்து- உலகமெங்கும் பல விழுதுகளைப் பரவவிட்டிருக்கிறது. அதன் ஒரு விழுதுதான் சென்னையிலுள்ள 'சிநேகா' என்னும் தொண்டு நிறுவனம்.

**'சிநேகா' என்ன செய்கிறது?'**

'சென்னை இராயப்பேட்டை, எண்.4, லாயிட்ஸ் சந்து' முகவரியிலுள்ள 'சிநேகா'வுக்குள் நுழைகிறோம்.

''Please come in, Can I help you?'' என்ற 'போர்டு' நம் கண்களில் படுகிறது.

உள்ளே ஒருவர் தம் பிரச்சினையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்ததையும், இந்த அமைப்பின் தொண்டர் ஒருவர் அவர் கூறுவதை அன்புடனும் ஆதரவுடனும் கேட்டுக் கொண்டிருந்ததையும் பார்க்க முடிந்தது.

ஒரு மனிதன் எப்போது தற்கொலை செய்து கொள்கிறான் என்று யாராலும் உறுதியாகக் கூற முடியாது.

சந்தர்ப்பம், சூழ்நிலை, சமுதாயப் பிரச்சினை இவைகளால், தான் பாதிக்கப்படும்போது ஏற்படுகிற மனக்கவலை, சிக்கல்கள்- ஒருவனைத் தற்கொலைக்குத் தூண்டலாம்.

இது மனநோயாளிக்கு மட்டுமல்ல, சாதாரணமானவர்களுக்கும் தோன்றுகிற எண்ணம்தான்.

பொதுவாக, 80 சதவிகிதத்தினர் தற்கொலை செய்து கொள்வது பற்றி முன்பே தம் எண்ணத்தைச் சொல்லிவிடுகிறார்கள். சாகிற எண்ணம் அவர்களுக்கு எப்போதும்

இல்லை. ஆனால், அதைப்பற்றி அவர்கள் - சொல்வதைக் கேட்கத் தான் ஆள் இல்லை. அந்த நேரத்தில் அவர்கள் மனக்குறை அன்புடனும் ஆதரவுடனும் செவிமடுக்கப்பட்டிருந்தால், ஒரு தற்கொலை - தவிர்க்கப்பட்டிருக்கலாம். அதாவது அவர்கள் தங்கள் நிலையைச் சொல்கிறபோது, 'இவர்களுக்கு வேறு வேலை இல்லை' என்று நாம் அலட்சியம் செய்துவிடுகிறோம்.

தற்கொலை முயற்சி என்பது என்ன?

தற்கொலை முயற்சி என்பது இரட்டை மனநிலையில் - அதாவது வாழவேண்டும் என்று ஒருபுறம் ஆசை, சாகவேண்டும் என்று ஒரு மனநிலை. இந்நிலையில் தற்கொலை முயற்சி என்பது உதவி கேட்கும் குரலாக அமைகிறது.

ஆம். தற்கொலையை நம்மால் தவிர்க்க முடியும்.

தீராத வியாதி

தனிமைத் துயர்

வீட்டில் சண்டை, சச்சரவு

திருமண முறிவு

வரதட்சிணைக் கொடுமை

மனச்சோர்வு

பெற்றோர்களின் கொடுமை

ஊனம்

போதை மருந்துக்கு அடிமை

தங்கள் நிலைமையை மற்றவர்களிடம் சொல்லத் தயக்கம்

நெருங்கியவர்களின் மரணத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமை

பொருளாதாரப் பிரச்சினை

இந்த நிலைமைகளுக்கெல்லாம் ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லை; இளையோர் முதியோர் என்கிற வயதுப் பாகுபாடும் இல்லை.

இந்தச் சூழ்நிலையில் - 'ஏன் வாழ வேண்டும்?' என்கிற விரக்தி ஏற்பட்டுள்ள நிலையில் - அவர்கள் மனத்தில் பொங்கி வழியும் மனக்குமுறல்களுக்கு - மனச்சுமைக்கு ஒரு வடிகால் தேவை. அந்த வடிகாலாக அமைகிறது - 'சிநேகா'.

இந்த நிறுவனத்தில் 45 தொண்டர்கள் இருக்கிறார்கள். காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை இந்தத் தொண்டர்கள் 'ஷிப்டு' முறையில் வந்து தொண்டாற்றுகிறார்கள்.

நமக்குள்ள பிரச்சினைகளை - சிக்கல்களை இவர்களிடையே பகிர்ந்து கொள்ள முடியும். எப்படி?

உங்கள் மனப்பாரத்தை நேரிலோ, தொலைபேசி மூலமோ, கடிதம் மூலமோ தொடர்பு கொண்டு மனச்சுமையைப் பகிர்ந்து கொள்ளலாம்.

இந்த நிறுவனத்தில் இதுவரை ஏழாயிரத்துக்கும் மேற்பட்டோர் தொடர்புகொண்டு, தங்கள் குறைகளைப் பகிர்ந்து கொண்டதுடன் உரிய தீர்வும் பெற்றிருக்கிறார்கள்.

'சிநேகா' - உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களைகிறது.

பலருக்கு மனநிம்மதி அளித்து வருகிறது.

பலரை மரணப்பிடியிலிருந்து காப்பாற்றியிருக்கிறது.

கண்ணீருடன் உள்ளே நுழைந்தவர்கள், தமது மனச்சுமையை இறக்கி விட்டு, தெளிந்த மனதுடன் வெளியே வருகிறார்கள்.

தங்கள் தொண்டுகளைப் பலரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற பரந்த நோக்கில், பேருந்துகளில் இவர்களது விளம்பரம் காணப்படுகிறது. நாடகங்கள் மூலமாகவும் இவர்கள் சமுதாயப் பிரச்சினையைச் சித்தரித்து வருகிறார்கள். 'சிநேகா' ஆதரவுடன் பல்லவன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் மத்தியில், அந்தத் தொழிலாளர்களே நடத்திய நாடகம் நல்ல பலனைத் தந்திருக்கிறது. அவர்கள் பணியைப் பற்றி ஏனைய மக்களும் தெரிந்து உதவி பெற ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு நாடகமும் நடத்தப்பட்டது.

பிரச்சினையை இவர்கள் அணுகும் முறை சிறப்பானது. தொலைபேசியில் பேசினால்கூட கொஞ்சங்கூடச் சலிப்பில்லாமல் அதைப் பொறுமையாகக் கேட்பதும், நேரில் வந்து எவ்வளவு ஆவேசத்துடன் அவர்களது உள்ளக் குமுறலை எரிமலையாய் வெடித்தாலும் அதைத் தவிர்க்கும் வகையில் தன்மையாகப் பேசுவதும், இவர்களுக்கு இயல்பாகவே அமைந்துள்ளது. இவர்களிடம் தொடர்பு கொள்பவர்களுக்கு மனோதத்துவ ஆலோசனை தேவைப்பட்டால் அவர்கள் மனோதத்துவ நிபுணரிடம் தொடர்பு கொள்ள உதவுகிறார்கள்.

யார் எந்தப் பிரச்சினையுடன் வந்தாலும், அது இரகசியமாகவே இங்கு பாதுகாக்கப்படுகிறது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்த நிறுவனத்தைப் போலவே பல அமைப்புகள் உள்ளன.

இந்தியாவில் டெல்லி, பம்பாய், பெங்களூர், ஐதராபாத், திருவனந்தபுரம் ஆகிய மாநிலங்களில் பல்வேறு பெயர்களில் இம்மாதிரியான தொண்டு நிறுவனங்கள் உள்ளன.

டாக்டர் லட்சுமிவிஜயகுமார் இதன் இயக்குநர். இந்த நிறுவனத்தின் செயலாளர் திருமதி சரோஜா சுப்பராமன் அவர்களைச் சந்தித்தபோது, அவர் கூறினார்—

''மற்றவர்கள் மனத்தைப் புரிந்து கொள்ளுங்கள்; எப்படிப்பட்டதாக இருப்பினும், அவர்கள் கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். யாருடனும் சிநேக பாவத்துடன் நடந்து கொள்ளுங்கள். பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாவிட்டாலும் பிரச்சினையின் பாதிப்பைப் பரிவான - செவிமடுப்பால் குறைக்கலாம். யாரையும் அலட்சியம் செய்யாதீர்கள். உங்கள் குறைகளைச் சொல்லி ஆறுதல் பெற ஒரு துணையாக 'சிநேகா' இருக்கிறது. 'சிநேகா'வுடன் தொடர்பு கொள்ள தொலைபேசி எண்: 473456-ஐப் பயன்படுத்திக் கொள்ளலாம்'' என்கிறார் மகிழ்ச்சியுடன்.

—பேட்டி: பி.வி. கிரி.



# கன்னியாகுமரி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

பொருளாதார வசதி இன்மையால் மண வயதடைந்தும் கூட, திருமணமாகாமல், தங்கள் வாழ்வு மலராதா என்று ஏங்கிக் கிடந்த ஏழை, எளிய பெண்களின் துயரத்தினைத் துடைக்க அரசு அளித்த நல்லதோர் திட்டம்தான் 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம்'. இத்திட்டத்தின் கீழ்,ஏழைப் பெண்களுக்குத் திருமணம் செய்வதற்கு அரசு தலா ரூ. 5,000 வீதம் இலவசமாகத் திருமண உதவித் தொகை வழங்கி வருகிறது. இவ்வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்த ஆண்டில் 388 பெண்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளார்கள். இத்திட்டத்திற்குச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 19.40 இலட்சம் ஆகும்.

'கருவுற்ற ஏழைப் பெண்கள் கண் கலங்கக்கூடாது, அவர்கள் மகிழ்வுடன் மக்கட்பேறு பெற்று மனநிறைவு அடைய வேண்டும்' என்ற மிக நல்ல நோக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட உயரிய திட்டம்தான் டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம். இதன் கீழ் இந்த மாவட்டத்தில் கருவுற்ற பெண்கள் 1,428 பேர் இந்த ஆண்டு பயன் அடைந்துள்ளார்கள். இதற்குச் செலவிடப்பட்ட தொகை ரூ. 2,85,600 ஆகும்.

'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே இங்கு வேரிற் பழுத்த பலா' என்று பாவேந்தர் பாரதிதாசன் நமது சமுதாயத்தில் இளம் கைம்பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் பற்றிப் பாடிய அந்த நாள் நிலையினை அரசு-இந்த நாளில் மாற்றிக் கொண்டு வந்த சீர்மிகு 'விதவைகள் மறுமணத் திட்டத்தின்' கீழ், இம் மாவட்ட ஓராண்டு ஒதுக்கீடான ரூ. 30,000, ஆறு கைம்பெண்கள் பயன் பெற வழங்கப்பட்டுள்ளது.

ஏழை, எளிய, திக்கற்ற கைம் பெண்களின் மகள்கள் மங்களகரமாக மணவாழ்வு பெற்று வாழ வழி வகுக்கும் வகையில் விதவைகளின் மகள் திருமணத் திட்டத்தின்கீழ், இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட உதவித்தொகை ரூ. 45,000, 45 இளம் பெண்கள். மணவாழ்வு பெற இந்த ஓராண்டுக் காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மாதம் ரூ.300-க்குக் குறைவாக வருமானமுள்ள ஏழைக் குடும்பத்தினருக்குத் தலா 5 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் பயன்பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரரின் எண்ணிக்கை 2,78,222. இந்த ஆண்டில் ஐந்து முறைகள் வழங்கப்பட்ட இலவச அரிசியின் மொத்த அளவு 6,760 மெட்ரிக் டன் ஆகும்.

அதன் மதிப்பு ரூ. 1 கோடி 19 இலட்சத்து 11 ஆயிரத்து 168 ஆகும்.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின்கீழ், மாண்புமிகு முதல்வரின் பிறந்த நாளாகிய 3-6-1989 முதல் மாதம் இருமுறை சத்துணவுடன் முட்டையும் வழங்கப்படுகிறது. இதனால் இம்மாவட்டத்தில் 2,71,000 குழந்தைகள் பயனடைகிறார்கள்.

விபத்து நிவாரணத் திட்டத்தின் மூலம் 6 பேர் பயனடைந்தனர். அவர்களுக்கு மொத்தம் ரூ. 33,000 வழங்கப்பட்டது.

துயர் துடைப்புத் திட்டத்தின் கீழ் 213 பேருக்கு ரூ. 4.26 இலட்சம் வழங்கப்பட்டது.

1989-ஆம் ஆண்டில் 544 பேருக்கு முதியோர் ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் தொழில் வளர, தொழில் வினைஞர்கள் வாழ்வு மலர, மாவட்டத் தொழில் மையத்தின் வாயிலாக 25 நிரந்தர சிறு தொழில் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, 714 நபர்கள் வேலை வாய்ப்புப் பெற்றனர். குடிசைத் தொழில்கள் 43-க்குப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, 125 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஊரகத் தொழில் கடனாக ரூ. 2,10,000 வழங்கப்பட்டுள்ளது.

ஊரகக் கைவினைப் பயிற்சித் திட்டம் மற்றும் மின் மானியத் திட்டம் ஆகியவை நல்ல முறையில் செயல்படுத்தப்படுகின்றன. ஆரல் வாய்மொழியில் கூட்டுறவுத் தொழிற்பேட்டை ஒன்று அமைப்பதற்கு 10 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுப் பணிகள் தொடங்க, துரித நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மக்களின் அடிப்படை வசதிகளைப் பெருக்க, அரசு அனைத்து வழிகளிலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கிராமக் குடிநீர்த் திட்டப் பராமரிப்பில், குமரி மாவட்டத்தில் தற்போது 1,614 ஆழ்குழாய் அடிபம்புகள் செயல்பட்டு வருகின்றன. 388 விசைப்பம்புகள் குடிநீர்த் திட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## விஞ்ஞானத்தை வளர்ப்போம்! விளையும் மாசைத் தவிர்ப்போம்!

Pollution Control ஐ மாசுக் கட்டுப்பாடு என்று நாம் தமிழிலே மொழிபெயர்த்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். 'மாசு' என்றால் தமிழில் பல்வேறு பொருள் உண்டு. ஆனால் எல்லாப் பொருளும் ஒரு அடிப்படைத் தன்மை வாய்ந்தது. மாசு என்பது - ஒருவர்மீது படிகின்ற 'தூசு' - அதைக் கூட மாசு என்றுதான் சொல்கிறோம். ஒரு மனிதனுடைய உள்ளத்தில் உருவாகின்ற தவறான எண்ணங்கள்-அந்த எண்ணங்களின் காரணமாக ஏற்படும் விளைவுகள் - அவற்றையும் மாசு என்றுதான் சொல்கிறோம்.

எனவேதான் வடலூர் வள்ளலார் அவர்கள் 'மாசற்ற வாழ்வு நாம் வாழ வேண்டும்' என்று சொல்லியிருக்கின்றார். அவர் ஆன்மீக வழியிலே-தத்துவத் துறையிலே அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

—முதல்வர் கலைஞர்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகளின் மூலம் மாணவ, மாணவியர் உதவித் தொகை பெற அவர்களது, பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 6,000 ஆக இருந்தது. அது ரூ. 12,000 ஆக இந்த ஆண்டிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர் பட்டப்படிப்பு வரையிலும் இலவசமாகக் கல்வி பயில அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன் பிரகாரம் இம்மாவட்டத்தில், கீழ்க்கண்டவாறு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் பயன் அடைந்துள்ளனர்.

இதேபோன்று தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்க அவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானத்தை ரூ. 12,000-த்திலிருந்து ரூ. 24,000 ஆக உயர்த்தி அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சார்ந்த 10,600 மாணவ, மாணவியர் இம்மாவட்டத்தில் பயன் அடைகிறார்கள். இதற்காகும் செலவுத் தொகை ரூ. 15,35,000 ஆகும்.

ஏழை எளிய மக்களும் பண்டிகை நாட்களைக் குறிப்பாகக் கொண்டாடும் வகையில் இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை அரசு அறிவித்து, அதனைச் செயல்படுத்தி

**பிற்படுத்தப்பட்டோர் உதவித்தொகை:**

| | | |
|---|---|---|
| உயர்நிலைப்பள்ளி வரை பயன் அடைந்த மாணவ மாணவியர் | ... | 7080 |
| வழங்கப்பட்ட தொகை | ... | ரூ. 1,55,971 |
| மேல்நிலை மற்றும் பட்டப்படிப்பு வரை பயனடைந்த மாணவ மாணவிகள் | ... | 10,522 |
| வழங்கப்பட்ட தொகை | ... | ரூ. 21,57,146 |

**மிகப் பிற்படுத்தப்பட்டோர் உதவித்தொகை**

| | | |
|---|---|---|
| உயர்நிலைப்பள்ளி வரை பயனடைந்த மாணவ, மாணவியர் | ... | 788 |
| வழங்கப்பட்ட தொகை | ... | ரூ. 15,877 |
| மேல்நிலை மற்றும் பட்டப்படிப்பு வரை பயனடைந்த மாணவ மாணவியர்கள் | ... | 1,001 |
| வழங்கப்பட்ட தொகை | ... | ரூ. 2,10,815 |

**இலவசக்கல்வி:**

| | | |
|---|---|---|
| மேல்நிலைப்பள்ளிப் படிப்பில் பயனடைந்த மாணவ, மாணவியர் | ... | 205 |
| வழங்கப்பட்ட தொகை | ... | ரூ. 34,014 |

வருகிறது. தீபாவளித் திருநாளை முன்னிட்டும், பொங்கல் பண்டிகையை முன்னிட்டும் இலவச வேட்டி, சேலைகள் மொத்தம் 5,28,752 பேர்களுக்கு வழங்கப்பட்டன.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நமது அரசின் ஊரக வளர்ச்சிப் பணிகளை முறையாகச் செயல்படுத்தியதால் கடந்த ஓராண்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்த 9,824 குடும்பங்கள், அரசின் கடன் மற்றும் மானியமாக ரூ. 461.72 இலட்சம் நிதியுதவி பெற்றுப் பொருளாதார மேம்பாடு அடைந்துள்ளன. ஊர்ப்புற இளைஞர்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 315 ஆண், பெண் இருபால் இளைஞர்கள் தொழிற் பயிற்சி பெற்றுப் பயன் பெற்றுள்ளனர்.

மேலும், மாபெரும் விவசாய உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் கீழ், கடந்த ஓராண்டில் ரூ. 49.23 இலட்சம் அரசு மானியமாகவும், கடனாகவும் பெற்று, 125 ஊர்ப்புற வேளாண் பெருமக்கள் பயனடைந்துள்ளனர்.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஊர்ப்புறங்களில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து அந்தந்த ஊராட்சிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து, நிலையான சொத்துக்களை ஏற்படுத்தி, இவ்வாண்டு ரூ. 349.035 இலட்சம் செலவிடப்படுகிறது. 11,30,000 மனித உழைப்பு நாட்கள் ஏற்படுத்த அரசு இலக்கு நிர்ணயித்ததில் இம்மாவட்டம் 12,76,000 மனித உழைப்பு நாட்களை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், 1512 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 1213 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதம் உள்ள 299 பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

ஒளிமயமான எதிர்காலத்தை, தொழில் வளத்தைக் காணும் பொற்காலத் தமிழகத்தை உருவாக்கிட, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது.

-த. இளங்கோவன்,
செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

## மீண்டும் வாரத்திற்கு 5 நாள் அலுவல்

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் கலைஞர் அவர்களை ஜேக்டீ-அரசு ஊழியர் இயக்கங்களின் பேரமைப்பின் சார்பில் ஆட்சிக் குழு அமைப்பாளர் திரு. அ. மயில்சாமி, மற்றும் உறுப்பினர்கள் திரு. க. மீனாட்சி-சுந்தரம், திரு. எம்.ஆர். அப்பன், திரு. ச. அப்துல் மஜீத் மற்றும் பலரும் 7-2-90 அன்று சந்தித்துப் பல்வேறு கோரிக்கைகள் குறித்து விவாதித்தனர்.

தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத்தின் சார்பில் திரு. நமசிவாயம் தலைமையில் அதனுடைய நிர்வாகிகளும் முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்தனர்.

இதற்கு முன்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் திரு. சிவ. இளங்கோ அவர்களும், தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி அண்டு டி) பிரிவின் சார்பில் திரு. கே.கே. மோகன் அவர்களும், தமிழ் நாடு அரசு அலுவலர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. தேவநாதன் அவர்களும் சந்தித்துக் கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள்.

இந்தப் பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் அறிவிக்கப்பட்டிருப்பதாவது:

(1) தேர்வு நிலை/சிறப்பு நிலை ஊதிய விகிதங்கள் அடுத்த உயர் பதவிக்குரிய ஊதிய விகிதங்களாக அமைக்க வேண்டும், தேர்வு நிலை/சிறப்பு நிலைச் சலுகைகள் முன்போல் தொடர வேண்டும், என்ற கோரிக்கை கொள்கை அளவில் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும், அதனுடைய விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டு வரவு செலவுத் திட்டத்தின்போது அறிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

(2) குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது (1988) நடத்தப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டக் காலத்தில் பீடித்தம் செய்யப்பட்ட 16 முதல் 31 நாட்கள் வரை ஈட்டிய விடுப்பு ஆசிரியர், அரசு ஊழியர் கணக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும், அதேபோல 1983-இல் நடந்த ஆசிரியர் மன்றப் பேராட்டத்தையொட்டிய இதேவிதக் கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

(3) வாரத்தில் ஐந்து நாட்கள் வேலை என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு-இப்போது காலை 10-00 மணி முதல் 5-30 மணி வரை என்றிருக்கும் வேலை நேரம் காலை 9-45 மணி முதல் மாலை 5-45 மணி வரை என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணி நேரம் 11-2-90 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது

மற்ற கோரிக்கைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும் என்று சொல்லப்பட்டு உள்ளது.

(தமிழக அரசு, செய்தி வெளியீடு)

## THE HOSUR SEED CENTRE
18, RAMAR KOIL STREET, HOSUR 635 109.

**Marketing for West Coast Rasayan**

**International Pvt. Ltd. Bombay.**

## Use

| | |
|---|---|
| **Phytolacin 84** | on Grapes and Potato |
| **Bactrosan** | Bactricide |
| **Neemant** | Anti feedent and Anti Repellant |
| **Neemank 15 G** | Nematicide |
| **Photozyme** | A cytokinim Farmulation |
| | Growth Promotion |

to get Bumper yields on your valuable crops.

**கோயம்புத்தூர்**

**மாவட்டத்தில் ...**

# 100



# ஏழைப் பெண்களுக்கு

# திருமண நிதியுதவி

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்:**

**கோ**வை மாவட்டத்தில், கடந்த நவம்பர் மாதம் பண்டித நேரு பிறந்த நாளில், தமிழக அரசின் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், 100 ஏழை மணமக்களுக்குத் தலா ரூ.5,000 நிதி வழங்கப்பட்டதுடன், இலவசமாகத் திருமணமும் செய்து வைக்கப்பட்டது.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமன், இ.ஆ.ப. அவர்கள் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். இதற்கான விழா கோவை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்றது. 100 மணப்பெண்களுக்குமாக ஒரே நாளில் ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டது. இதில் மூன்று பெண்கள் விதவைகள் ஆவார்கள். பல்வேறு சமூக நல சங்கங்கள் சார்பில் மணமக்களுக்கு இலவசமாக வேட்டி சேலைகளும் இனிப்பும் வழங்கப்பட்டன.

திருமணம் செய்து கொண்ட ஒரு சிலரைப் பேட்டி கண்டதில், இது ''ஏழையரை வாழ வைக்கும் ஏற்றமிகு திட்டம்'' என்று கருத்து தெரிவித்தார்கள்.



தீண்டாமை ஒழிய வேண்டுமானால், சாதி ஒழிய வேண்டும்.



மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.

— தந்தை பெரியார்

## கோவை மாவட்டம் பல்லடத்தில் இலவச சட்ட உதவி முகாம்

பல்லடம் சட்ட உதவி ஆலோசனை மையத்தினர் பல்லடம் ஒன்றியத்தைச் சேர்ந்த செம்மிபாளையம் கிராமத்தில் இலவச சட்ட உதவி முகாமை நடத்தினர். மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி என். நடேசன் தலைமை ஏற்று முகாமைத் துவக்கி வைத்துப் பேசினார். பொது மக்களால் கொடுக்கப்பட்ட மனுக்களை இவர் பெற்றுக் கொண்டார். மொத்தம் 155 மனுக்கள் வந்தன. அவைகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பெருமாநல்லூர் பழனிச்சாமிக்கும் குப்பிச்சி பாளையம் பாக்கிய லட்சுமிக்கும் பெரியோர்களால் திருமணம் செய்து வைக்கப்பட்டது. பாக்கிய லட்சுமியின் 3 பவுன் தங்க நகையும், ரொக்கம் 2,000 ரூபாயும் கணவன் பழனிச்சாமியால் அபகரிக்கப்பட்டது. பின்னர் 5 மாதம் கழித்து பாக்கியலட்சுமியை அவரது கணவன் பழனிச்சாமி விரட்டி விட்டார். ''மீண்டும் கணவனோடு சேர்ந்து வாழ வேண்டும் என்றால் ரொக்கமாக 15,000 ரூபாய் கொண்டு வர வேண்டும்'' என்று மாமனார், மாமியார், கணவர் ஆகிய மூவரும் பாக்கியலட்சுமியிடம் சொல்லி விட்டார்கள்.

தாய் வீட்டுக்குச் சென்ற பாக்கிய லட்சுமி, நடந்த விவரங்களைப் பெற்றோர்களிடம் சொல்லி அழுதார். எளிய வாழ்க்கை வாழ்ந்து வரும் பெற்றோர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கு நீதி கிடைக்கும் பொருட்டு மனுக்கள் கோரப்படுகின்றன என்கிற தகவல் தெரிந்ததும் பாக்கியலட்சுமி மேற்கண்ட விவரங்களோடு சென்று முகாமில் மனுவைக் கொடுத்து, ''நான் என் கணவரோடு சேர்ந்து வாழ வழி வகையைச் செய்து கொடுத்து, என்னை வாழ வையுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார். ஏற்றுக் கொள்ளப்பட்ட மனுக்களில் இதுவும் ஒன்று.

கமலா-திருமணமாகாத இளம் பெண். கை, கால்கள் வாத நோயால் பாதிக்கப்பட்டதால் வேலை செய்து பிழைக்க முடியாத நிலை; அதனால் ''மாதாமாதம் எனக்கு உதவித்தொகை கிடைக்கச் செய்யுங்கள்'' என்கிற மனுவைக் கொடுத்தார். தக்க ஏற்பாட்டை உடனே செய்வதாக நீதிபதி உறுதி கூறினார். இந்த முகாமில் பல்வேறு மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தீ விபத்தில் பாதிக்கப்பட்டோர், மோட்டார் வாகன விபத்தில் பாதிக்கப்பட்டோர் நிதி உதவி கேட்டிருந்தனர். சிலர் குடிதண்ணீர் வசதி கோரியும், சிலர் மின்சார வசதி கோரியும், சிலர் வீடு, நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினை குறித்தும் மனுக் கொடுத்திருந்தனர். வீடு கட்டக் கடன்கோரியும், வேலைவாய்ப்புக் கோரியும், தொழில் செய்ய வங்கிமூலம் கடன் பணம் கிடைக்க வழி செய்யக் கோரியும் - முதியோர், விதவை, ஊனமுற்றோர் - உதவித்தொகை கிடைக்கக் கோரியும் மற்றும் கணவனை விட்டுப் பிரிந்த மனைவி கணவனிடம் ஜீவனாம்சம் பெற்றுத் தருமாறு கோரியும் மனுச் செய்திருந்தனர்.

கோவை தலைமைக் குற்றவியல் நீதிபதி திரு. ஆர். சிங்காரவேலு, செம்மிபாளையம் டாக்டர் ரவிச்சந்திரன், அரசு வழக்கறிஞர் திரு. வேலுசாமி, வழக்கறிஞர்கள் திரு. சிவசுப்பிரமணியம், திரு. ஈஸ்வரன், பல்லடம் காவல்துறைத் துணை ஆய்வாளர் திரு. காமராஜ், பல்லடம் தாசில்தார் திரு. சையத் அபுபக்கர் ஆகியோரும் இந்த முகாமில் பேசினார்கள்.

## பெரிய அளவில் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்

கோவை மாவட்டத்தில் 60,000 ஏக்கர் நிலங்களில் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை வேளாண்மைத் துறை தொடங்கியுள்ளது.

''இத்திட்டத்தின் கீழ் ரூ. 6.81 இலட்சம் மதிப்புள்ள பூச்சிகொல்லி மருந்துகள் வழங்கப்படவுள்ளன. நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் மலிவு விலையில் வழங்கப்படுகின்றன. இவை, வேளாண்மை விரிவாக்க மையங்களின் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன. மாவட்டத்தில் அடங்கியுள்ள 6 வேளாண்மைக் கோட்டங்களுக்கென இது தொடர்பாக தனித் தனி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தீவிர பருத்தி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பருத்தி விவசாயிகளுக்கு 25 சதவிகித விலைச் சலுகையில் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் வழங்கப்படுகின்றன. மருந்து தெளிப்பான்கள், கைத்தெளிப்பான்கள் போன்றவைகளும் மலிவு விலையில் வழங்கப்படுகின்றன. இதற்கெனக் கோவை மாவட்டத்துக்கு ரூ. 1,05,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 960 எக்டேரில் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்திற்கென விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்க ரூ. 96,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் கீழ் 3,000 விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்படும்.

பூச்சி நிர்வாகப் பணியில் வேளாண் அபிவிருத்தி அதிகாரிகள், துணை வேளாண் அலுவலர்கள் ஆகியோருக்கு இம்மாவட்டத்தில் பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயிருக்கு ஆபத்து விளைவிக்கும் பூச்சிகளையும், உதவி செய்யும் பூச்சிகளையும் இனம் கண்டறியவும் சரியான விகிதத்தில், மருந்துகளைத் தெளிப்பது குறித்தும் பயிற்சி அளிக்கப்படும்.''

வேளாண்துறை இணை இயக்குநர் திரு. கே. முருகையன் இந்த விவரங்களைத் தெரிவித்தார்.

### மருத்துவக் கல்லூரி மருத்துவமனை: புதிய சிறப்பு அறுவை மருத்துவப் பிரிவு

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், இரைப்பை, குடல், மலக்குடல் புதிய சிறப்பு அறுவைச் சிகிச்சைப் பிரிவினை, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை முதல்வர் பேராசிரியர் எம். சுசீலாராஜ் அவர்கள் புத்தாண்டு நாளன்று காலை தொடங்கி வைத்தார். நவீன இம் மருத்துவப் பிரிவில் இரைப்பை, குடல், மலக்குடல் பகுதியில் உண்டாகும் புற்றுநோய், இரத்த வாந்திபேதி, குடற்புண், மஞ்சள் காமாலை முதலான நோய்களைக் குணப்படுத்த முடியும். இந்தப் பகுதியில் இதுவே முதல் சிறப்புப் பிரிவானதால் இது ஒரு தனி நிறுவனமாக மேம்படுத்தப்படும் வாய்ப்பும் உள்ளது.

1-1-90 அன்று துவங்கப்பட்ட இச்சிறப்புச் சிகிச்சைப் பிரிவு, புதன் மற்றும் சனிக்கிழமைகளில் காலை நேரத்தில் புற நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறது.

### பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள்

பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட ஆயக்கட்டுப் பகுதியில் நிலத்தடி நீரைக் கூட்டாகப் பகிர்ந்து கொள்வதற்கு, நீர்ப்பாசனக் கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவையில் டிசம்பர் (1989) மாதம் முடிவடைந்த நீர் ஆதார நிர்வாகம் பற்றிய அனைத்து நாட்டுப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இந்தக் கருத்துரையைத் தெரிவித்தனர்.

தொழில் வளர்ச்சி முகமையின் நிதி உதவியுடன், சுவீடனின் ராயல் தொழில் நுட்ப நிலையம், தண்ணீர் தொழில் நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் (கோவை) ஆகியவை இணைந்து இந்த 5 நாள் பயிற்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சுவீடனைச் சேர்ந்த 18 பேர்களும், இந்தியாவைச் சேர்ந்த 3 பேர்களும் இதில் கலந்து கொண்டனர். இதன் நிறைவு விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் எஸ். ஜயராஜ் உரையாற்றினார்.

### தமிழ்நாடு விவசாய முறையைப் பற்றி அறிய வட மாநில விவசாயிகள் குழு கோவை வருகை

''இப்கோ'' உர நிறுவன சார்பில், ஒருமைப்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் வட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளைத் தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளை வட மாநிலங்களுக்கும் அனுப்பி, அங்குள்ள விவசாய முறைகளை அறியச் செய்கிறார்கள். இந்தத் திட்டத்தின் கீழ், குஜராத், மத்தியப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் இருந்து 40 விவசாயிகள் தமிழகத்திற்கு வந்தார்கள். இந்த விவசாயிகள் கோவைக்கு வந்தார்கள். கோவையை அடுத்த தடாகத்திலுள்ள நஞ்சுண்டாபுரத்தில் நடைபெறும் விவசாய முறை பற்றி இவர்களுக்குக் கூறப்பட்டது.

தகவல்:
அ. சந்திரசேகரன்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கோயம்புத்தூர்


தமிழக அரசு
நிறைவேற்றிவரும்
சமூக நலத்திட்டங்களுக்கு
எங்களது நல்வாழ்த்துக்கள்!

தொலைபேசி: 78

வெண்ணந்தூர் கொல்லு மற்றும் தச்சுத் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்,
வெண்ணந்தூர் 637 505.
சேலம் மாவட்டம்.

(கதர் கிராமத் தொழில் வாரியத்தின் ஆளுகைக்குட்பட்டது).

பயன் அடைந்தோர் பகர்வன

# டாக்டர் தருமாம்பாள் நினைவு

## விதவை மறுமண

## உதவித் திட்டம்:



திருமதி ஜோஸ்மின் தன் கணவர் அகஸ்டினுடன்

**தா**ய்-தந்தைக்கு ஒரே பெண் ஜோஸ்மின் (வயது-26) பள்ளியிறுதி வகுப்புத் தேறியவர். மானாமதி கண்டிகைக் கிராமத்தில் பவுல்ராஜை மணம் செய்து கொண்டு ஆணும் பெண்ணுமாக இரண்டு குழந்தை களைப் பெற்று வாழ்ந்து வந்தவர். இடையில் கணவன் காலமாகிவிடவே இரண்டு குழந்தைகளைக் காப்பாற்ற விவசாயக் கூலி செய்து வந்தார். இப் போது, களியாம்பூண்டியில் கிராமப் பால்வாடியில் வேலை பார்த்து வரு கிறார்.

''எப்படித் துணிந்து மறுமணம் செய்து கொண்டீர்கள்'' என்று திருமதி ஜோஸ்மின்னிடம் கேட்ட போது, ''மறுபடியும் கல்யாணம் செய்து கொள்வதா? என்ற குழப்ப மான சூழ்நிலையில், எனக்குப் பழக்க மான உத்திரமேரூர் யூனியன் விரி வாக்க அலுவலர் அவர்களிடம் ஆலோ சனை கேட்டேன். உடனே அவங்க, 'மறுமணம் செய்துக்க அரசாங்கம் ஆதரவு தருது. டாக்டர் தருமாம்பாள் விதவை மறுமணத் திட்டத்தின்கீழ் ரூபாய் ஐயாயிரம் தராங்க.' என்று தைரியம் சொன்னாங்க. பிறகு நானும் அவரும் (அகஸ்டின்) 27.3.89-இல் பதிவு அலுவலகத்தில் திருமணம் செய்து கொண்டோம்.'' என்று மகிழ்ச்சியுடன் சொன்னார்.

இதேபோல 23.3.89 அன்று, திருவொற்றியூர் சி.எஸ்.எஸ்.ஆர். நகரில் வசிக்கும் திருமதி குமாரி திரு. முனுசாமி என்பவரை மணந்து கொண்டார்.

அம்பத்தூர் ஆசிரியர் காலனி திரு.வி.க. வீதியில் வசிக்கும் திருமதி கன்னியம்மாள்- திரு.உமாபதி என்பவரை மறுமணம் செய்து கொண்டார்.

டாக்டர் தருமாம்பாள் விதவை மறுமணத் திட்டத்தின்கீழ், பதிவுத் திருமணம் செய்துகொள்ளும் தம்பதி களுக்கு தமிழ்நாடு அரசு ரூ.5,000 கான சேமிப்புப் பத்திரத்தினை வழங்கு கிறது. 5 ஆண்டுகளுக்குப் பிறகு தம்பதிகள் இரட்டிப்புத் தொகையாக இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

பா. நாராயணமூர்த்தி
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
செங்கை-அண்ணா மாவட்டம்

---

**மூடப்பழக்க வழக்கத்தை முறியடிக்க வேண்டும் இளைஞர்கள்!**

**த**மிழ்ச் சமுதாயத்திலே பகுத்தறிவு ஒளி பரவ வேண்டும் என்பதற்காக, பகுத்தறிவுப் பகலவனாக பெரியார் தோன்றினார். அந்தப் பகலவனின் ஒளிக்கற்றையாகப் பேரறிஞர் அண்ணா பணியாற்றினார். இன்றைக்கு அவர்கள் தந்த இந்த ஒளிமயமான தமிழகத்தில் - அந்த ஒளி மங்கி விடாமல் காப்பாற்ற நாம் தொடர் பணி ஆற்றி வருகின்றோம்.

ஆனால் இன்னமும் சமுதாயத்தைப் பிடித்திருக்கின்ற சில குருட்டு நம்பிக்கைகள், மூடப் பழக்க வழக்கங்கள், அறவே நீங்கியபாடில்லை. அவற்றை நீக்குவதற்கான முயற்சியில் இளைய தலைமுறை ஈடுபட்டாக வேண்டும். பழைய வழக்கங்கள் அறவே அற்றுப் போய் விடவேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன். நான் சில இடங்களிலே குறிப்பிட்டிருப்பதைப் போல, பழையன முற்றும் கழிந்துவிட வேண்டும் என்று கருதுகின்றவன் அல்ல நான். அப்படிச் சொன்னால் சங்க இலக்கியங்களுக்கே வேலையில்லை என்று சொன்னதாக ஆகிவிடும். பழைய கருத்துக்கள், பழைய எண்ணங்கள், பழைய பண்பாடுகள், கலாச்சாரங்கள், மரபுகள் இவைகளை எல்லாம் அடிப்படையாக வைத்து அடித்தளமாக வைத்து, உரமாக வைத்து உரமாக ஏற்றுக்கொண்டு, புதியவைகள் பூத்துக் குலுங்க வேண்டும்.

—முதல்வர் கலைஞர்



## பார்வையற்ற பெண்ணுக்கு, பதினைந்தே நாட்களில் வேலை!

கண் பார்வையுடன் பிறந்து வளர்ந்து வந்த செல்வி கே. ரமீலா, தனது 7-வது வயதில் போலியோ நோய் மற்றும் கடுமையான தலை வலி காரணமாக கண்கள் இரண்டும் பார்வையிழந்து, பின்னர் மதுரை கண் மருத்துவர் ஒருவர் வாயிலாக திருப்பத்தூர் ஸ்வீடிஷ் மிஷனைச் சேர்ந்த டி.இ.எல்.சி. பார்வையற்றோர் பள்ளியில் சேர்ந்து ஆரம்பக் கல்வி பயின்றார்.

சென்னை பூந்தமல்லிப் பள்ளியில் உயர்நிலைப் பள்ளிக் கல்வியினைப் பயின்றிருக்கிறார். பின்னர் மற்ற மாணவ நண்பர்களின் உதவியுடனும், ஒலிப்பதிவுக் கருவியின் வாயிலாகவும் பாடங்களைப் படித்த தன் மூலம் இளங்கலை மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்வி ஆகிய கல்வியினை 1983-ஆம் ஆண்டு முடித்துள்ளார். பின்னர் முதுகலை (வரலாறு) கல்வியினையும் முடித்துள்ளார்.

1983-ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சியை முடித்த அவருக்கு, அண்மையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆணையின் படி, வேலை கிடைத்தது.

"1983-ஆம் ஆண்டு முதல் நான் வேலைக்காக எனது வாழ்க்கையில் பட்ட துன்பங்களை, திருப்பத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருவாளர் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களிடம் தெரிவித்தேன். அவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் எனது நிலையை எடுத்துக் கூறினார்

"நான் முறையிட்ட பதினைந்தே நாட்களில் எனக்கு மேல்நிலைப் பள்ளி ஆசிரியை வேலைக்கான உத்தரவு வந்தது. மேலும் நான் படித்து வளர்ந்த இதே திருப்பத்தூரிலுள்ள அரசினர் ஆறுமுகம் பிள்ளை மேல்நிலைப்பள்ளியிலேயே ஆசிரியையாகப் பணியாற்றுமாறு உத்தரவு கிடைத்தது" என்று நன்றிப் பெருக்குடன் கூறுகிறார் செல்வி ரமீலா.

திருப்பத்தூர் டி.இ.எல்.சி. பார்வையற்றோர் பள்ளி வைர விழாவில், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் கலந்து கொண்டார். பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. இளங்கோவன் இ.ஆ.ப. தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். எஸ். தென்னரசு, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு. பசும் பொன் தா. கிருட்டினன், மானா மதுரை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பெ. துரைப் பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

— செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.

எவ்வளவுதான் திறமைசாலி என்றாலும், தீமையான மனிதனைப் புத்திசாலி என்று சொல்வது சரியல்ல.

-பெஞ்சமின் பிராங்க்ளின்

இயற்கையின் உண்மைகளை, பகுத்தறிவுக் கண்கொண்டு ஆராய்வதால் ஏற்படுவதுதான் உண்மையான அறிவு.

—புருனோ

*With*
*Best*
*Compliments*
*From*

**M. Thimmarayappa & Brothers**
*Dealers in : Hybrid Seeds Farmers & Pesticides*
63 B Main Road, Hosur 835 109

**Thirumala Agro Service**
No.1. D.D.D.C. Building New Bus Stand
Hosur 635 109

**தரமான விதை,**
**பூச்சி மருந்து**
**இரசாயன உரங்கள்**
**கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்.**

1) அன்னை ஊழிய நிலையம், அரூர்.

2) அருணா விவசாய சேவா நிலையம், மொரப்பூர்.

# பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில்

## மகளிர் நலன்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், எட்டாம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்கள் திருமணத்திற்குத் தலா ரூ.5 ஆயிரம் வீதம் 240 பெண்களுக்கு மொத்தம் ரூ.12 இலட்சம் நிதி, இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ் கருவுற்ற 4 ஆயிரம் ஏழைப் பெண்களுக்குத் தலா ரூ.2.00 வீதம் ரூ.8 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப்படிப்புத் திட்டத்தின் கீழ் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலுள்ள கல்லூரிகளின் வாயிலாக ஏழை-நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த ஏராளமான மகளிர் பயன்பெற்று வருகின்றனர்.

## ஏழை எளியோர் நலன்

119 புதிய மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாக்கள், 15 ஆட்டோக்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கென வழங்கப்பட்டுள்ள கடன் ரூ.11.13 இலட்சம்; இதில் அரசு மானியம் ரூ.1.51 இலட்சம் ஆகும்.

கடந்த 11.8.89 அன்று மானாமதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் இம்மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களும் பயன்பெறத்தக்க வகையில் ரூ.663.71 இலட்சம் மதிப்பீட்டிலான திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். மேலும் 1,21,785 பேர்கள் பயன்பெறும் வகையில் ரூ.380.58 இலட்சம் மதிப்பீட்டிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் (மொத்தம் ரூ.10.5 கோடி) இதே விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

விபத்தில் இறக்கும் ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ரூ.10 ஆயிரமும், குடும்பத் தலைவர்களை இழந்த ஏழைக் குடும்பங்களுக்கு ரூ.2 ஆயிரமும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

சத்துணவு சாப்பிடும் 1.74 இலட்சம் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கொருமுறை கோழி முட்டை வழங்கப்பட்டுள்ளது.

ரூ.35 ஆக வழங்கப்பட்டுவந்த முதியோர் உதவித் தொகை ரூ.50 ஆக உயர்த்தப்பட்டதுடன், தகுதியுடைய அனைவருக்கும் முதியோர் உதவித் தொகையும் வழங்கிட உத்திரவிட்டதால் கூடுதலாகப் பயன்பெறும் 700 முதியோர் உட்பட மொத்தம் 10,076 முதியோர் தற்போது பயன்பெற்று வருகின்றனர்.

ஆதி-திராவிடர் சிறப்பு மானியத் திட்டத்தின் கீழ் விதை, பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், வேளாண் கருவிகள் விநியோகம் செய்ய ரூ.5.34 இலட்சம் மானியமாகச் செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பயன்பெற்ற ஆதி-திராவிட விவசாயிகள் 16,510 பேர்களாகும்.

811 ஆதி - திராவிடர்களுக்கு 36.29 ஏக்கர் வீட்டு மனைப்பட்டா இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

ரூ.46,59,600 செலவில் 53,900 விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்துறை வாயிலாக வறட்சி நிவாரணப்பணிகள் நடைபெற்று வருகின்றன. விளைச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3,77,855 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ரூ.67,08,534 நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்திலுள்ள 112 கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ.164.44 இலட்சம் குறுகிய காலக்கடன் மத்திய காலக் கடனாக மாற்றப்பட்டுள்ளது. மேலும் பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு, கூட்டுறவுக் கடன்கள் மற்றும் வட்டி ரத்து செய்யப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணத்திட்டம் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டங்களின் கீழ் நடப்பு ஆண்டில் இதுவரை ரூ. 27.67 இலட்சம் செலவில் 462 பணிகள் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. இளங்கோவன், இ.ஆ.ப., தெரிவித்தார்.

ரூ. 3,44,200 செலவில் 169 கிணறுகள் ஆழப்படுத்தும் பணி, ரூ. 4,15,800 செலவில் 93 உறைக் கிணறுகள் அமைக்கும் பணி, ரூ. 6,20,000 செலவில் 21 திறந்த வெளிக் கிணறுகள் அமைக்கும் பணி, ரூ. 48 ஆயிரம் செலவில் 41 கிணறுகள் தூர் எடுக்கும் பணி, ரூ. 4,55,000 செலவில் விசைப்பம்புகள் மேம்படுத்தும்பணி, ரூ. 3,60,000 செலவில் 30 குடிநீர்க்குழாய் விரிவாக்கப் பணி, ரூ. 3 இலட்சம் செலவில் 37 குடிநீர்த் திட்டங்கள் பழுது பார்க்கும் பணி ஆகியபணிகள் முடிக்கப் பெற்றுள்ளன. மேலும் ரூ. 2.14 இலட்சம் செலவில் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் 43 பணிகளும் இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளன. 3109 அடி குழாய்க் கிணறுகளும் 406 விசைப்பம்புகளும் இம்மாவட்டத்தில் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

1989-90 ஆம் ஆண்டிற்குத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைச் சார்ந்த காலணி தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள இந்து ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த 35 நபர்களுக்குக் காலணிப் பணிக்கூடம் மற்றும் தையல் இயந்திரம் தலா ரூபாய் 9,000 வீதம் மொத்தம் ரூ. 3,15,000 மதிப்பில் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

**துரை. தாமரைச்செல்வம்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்

TELEGRAM: "DHARCOSPIN"
(UTHANGARAI)

TELEPHONE: S.O. (PER): 27 UTHANGARAI
Office : 61 "
S.O (RES) : 16 TIRUPATTUR, N.A. DISTRICT

# THE DHARMAPURI DISTRICT
# CO-OPERATIVE SPINNING MILLS LIMITED,

**NO. S.A. 108, POST BAG NO.2, UTHANGARAI - 635 207**

**DHARMAPURI DISTRICT, TAMIL NADU**

MANUFACTURERS OF BEST QUALITY YARN BY
USING MODERN MACHINERIES.

HANK YARN : 26s, 40s, 60s, 80s, 2/30s & 2/80s

CONE YARN : 30s, 34s, 40s, 60s & 80s.

**WE ARE SELLING OUR YARN TO THE WEAVERS
CO-OPERATIVE SOCIETIES AND PRIVATE PARTIES.**

**WE ARE ALSO SELLING OUR YARN THROUGH
M/s. AMIT ENTERPRISE,
THE DEPOT AGENTS
AT BOMBAY & BHIWANDI
IN MAHARASTRA STATE.**

***PLEASE CONTACT US FOR YOUR REQUIREMENTS.***

**V. VISWANATHAN**
**SPECIAL OFFICER**

# திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்



திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் நடைபெறும் பல் வேறு வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிடுவதற்காகச் செய்தி யாளர்கள் சுற்றுப்பயணம் செய் தனர். அவர்கள் அளித்த விவரங்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் பள்ளிப்பட்டி, இந்திராநகரில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத் தின்கீழ் 60 ஆயிரம் ரூபாய் செல வில் கழிவுநீர் வாய்க்கால், கோட் டைப்பட்டியில் 88 ஆயிரம் ரூபாய் செலவில் வெள்ளத் தடுப்புச் சுவர், பாலம், எ.வெள்ளோடு கிராமத்தில் கசிவுநீர்க் குட்டை ஆகியவை கட்டப் பட்டுள்ளன. ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் சித்தையன்கோட்டையில் மூங்கில் கூடை செய்வதற்காக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் வழங்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் பல குடும் பங்கள் பயன்பெறுகின்றன. சின் னாளபட்டியில் இத்திட்டத்தின்கீழ் 27 ஆயிரத்து 500 ரூபாய் 24 பேர்களுக்கு (பைல்) அரம் செய் வதற்குக் கடன் உதவி வழங்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் 100க்கு மேற்பட்டவர்கள், தொழில் வாய்ப் புகள் பெற்றுள்ளனர். தமிழ்நாட்டி லேயே இங்கேதான் இவ்வகைக் கைத் தொழில் நடைபெறுகிறது. இதில் பெண்களும், ஆண்களும் இணைந்து செயல்படுகின்றனர். கைத்திறனாலேயே உருவாகும் இந் தத் தொழில் (அரம் தயாரிப்பது) வளர்வதற்கு அரம் உருவாக்கப் பயன்படுத்தப்படும் ஸ்டீல் ராடுகள், கண்ட்ரோல் விலையில் கிடைத்தால் நல்லது. இதனால் இத்தொழில் பார்க்கும் தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியம் கிடைப்பதோடு அதிக அளவு இலாபம் கிடைக்கும் எனக் கடனுதவி பெற்றவர்கள் தெரி வித்தனர்.

நடுப்பட்டி கிராமத்தில் சமூக நலக் காடுகள் வளர்க்கப்பட்டு உள்ளன. பாறைப்பட்டி கிராமத்தில் பஞ்சாயத்து அலுவலகக் கட்டடமும், மேலக்கோவில்பட்டியில் தொகுப்பு வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.

திண்டுக்கல் கோட்டத்தில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட் டத்தின்கீழ் மொத்தம் 758 வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டதில் 711 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீத முள்ள வீடுகள் விரைவில் கட்டி முடிக்கப்படும். ஒவ்வொரு வீடும் 11ஆயிரத்து 200 ரூபாய் மதிப்பி லும், ரோடு வசதி, சமூகக் கூடம் போன்றவற்றிற்கு, தலா 3 ஆயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டு, இவ்வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ரூபாய் 15 இலட்சம் செலவில் 56 கசிவு நீர்க் குட்டைகள் கட்டப் பட்டுள்ளன. ரூ.8 இலட்சம் செல வில் 81 தடுப்பு அணைகளும் கட் டப்பட்டுள்ளன. ரூபாய் 80 இலட்சம் செலவில் சாலை போடு தல், பாலம் கட்டுதல் போன்ற 232 வேலைகள் எடுத்துக் கொள்ளப் பட்டதில், இதுவரை 192 வேலைகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள வேலைகள் பிப்ரவரி திங்களுக்குள் முடிக்கப்படும். 11 இலட்சம் ரூபாய் செலவில் பஞ்சாயத்துக் கட்டடங்கள் கட்டுதல், டி.வி. செட் அமைக்கும் பணிகள் ஆகியவை மேற்கொள்ளப் பட்டுள்ளன.

தலா 24 ஆயிரத்து 500 ரூபாய் செலவில், ஆதி-திராவிடர் காலனி யில் 10 மீட்டர் ஆழம் வரை, 33 ஜீவன்தாரா கிணறுகள் வெட்டப் பட்டுள்ளன. மேலும் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டு வெள்ளத் தடுப்புச் சுவர், ஆழ் குழாய்க் கிணறுகள், மற்றும் பல்வேறு பணிகள் நடந்து வருவதாகத் திண்டுக்கல் கோட்ட வளர்ச்சி அதிகாரி பாலசுப்பிர மணியம் தெரிவித்தார்.

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத் திற்கு 41 இலட்சத்து 25 ஆயிரம்

# Best Compliments

## தரமான விதைகள், உரம்
## மற்றும்
## பூச்சி மருந்துகள்
## சகாய விலையில் கிடைக்கும்.

**B.S. RAJAGOPALAN**
E I D Parry and Spic Dealer
64, Gandhi Street
Denkanikotta 635 107
Phone: 59



## தர்மபுரி மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், பாலக்கோடு

**நடப்பு 1989-90 நடவுப் பருவத்திற்குக் கீழ்க்கண்டவாறு மானியங்கள் வழங்கப்படவுள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

1. முதல் நிலை நாற்றங்காலுக்கு விதைக்கரும்பும், லாரி வாடகையும் முழு மானியம்.
2. புதிய ரகங்களின் நாற்றங்கால் பதிவுக்குக் காலத்திற்கேற்ப ரூ.800/- வரை ஒரு ஏக்கருக்கு மானியம்.
3. புதிய ரகங்களின் அரைவைப் பதிவுக்குக் காலத்திற்கேற்ப ஒரு ஏக்கருக்கு நடவுக்கு ரூ.800/- வரையும், மறுதாம்புக்கு ரூ.350/- வரையும் மானியம்.
4. விதைக்கரனை நேர்த்திக்காக நடவின்போதே பூஞ்சான மருந்து முழு மானியம்
5. கரும்புப் பயிருக்கான இரசாயன மருந்துகளும், வைரஸ் மற்றும் ஒட்டுண்ணியும் பாதி விலையில் வழங்கப்படும்.
6. 40 கி.மீக்கு மேல் உள்ள கூடுதல் தூரத்துக்கான லாரி வாடகை முழுவதும் மானியம்.

எனவே; அதிக அளவில் கரும்பு பயிர் செய்து பயனடைய விவசாயப் பெருமக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

தேவையான விவரங்களைத் தலைமை அலுவலகம் மற்றும் அந்தந்தப் பகுதி கரும்பு உதவியாளர்/ கரும்பு அலுவலர்களை அணுகிப் பெறலாம்.

**தனி அலுவலர்.**

ரூபாய் செலவில் 218 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. ஆத்தூர் யூனியனில் 40 இலட்சம் ரூபாய் செலவில் 296 வேலைகளும், வத்தலக்குண்டு யூனியனில் 34.3 இலட்சம் ரூபாய் செலவில் 215 வேலைகளும் செய்து முடிக்கப்பட்டு உள்ளன.

கொடைக்கானலிலுள்ள தற்போதைய மக்கள் தொகை 20 ஆயிரமாகும். இதுதவிர, சராசரி 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். நகரின் குடிநீர்த் தேவைக்கு ஏற்கெனவே உள்ள நீர்த்தேக்கத்திலுள்ள குடிநீர் 2 மாத காலத்திற்கே போதுமானதாக உள்ளது. எனவே பாம்பாற்றின் குறுக்கே 10.6 எம்.சி. எப்.டி. கொள்ளளவு கொண்ட புதிய அணை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இவ்வணையின் பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன. 2.15 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் இவ்வணையின் மூலம், சுமார் 25 ஆயிரம் மக்களுக்கு தினமும் 70 லிட்டர் குடிநீர் என்ற அளவில் 6 மாத காலத்திற்குத் தண்ணீர் விநியோகம் செய்ய முடியும். இவ்வணை பழைய நீர்த்தேக்கத்தைவிட மும்மடங்கு பெரியதாகும்.

இப்பகுதியில், மாலை நேரங்களில் வன விலங்குகள் நீர் பருக வரும் காட்சி சிறப்பாக உள்ளது. மேலும் இப்பகுதியில் ஒரு பூங்காவை அமைத்தால் கொடைக்கானல் வரும் சுற்றுலாப் பயணிகள், கொடைக்கானலில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இவ்வணைப் பகுதியைச் சுற்றிப் பார்க்க வருவர்.

### அடர்ந்த காடுகள்

கொடைக்கானலில் உள்ள பழைய, புதிய அணைப் பகுதிகளில் அடர்ந்த காடுகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.8.78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1989-90-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 100 ஏக்கர் பரப்பளவில் மரக்கன்றுகள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**எம். அண்ணாமலை**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்

## திண்டுக்கல்லில் மதிப்பீட்டுக் குழு

சட்டமன்ற உறுப்பினர்கள் 16 பேர் கொண்ட மதிப்பீட்டுக் குழு பழனி, எருமநாயக்கன்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, செம்மடைப்பட்டி, சாணார்பட்டி, நத்தம் ஆகிய பகுதிகளுக்கு 5-2-90 அன்று சென்று, பொதுப் பணித் துறைக் கட்டடங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சமுதாய வளர்ச்சிப் பணிகள் ஆகிய வற்றைப் பார்வையிட்டது.

மதிப்பீட்டுக் குழு, கூட்டுறவு வங்கி, கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப் பெறும் கடைகள், ஆதிதிராவிடர் குடியிருப்புகள், கட்டப்பட்டு வரும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம், கூடை முடையும் பணி ஆகியவற்றைப் பார்வையிட்டது.

திண்டுக்கல்லில் மதிப்பீட்டுக் குழுவினர் பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு சண்முகம் (ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர்) அவர்கள் கூறும்பொழுது:

''நாங்கள் 10 மாதங்களாகப் பல மாவட்டங்களுக்குச் சென்று வந்திருக்கின்றோம். குறிப்பாக ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி ஒழுங்கான முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்று பார்த்தோம். மற்ற மாவட்டங்களைவிட இந்த மாவட்டத்தில் ஒழுங்கான முறையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடம் ஒழுங்காக, நல்லமுறையில் கட்டப்பட்டு முடிவடையும் தறுவாயில் உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்தைச் சுற்றி வெளிப்புறச் சுவர் கட்டப்பட வேண்டும் என அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கின்றோம். இதனால் ஆக்கரமிப்புகள் குறையும்.'' இங்குள்ள கூட்டுறவுச் சங்கம் மூலம் கடைகள் நல்ல லாபத்தோடு நடைபெற்று வருகின்றன. மற்ற இடங்களில் 70 விழுக்காடு நட்டத்தில் நடக்கின்ற நிலையில் இங்கு இலாபத்தில் நடப்பது பாராட்டுதற்குரியது. அரசுத் திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

இம்மாவட்டத்தில் கரும்பு, பருத்தி அதிகமாகச் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆகவே இங்கு கூட்டுறவு நூற்பாலை, சர்க்கரை ஆலை ஆகியவை அமைக்க அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

''தமிழ்நாட்டில் எங்கெல்லாம் தோல் பதனிடும் தொழிற்சாலை உள்ளதோ அங்கெல்லாம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. அதற்காக இம்மாவட்டத்திற்கு ரூ. 270 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மத்திய, மாநில அரசுகள் 50 சதவீதமும், தோல் தொழிற்சாலை வைத்திருப்போர் 15 சதவீதமும், மீதித் தொகையை நிதி நிறுவனமும் கொடுக்கும். ஏற்கெனவே மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் ரூ. 30 இலட்சம், தோல் தொழிற்சாலை அதிபர்கள் கொடுத்துள்ளனர்'' என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., அவர்கள் குறிப்பிட்டார்.

இந்த மதிப்பீட்டுக் குழுவில் ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. சண்முகம், திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினர் திரு. பிச்சாண்டி, வலங்கைமான் சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா, திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஏ. தங்கராஜ், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு. தீட்சிதர், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. குருநாதன், நத்தம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆண்டி அம்பலம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

**சுத்தம் செய்யப்பட்ட நீரானாலும் காய்ச்சிப் பருகுவது நல்லது**



சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்
மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்

டி.ஐ.பி.ஆர்/2818/எம்எஸ்/89



# தலைநகரின் தாகந்தீர்க்கும்

# சென்னைக் குடிநீர் வாரியம்

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகர மக்களுக்குப் புழலேரியிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் நூறாண்டுகளுக்கு முன்பே செயல்பெறத் தொடங்கி விட்டது. 1872-ஆம் ஆண்டு முதல் அமுத சுரபியாக விளங்கிய புழலேரி, கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்னால் முற்றிலும் வற்றி விட்டது. சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைகளை நிறைவேற்றி வரும் சென்னை குடி நீர் வாரியம், நிலத்தடி நீரை வெளிக் கொணர்ந்து, அதை முழுவதும் பயன்படுத்தி நகரின் மூலை முடுக்கெங்கும் விநியோகிக்க மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் புரிந்து கொள்வதற்குச் சில அடிப்படைப் புள்ளி விவரங்களைத் தெரிந்துகொள்வது இன்றியமையாததாகும்.

**சென்னை நகரின் மக்கட்தொகைப் பெருக்கம்**

1872 ஆம் ஆண்டு முதல் முறையாக மக்கட் தொகைக் கணக்கெடுப்பு நிகழ்ந்தது. அப்போது சென்னை நகரில் நான்கு இலட்சம் பேர் மட்டுமே வசித்து வந்தனர். இத்தொகை இருமடங்காவதற்கு 65 ஆண்டுகள் பிடித்தன. அது மேலும் இருமடங்காவதற்கு 25 ஆண்டுகள் உருண்டோடின. அதிலிருந்து பின்னும் இருமடங்காவதற்கு 20 ஆண்டுகள் சென்றன. 1981 ஆம் ஆண்டில் 32 இலட்சம் என்ற எண்ணிக்கையை எட்டியது. இப்போதைய சென்னை மாநகரின் மக்கள் தொகை, சற்றொப்ப 41 இலட்சமாக இருக்கலாம் என்று கணக்கிடப்படுகிறது.

இறப்பு வீதக் குறைவு, அதற்கு ஈடாகப் பிறப்பு வீதம் குறைவு படாமை, மற்றும் நகருக்குக் குடி பெயர்ந்து வரும் மக்கட் பெருக்கம் ஆகிய மூன்றும் இந்த மக்கட்தொகை வளர்ச்சிக்குக் காரணங்களாகும். சென்னை நகர எல்லைகள் 1946 ஆம் ஆண்டிலும், மீண்டும் 1978ஆம் ஆண்டிலும் விரிவு படுத்தப்பட்டதும் ஒரு காரணமாகலாம். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் வளர்ச்சிகள் மேலும் பரந்துபட்டவை என்றாலும், சென்னைக் குடிநீர் வாரியம் தற்போது சென்னை மாநகராட்சியின் 150 கோட்டங்களின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் தேவைகளை மட்டுமே தீர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

**குடிநீர்த் தேவை:**

இந்தியாவிலுள்ள பல்வேறு நகரங்களின் குடிநீர்த் தேவையையும், அது கிடைக்கும் அளவையும் ஒட்டு மொத்தமாகக் கருத்திற்கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, சென்னை நகர மக்களுக்கு, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்படும் 70 லிட்டர் குடிநீர் அளவு மிகக் குறைந்ததுதான். இந்தியத் தர நிர்ணய அடிப்படையில், நகர் வாழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் 135 லிட்டர்

ஏ.பி. முத்துசாமி,
இ.ஆ.ப.
தலைவர்,
சென்னைக் குடிநீர் வாரியம்



சென்னை 147-வது வட்டம் பள்ளிப்பட்டு பகுதிக்குக் குடிநீர் வழங்கலை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் 24.1.90 அன்று துவக்கி வைத்தார். மாநிலங்களவை உறுப்பினர் திரு டி.ஆர். பாலு, சைதை சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர்.எஸ். ஸ்ரீதர், வாரியத் தலைவர் திரு ஏ.பி. முத்துசாமி, இ.ஆ.ப., வாரிய நிர்வாக இயக்குநர் திரு எஸ்.பி. இளங்கோவன், இ.ஆ.ப., வாரியப் பொறியியல் இயக்குநர் திரு ஏ. வேதகிரி ஆகியோர் உடன் உள்ளனர்.

---

தண்ணீர் அன்றாடம் வழங்கப்படல் வேண்டும். சென்னை நகரில் பெரும்பாலான வீடுகளில் கிணறுகள் அமைந்துள்ளன. இவற்றில் குறைந்த ஆழத்திலேயே தண்ணீரும் கிடைக்கிறது. எனவே, மக்களின் குடிநீர் மற்றும் சமையல் முதலிய இன்றியமையாத் தேவைகளுக்கு மட்டும், குறைந்தது 100 லிட்டர் நீராவது ஒவ்வொருவருக்கும், நாள்தோறும் வழங்குவது விரும்பத்தக்கது. சென்னை நகரில் வசதி படைத்தவர்கள், வசதிக் குறைவானவர்கள் என இரண்டு வகையாகவும் கலந்து வாழ்வோர், வாணிபப் பகுதியினர், தொழிற்சாலைகள என்று பல திறப்பட்ட மக்களின் தேவைகளின் சராசரிக் கணக்கின்படி, சென்னை நகர மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட நீர் வழங்குவது அவசியமாகிறது.

### நடைமுறையிலுள்ள குடிநீர் வழங்குமுறை

முன்னரே குறிப்பிட்டதைப் போல, ஏரிகளிலிருந்து சென்னைக்குக் குடிநீரைக் கொண்டு வந்து வழங்கும் திட்டம், 1872 ஆம் ஆண்டுமுதல் பழக்கத்தில் உள்ளது. தண்ணீரை வடிகட்டித் தூய்மையாக்கி, நகரின் பல பாகங்களுக்கும் விசைக்குழாய்கள் வாயிலாகப் பகிர்ந்தளிக்கும் முறை 1914 ஆம் ஆண்டு முதல் இருந்து வருகிறது.

கொடுதலை ஆற்றின் உபரி நீரை ஆதாரமாகக் கொண்ட பூண்டி, சோழவரம், புழலேரி நீர்த்தேக்கங்கள் மூன்றும் சேர்ந்து 1830 இலட்சம் கனமீட்டர் கொள்ளளவுடையனவாகும். இதுவே இன்றும் நடைமுறையிலுள்ள சென்னை மாநகரின் குடிநீர் வழங்கு முறைக்கு நிலைக்களனாகும். இந்த மூன்று நீர்த்தேக்கங்களும் நிரம்புவதற்கு, ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் டிசம்பர் திங்கள் வரை பெய்யும் வடகிழக்குப் பருவமழையையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. ஒழுங்காக மழை பெய்யும் ஆண்டுகளில், அந்த நீர்த்தேக்கங்களிலிருந்து அன்றாடம் 20 கோடி லிட்டர் நீரைச் சென்னை நகர மக்களின் தேவைகளுக்காகப் பெறுவது சாத்தியமாகும். ஆனால், இந்த ஏரிகள் போதிய ஆழமின்மையால், இவற்றிலுள்ள நீரின் மொத்தக் கொள்ளளவில் 43 விழுக்காடு ஆவியாகி, வீணாகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஒரு திட்டம் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

பூண்டி, சோழவரம், புழலேரி ஆகிய மூன்று நீர்த்தேக்கங்களும் மேல் வழங்கு கால்வாய், கீழ் வழங்கு கால்வாய் என்னும் திறந்த கால்வாய்களால் இணைக்கப்பட்டுள்ளன. புழலேரியிலிருந்து நீர், மூன்று மூடு கால்வாய்கள் வழியே கீழ்ப்பாக்கம் நீர் நிலையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது. அங்கே தூய்மையாக்கப்படும் நீர், பின்னர் நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

### நிலத்தடி நீர் வழங்கு முறை

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன், சென்னை நகரின் வடகிழக்குப் பகுதிகளில் நிலத்தடி நீர் ஆதாரங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. இவற்றின் விளைவாக, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் பாலாறு பாய்ந்த நீர்ப்படுகை புதையுண்டு கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டது. 50 கிலோமீட்டர் நீளமும், 5 கிலோமீட்டர் அகலமும் கொண்ட இந்த நீர்ப்படுகையிலிருந்து கிணற்றுப் புலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. 1965 முதல் 1987 வரை, மீஞ்சூர், பஞ்செட்டி, தாமரைப்பாக்கம், கன்னிகைப்பேர், பூண்டி, மற்றும் கொடுதலையாறு, வெள்ளக்கரம்பு ஆகிய பகுதிகளில், நிலத்தடி நீர்ப் புலங்கள் நிறுவப்பெற்றன. 76 ஆழ் கிணறுகளிலிருந்து நாள்தோறும் சுரக்கும் 1480 இலட்சம் லிட்டர் நீர் இறைக்கப்பட்டு, சென்னைக் குடிநீர்த் தேவைகளுக்கும் மணலியிலுள்ள பெரிய தொழிற்சாலைகளுக்கும் விசைக்குழாய் வாயிலாகச் சென்னை மாநகருக்குக் கொண்டுவரப்படுகிறது.

### மற்றுமுள்ள நீர் நிலையங்கள்

வழக்கமாக மழை பொழியும் ஆண்டுகளில், நீர்த்தேக்கங்களில் 2000 இலட்சம் லிட்டர் மற்றும் நிலத்தடி நீர் 1480 இலட்சம் லிட்டர் ஆகமொத்தம் 3480 இலட்சம் லிட்டர் அல்லது 348 மில்லியன் லிட்டர் என்ற அளவில் அன்றாடம் குடி நீர் பெறப்பட்டு, சென்னைக் குடிநீர்

வாரியத்தால் சென்னை நகர மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

இவையன்றியும், ஊரூர், திருவான்மியூர், போரூர், காட்டுப்பாக்கம் ஆகிய ஊர்களிலுள்ள பெரிய கிணறுகளிலிருந்து கிடைக்கும் ஓரளவு நீரும் சென்னை நகரின் பகுதிகளுக்கு வழங்கப் பயன்படுத்தப்படுகிறது. மாமல்லபுரம் கடற்கரைச் சாலையிலுள்ள சில கிணறுகளும், சென்னை நகர மக்களின் தாகந்தீர்க்கப் பயன்படுகின்றன. இவற்றிலிருந்து , நாள்தோறும் 200 இலட்சம் லிட்டர் நீர் கிடைக்கிறது.

சென்னை நகர மக்களின் நீர்த் தேவையை நிறைவு செய்ய, சென்னை நகரில் மேலும் கிடைக்கக்கூடிய 20 கிணறுகளின் தண்ணீரைக் குடிநீர் முதன்மைக் குழாய்களில் நேரடியாக இறைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்றும் 35 நகராட்சிக் கிணறுகள், ஆங்காங்குள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்குத் தண்ணீரை இறைத்து அவற்றைச் சூழ்ந்துள்ள பகுதிகளுக்கு நாள்தோறும் 50 இலட்சம் லிட்டர் நீர் வழங்கப் பயன்படுத்தப்படுகின்றன.

திருவான்மியூரிலிருந்து முட்டுக்காடு வரை 18 கிலோ மீட்டர் நீளத்திற்குள்ள கடற்கரையில், 12 மீட்டர் ஆழத்தில் அதில் பாதியளவு நன்னீர்ச் சுரப்பு மிகுந்துள்ளது. இதனைத் தனியார் மிகுதியும் பயன்படுத்தி, லாரிகள் வாயிலாக எடுத்துச்சென்று சென்னை நகரில் மொத்தமாக விற்பனை செய்து வந்தனர். இதனை நிலத்தடி நீர்ச் சட்ட வாயிலாகத் தடைசெய்து, சென்னை குடிநீர் வாரியம் உரிமம் வழங்கிக் கட்டுப்படுத்தி வருகிறது. ஆழக்குறைவும், கடல் அருகில் இருப்பதால் உப்பு நீர் கலக்கும் அபாயமும், இக்கிணறுகளை மேலும் அதிகமாகப் பயன்படுத்த ஒட்டாமல், மட்டுப்படுத்துகின்றன.

### பற்றாக்குறையைப் போக்கும் பணிகள்

குடிநீர்த் தேவைகள் தவிர்த்த எஞ்சிய பிற தேவைகளுக்கு, வீட்டுக் கிணறுகள், போதுமான மழை பொழியும் காலங்களில் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றிலிருந்து அன்றாடம் 100 இலட்சம் லிட்டர் தண்ணீர் கிடைப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவையன்றியும், சென்னை நகரில் 5700 சிறு விசைக் குழாய்களும், 5237 ஆழ்துளைக் கிணறுகளும் நிறுவப்பட்டுள்ளன. இதில் இந்த ஆண்டு மட்டும் 710 ஆழ்துளைக் கிணறுகள் (இந்தியா மார்க் II பம்புகள்) புதிதாக நிறுவப்பட்டுள்ளன. மேலும் நூறு ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. இவற்றிலிருந்து கிடைக்கும் 500 இலட்சம் லிட்டர் தண்ணீர், சென்னை நகர மக்களின் பொதுத் தேவைகளுக்குப் பயன்படுகிறது.

1987-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல், நிலவிவரும் கடும் வறட்சி காரணமாய், சென்னை நகருக்குக் குழாய்களில் ஒருநாள் மாற்றி ஒருநாள் குடிநீர் வழங்கப்படுகிறது. இவ்வாறு குழாய்களின் வாயிலாகக் குடிநீர் கிடைக்கப் பெறாத மேட்டுப்பாங்கான பகுதிகளிலும் குடிநீர் எட்ட முடியாத தொலை தூரப்பகுதிகளிலும் 2908 குடிநீர்த் தொட்டிகள் நிறுவப்பெற்று லாரிகள் வாயிலாகக் குடிநீர்த் தொட்டிகளுக்கு அன்றாடம் வழங்கப்படுகிறது. இதில் 500 குடிநீர்த் தொட்டிகள் இந்த ஆண்டு புதியனவாக நிறுவப்பட்டவையாகும். இதற்காக 400 குடிநீர் லாரிகளும், 200 டிராக்டர்களும் அமர்த்தப்பட்டுள்ளன.

### குடிநீர் வழங்கு முறையைப் பராமரித்தல்

சென்னை நகரின் 92 விழுக்காடு பரப்பளவுள்ள பகுதிகளுக்குக் குழாய்கள் வாயிலாகக் குடிநீர் வழங்கும் வசதிகள் ஏற்கெனவே இருக்கின்றன. 1979-ஆம் ஆண்டில் சென்னை நகரோடு சேர்க்கப்பட்ட முன்னாள் பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கு குழாய்களைப் பதிக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சென்னை நகரில் 100 மி.மீ. விட்டத்திலிருந்து 1200 மி.மீ. விட்டம் வரையுள்ள குடிநீர்க்குழாய்கள் 1400 கி.மீ. நீளத்திற்குப் பதிக்கப்பட்டுள்ளன.

நகரிலுள்ள குடிநீர்ப் பகிர்மானக் குழாய்கள் நூற்றாண்டுப் பழமை வாய்ந்தவை. 1978-ஆம் ஆண்டில் திரட்டிய புள்ளிவிவரப்படி, இவற்றில் 40 விழுக்காட்டளவிலான குழாய்கள், 50 ஆண்டுப் பணியைச் செய்து முடித்தவையாகும். எனவே இவ்வாறு காலத்தால் பழுதுபட்டுத் தூர்ந்து போன குழாய்களை மாற்றியமைக்கும் திட்டத்தை வாரியம் தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. 1981-82 மற்றும் 1986-87-ஆம் ஆண்டுகளில், 30. கி.மீ. நீளத்திற்குப் பழைய குழாய்கள் பதிக்கப்பட்டன. தற்போது உலக வங்கி நிதியுதவியுடன், 1988-89-ஆம் ஆண்டுகளில் மட்டும், 50 கிலோ மீட்டர் குழாய்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

எல்லாப் பகுதிகளுக்கும் சீராக நீர் கிடைக்கச் செய்யும் வகையில்

செங்குன்றம் நீர்த்தேக்கம்



பத்மநாப நகர், கொருக்குப்பேட்டை, மேற்கு மாம்பலம் முதலிய பற்றாக் குறைப் பகுதிகளில், மண்டல நீர்த் தேக்கங்களை வடிவமைத்துக் கட்டு வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கலை மேம்படுத்து வதற்கான குறுகிய காலத் திட்டங்கள்**

1) இருக்கின்ற நீர் நிலைகளை உறுதிப்படுத்துதல்
2) தொழிற்சாலைகளுக்குக் கழிவு நீரைத் துப்புரவாக்கிப் பயன் படுத்துதல்
3) புதிய நீர்நிலைகளை உருவாக்கு தல் – என்ற மூன்று வகைகளிலும் குடிநீர் வழங்கலை மேம்படுத்துவதற் கான குறுகிய காலத் திட்டங்களைச் சென்னைக் குடிநீர் வாரியம் திட்ட மிட்டு நிறைவேற்றி வருகின்றது.



பொதுமக்களின் பயனுக்கென சென்னைக் குடிநீர் வாரியத்தால் அமைக்கப்பட்ட கைப்பம்பு.

**வெள்ளத்தடுப்பு அணைகளும் இணைப்புக் கால்வாய்களும்**

சென்னைக் குடிநீர் வழங்கு நீர் நிலை ஆதாரங்களை மேம்படுத்து தலை நோக்கமாகக் கொண்ட, ரூ.150 கோடிக்கான உலக வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் 1986 முதல் நடை பெற்று வருகின்றன. இத்திட்டத்தில் கூடுதலான நிலத்தடி நீர்ப் புலங்கள் ஏற்கெனவே அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

ஆரணியாற்றிலிருந்து கொடுதலை ஆற்றை இணைக்கும் கால்வாய் அமைத்தல், மற்றும் வெள்ளத் தடுப்பு அணைகள் கட்டும் பணி, ரூ.18 கோடி மதிப்பீட்டில் தொடங்கி நடைபெறுகிறது. இப்பணி, 1991 ஆம் ஆண்டில் முடிவுறும். இதனால் மேலும் 470 இலட்சம் லிட்டர் நீர் நாள்தோறும் கிடைக்கும் என மதிப் பிடப்பட்டுள்ளது.

**கிருஷ்ணா நதி நீர் வழங்கு திட்டம்**

சென்னைக் குடிநீர்த் தட்டுப் பாட்டைத் தவிர்க்க நீண்ட கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட் டுள்ள திட்டம் கிருஷ்ணா நதி நீர் வழங்கு திட்டமாகும். 1951-ஆம் ஆண்டில், இந்திய அரசின் திட்ட ஆணையத்தால் நியமிக்கப்பட்ட கோசலா குழுவின் பரிந்துரையைத் தொடர்ந்து, மகாராட்டிரம், கரு நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களும், ஒவ்வொரு மாநிலமும், தன் பங்கிலான கிருஷ்ணா நதி நீரில் 5 டி.எம்.சியை சென்னைக் குடிநீருக்கு ஒதுக்க இசைந்தன.

பொதுமக்களுக்கெனக் குடிநீர் லாரி நீரேற்றல்



1983-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18-ஆம் நாள், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு அரசுக் கிடையில், ஏற்பட்ட ஒப்பந்தத்தின் படி கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் தொடங்கி நடைபெற்று வருகின்றது.

இந்த ஒப்பந்தத்தின்படி, 34 கோடி கனமீட்டர் (12 டி.எம்.சி) தண்ணீர் ஆண்டுதோறும், தமிழ் நாட்டின் எல்லையில் தரப்படும். இதனால் சென்னைப் பெருநகருக்கு நாளொன்றுக்கு 95 கோடி லிட்டர் தண்ணீர் வழங்குவது சாத்தியமாகும்.

ரூ.937 கோடி மதிப்பீட்டில் உருவாகிவரும் இத்திட்டத்திற்குத் தமிழ்நாட்டின் பங்கு ரூ.250.98 கோடியாகும். இதனைத் தொடர்ந்து, சென்னைக் குடிநீர் வாரியம் கிருஷ்ணா நதி நீரைத் தூய்மை செய்து மக் களுக்கு வழங்க ரூ.410 கோடிக்குத் திட்டம் தீட்டியுள்ளது.

இவ்வாறு, இருக்கும் நீர் நிலை ஆதாரங்களை மேம்படுத்துவதுடன், நீண்ட காலத் திட்டங்களையும் நிறைவேற்றி, தமிழகத் தலைநகரின் தாகம் தீர்க்கச் சென்னைக் குடிநீர் வாரியம் தமிழக அரசின் ஆதர வுடன் செவ்விதின் செயலாற்றி வருகின்றது.

# அண்ணலைக் கவர்ந்த
# ஆச்சார்ய நரேந்திர தேவா



**1929** ஆம் ஆண்டு. காசி வித்யா பீடத்தின் பட்டமளிப்பு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக அண்ணல் காந்தி அடிகள் அழைக்கப்பட்டிருந்தார். அண்ணல், வழக்கமான நான்கு முழ வேட்டியும் துண்டும் அணிந்தவாறு வந்திருந்தார். பட்டமளிப்பு விழா என்பதற்காகச் சிறப்பான ஆடை எதுவும் அவர் அணிந்திருக்கவில்லை

மேடையில் அமர்ந்திருந்த அண்ணலிடம் உயரமான மனிதர் ஒருவர் நெருங்கி வந்தார். தமது கையிலே வைத்திருந்த பட்டமளிப்பு விழா அங்கியை அண்ணலிடம் கொடுத்து, ''பாபுஜி'' தாங்கள் இப்போது இந்த உடையை அணிந்து கொள்ளுங்கள்'' என்று கூறினார்.

எப்போதுமே இதுபோன்ற சம்பிரதாயங்களை விரும்பாதவர் அண்ணல். ஆனால் அன்று எப்படியோ அந்தப் புதிய மனிதரின் பார்வையினால் கவரப்பட்டார். ''இந்த உடையை நான் அணிய மாட்டேன்'' என்று சொல்ல முடியாத நிலைக்கு ஆளானார்.

வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டு ஐந்தாம் ஜார்ஜ் மன்னரிடம் உரையாடுவதற்குச் சென்றிருந்த பொழுதுகூட அரை ஆடையுடன் காட்சி அளித்த அண்ணல், 'வேறு உடை அணியவேண்டும் என்று கட்டாயம் செய்தால் மன்னருடன் சந்திப்பே தேவையில்லை' என்று உறுதியாகத் தெரிவித்த அண்ணல், அந்தப் புதிய மனிதரிடம் மறுத்துச் சொல்ல முடியாதவராகி விட்டார்.

புதிய மனிதர் அளித்த அங்கியை அணிந்து கொண்டார். மன்னரால் சாதிக்க முடியாத செயலை ஒரு சாதாரண மனிதர் சாதித்துவிட்டார்.

அந்த மனிதர் யார் என்று அண்ணலுக்குத் தெரியாது. விழா முடிந்து ஸ்ரீபிரகாசா அவர்களுடன் காரில் சென்று கொண்டிருந்த போது, 'ஆமாம் இன்று ஒரு புதிய மனிதரைச் சந்தித்தேன். மனிதரில் சிறந்த இத்தகைய மாணிக்கத்தை எப்படி இதுவரை என் கண்ணில் காட்டாமல் மறைத்து வைத்திருந்தீர்கள்?' என்று அண்ணல் வினவினார்.

''மகாத்மாஜி! மாணிக்கங்கள் தம்மை விரும்புவோரைத் தேடிச் செல்வதில்லை. அவை எவருக்குத் தேவையோ அவர்கள்தான் அவற்றைத் தேடிச் செல்ல வேண்டும்'' என்று பதிலுரைத்தார் ஸ்ரீபிரகாசா.

முதல் சந்திப்பிலேயே அண்ணலின் மனத்தில் இடம்பெற்றுவிட்ட அந்த மாணிக்கம் - மாமனிதர் - ஆச்சார்ய நரேந்திர தேவா ஆவார்.

உத்திரப் பிரதேச மாநிலத்தில் அயோத்தி என்னும் நகருக்கு அருகில் உள்ள சீதாபூர் கிராமத்தில் வாழ்ந்து வந்தார் பாபு பலதேவ் பிரசாத் என்னும் வழக்கறிஞர்.

**புலவர் தமிழ்ப்பித்தன்**

பஞ்சாபி கார்தி குடும்பத்தைச் சேர்ந்த அவரது புதல்வனாக 1889 அக்டோபர் 30 ஆம் நாளில் பிறந்தார் அவனாசிலால்.

வழக்கறிஞர் தொழிலை முன்னிட்டு பலதேவ் பிரசாத், சீதாபூரை விட்டு, பைசாபாத்திற்குக் குடியேறினார். அவரது இல்லம் நற்பணிகளுக்கு உறைவிடமாகத் திகழ்ந்தது. துறவிகள் பலரும் அவ்வில்லத்திற்கு வந்து தங்குவதுண்டு.

பண்டித மாதவ் பிரசாத் மிஸ்ரா என்னும் துறவி, பலதேவின் வீட்டிற்கு வந்து மாதக் கணக்கில் தங்குவார். குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களுக்கெல்லாம் செல்லப் பெயர் சூட்டுவது அவருக்கு மகிழ்வளிக்கும் பணி. அவனாசிலாலை - அன்புடன், 'நரேந்திர தேவா' என்று பெயரிட்டு அழைத்தார். அந்தப் பெயரே குழந்தைக்கு நிலைத்து விட்டது.

மகன் நரேந்திர தேவாவிற்கு, தந்தை பலதேவ், ஆங்கிலம் சொல்லிக் கொடுத்தார். பின்னர் தக்க ஆசிரியர்களை நியமித்து இந்தி, சமஸ்கிருதம், உருது, பார்சி முதலிய மொழிகளைக் கற்பிக்கச் செய்தார். பதின்மூன்றாவது வயதில் தான் நரேந்திர தேவா பள்ளிக்கூடம் சென்றார். அதுவரை வீட்டிலேயே கல்வி கற்பிக்கப்பட்டது. பத்தாவது வயதிலேயே இந்தியப் பண்பாட்டில் ஆழ்ந்த பற்றும், விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமும் நரேந்திர தேவாவிற்கு ஏற்பட்டது.

பத்தாவது வயதிலேயே துளசிதாஸரின் இராமாயணம், மகாபாரதத்தின் இந்திமொழி பெயர்ப்பு ஆகியவற்றை நரேந்திர தேவா படித்தார். வேத சுலோகங்களைப் பிழையின்றி ஒப்புவித்தார்.

லக்னோவில் 1899-ல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்ற பலதேவ் பிரசாத், தனது மகன் நரேந்திர தேவாவையும்

அழைத்துச் சென்றார். மாநாட்டு நடவடிக்கைகள் எதுவும் 10 வயதுச் சிறுவரான நரேந்திர தேவாவிற்குப் பிடிபடவில்லை, என்றாலும் அப்போதுதான் எரவாடா சிறையிலிருந்து விடுதலையாகி மாநாட்டில் கலந்து கொண்ட லோகமான்ய பாலகங்காதர திலகர் மீது அவருக்கு ஒரு பற்று - பக்தி ஏற்பட்டுவிட்டது. நாளாக நாளாக இந்தப் பற்று அதிகரித்தது.

1906-ல் நரேந்திர தேவாவின் உயர்நிலைக் கல்வி முடிவுற்றது. பண்டித மதன் மோகன் மாளவியா அவர்களின் அறிவுரைப்படி - நரேந்திர தேவாவை அலாகாபாத் மேயா மத்திய கல்லூரியில் சேர்த்தார் அவரது தந்தை. அங்கு விடுதியில் தங்கிப் படித்தார் நரேந்திர தேவா. அப்போது பல பெரியோர்களிடம் அவருக்கு நாட்டம் ஏற்பட்டது.

கல்லூரி மாணவப் பருவத்திலேயே, புரட்சி இயக்க நூல்களைப் படிப்பதிலும் ஆர்வம் காட்டினார் தேவா. மாஜினியின் நூல்கள், பிரெஞ்சுப் புரட்சி நூல்கள், திலகர், அரவிந்தர் ஆகியோரின் நூல்கள் அவரைக் கவர்ந்தன.

நாட்டு விடுதலைக்கு வன்முறையே ஏற்றது என்ற கருத்து அந்நாளில் சில இளைஞர்களிடம் காணப்பட்டது. தேவாவிற்கு அந்தக் கருத்தில் உடன்பாடு கிடையாது.

பி.ஏ. பட்டம் பெற்ற பின்னர், தேவா, பனாரஸ் சென்று கியூன்ஸ் கல்லூரியில், அகழ்வாய்வுத் துறை வகுப்பில் சேர்ந்து எம்.ஏ. பட்டம் பெற்றார்.

வழக்கறிஞர் பணியில் ஈடுபட அவருக்கு நாட்டம் இல்லாதிருந்தது. ஆயினும் அந்தத் தொழிலில் இருந்தால்தான் பொதுப்பணி புரிவதற்கு அதிக வாய்ப்பு ஏற்படும் என்பதை உணர்ந்து, சட்டம் படிக்க விரும்பினார். விரும்பிய வண்ணமே ஈடுபட்டார். சட்டப்படிப்பில் தேறினார். 1916ல், பைசாபாத்தில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார்.

''அரசு நிர்வாகங்களில் இந்தியர்கள் படிப்படியாக ஈடுபடுத்தப்படுவர்'' என்று பிரிட்டிஷ் அரசு 1917-ல் ஓர் அறிக்கையை வெளியிட்டது. அதனைத் தீவிரவாதிகள் எதிர்த்தார்கள். ''நிர்வாகப் பணி பெறுவதல்ல நமது கொள்கை! முழு விடுதலை வேண்டும். இதுவே நமது இலட்சியம்'' எனத் திலகர் அறிவித்தார். இளைஞருலகம் அவரைத் தீவிரமாக ஆதரித்தது. அதில் முன்னணி இடத்தில் இருந்தவர் நரேந்திர தேவா.

இந்நிலையில் முதலாவது உலகப் பெரும்போர் முடிவுற்றது. பிரிட்டனின் கை வலுத்தது. இந்த தைரியத்தில் - இந்தியர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை ஆங்கில அரசு மீறியது. இந்தியரின் உரிமைகளையும் நசுக்க முயன்றது. ரௌலட் சட்டம், மார்ஷல் சட்டம் போன்ற பயங்கர சட்டங்களை நடைமுறைப்படுத்தியது. ஜாலியன் வாலா பாக்கில் ஆயிரக் கணக்கான மக்களைச் சுட்டுக் கொன்றது.

இந்தச் சமயத்தில், இந்திய விடுதலைப் போர்க்களத்தில் அண்ணல் காந்தி அடிகள் நுழைந்தார். அவரது முழக்கத்தை மக்கள் பேரார்வத்துடன் கேட்கத் தலைப்பட்டனர். 1920-ஆம் ஆண்டு கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் அண்ணலின் குரல் முன்னணி பெற்றது.

''மாணவர்கள் கல்விக்கூடங்களை உதறித் தள்ளவேண்டும். சட்டமன்றத் தேர்தலை காங்கிரஸ் இயக்கம் உதற வேண்டும்'' என்றெல்லாம் அண்ணல் சில கொள்கைகளை வலியுறுத்தினார்.

அண்ணலின் குரல், தேவாவின் செவிகளில் பதிந்தது. வழக்கறிஞர் தொழிலை உதறித் தள்ளினார். ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார்.

அந்தச் சமயத்தில் திலகர் மறைந்துவிட்டதால் இயக்கத்தின் முழுத் தலைமைப் பொறுப்பும் அண்ணலிடம் வந்தது. ஒத்துழையாமை இயக்கத்தில் முனைப்பு ஏற்பட்டது. அதனை அடக்குவதற்கு ஆங்கில அரசு புதுப்புதுச் சட்டங்களை உலா வரச் செய்தது. விடுதலை உணர்வு கொண்ட பெருமக்கள் அதற்கெல்லாம் அஞ்சவில்லை; அயரவில்லை. தேவா போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார்; ஒரு முறை அல்ல, பல முறை.

*1920, 1930, 1932, 1941, 1942* ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டு சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்.

அந்நிய ஆங்கிலேயர் நடத்தும் கல்விக் கூடங்களில் மாணவர்கள் பயிலக் கூடாது என்று கட்டளையிட்ட அந்நாளைய நாட்டியக்கத் தலைவர்கள், புதிய கல்வி நிலையங்களை உருவாக்கினர். இந்தியக் கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்குத் திட்டமிட்டனர். அப்படி ஏற்பட்ட அமைப்புகளில் ஒன்று காசி வித்யா பீடம். சிவபிரசாத் குப்தா என்னும் நாட்டுப் பற்றாளர், அதனை நிறுவுவதற்கு ரூ.10 இலட்சம் நன்கொடையாக வழங்கினார்.

தத்துவ அறிஞர் பாபு பகவான் தாஸ், வித்யா பீடத்தின் முதல்வராகவும், பாபு சம்பூரணானந்த் தத்துவ ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டனர்.

முதல்வர் பகவான்தாசும் நரேந்திர தேவாவும் நண்பர்கள்; கல்லூரித் தோழர்கள். ஆதலால் தேவாவை வித்யா பீடத்தில் பணியாற்ற அழைத்தார் பகவான்தாஸ். பண்டித ஜவகர்லால் நேருவும் தேவாவிடம் வலியுறுத்தினார். இரு பெருமக்களின் விருப்பத்தையும் தட்டிக் கழிக்க முடியாததால், காசி வித்யா பீடத்தில் பேராசிரியர் பணியில் சேர்ந்தார் தேவா.

பல்கலைக் கழகத்தில் பண்டைக் கால குருகுல வாழ்க்கையை அவர் வாழ்ந்து காட்டினார். மாணவர்கள்



**ஆச்சார்ய நரேந்திர தேவா ஒரு அரிய மாறுபட்ட பிறவி; உணர்ச்சி, பண்பு, அறிவு, மனதின் முதிர்ச்சி முதலிய அனைத்திலுமே அவர் நான் கண்ட மற்ற பெரியார்கள் அனைவரிலும் மாறுபட்டவர் ஆவார்.**

**—பண்டித ஜவகர்லால் நேரு**

தங்கியிருந்த விடுதியிலேயே அவரும் தங்கினார். அவர்களிடம் பேரன் புடன் பழகினார். தமக்குக் கிடைத்து வந்த மாத ஊதியத்தில் ரூ. 500/- மட்டுமே சொந்தச் செலவுக்கு எடுத்துக் கொண்டு மீதிப் பணத்தை மாணவர் களின் நலனுக்கே செலவு செய்தார்.

வித்யா பீடத்தில் மாணவர் களுக்கு பாலி, பிராகிருதி ஆகிய புராதன மொழிகளையும் பயிற்று வித்தார். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், உருது, இந்தி, சமஸ் கிருதம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். இவற்றில் பெரும் பாலான மொழிகளை அவர் சிறை யிலிருந்த காலத்தில் கற்றுக் கொண்டார்.

ஏராளமான நூல்களை எழுதி யுள்ளார். பல நூல்களை மொழி பெயர்த்துள்ளார். தேவா எழுதிய நூல்களில் மிகச் சிறந்தது 'புத்த தரிசனம்' என்னும் நூலாகும்.

> சோஷலிச சித்தாந்தத்திற்கு ஆச்சார்ய நரேந்திர தேவா அளித்த கொடைக்கு நிகரே இல்லை. அவருடைய உன்னதமான சிந் தனைகள் சமதர்ம இயக்கத்திற்கு மட்டு மல்லாது, நாட்டின் புனரமைப்புக்கும் பேரு தவியாக இருந்தன. நவீன இந்தியாவின் தலை சிறந்த தலைவர்களில் ஒருவர் தேவா.
>
> —ஜெயபிரகாஷ் நாராயணன்



தூரக் கிழக்கு நாடுகள் வரலாறு, இந்திய வரலாறு ஆகியவற்றில் மிகுந்த திறமை பெற்றிருந்தார். இந்தியாவில் உள்ள எல்லா மொழி களையும் இணைத்து ஒரு பொது லிபியை உருவாக்க வேண்டும் எனத் திட்டமிட்டு உழைத்து வந்தார்.

''ஒவ்வொரு தென்னிந்தியரும் இந்தி மொழியைக் கற்க வேண்டும்; அதே போல் ஒவ்வொரு வட இந்தி யரும் தென்னிந்திய மொழி ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும்'' என வலியுறுத்தினார்.

கல்விப் பணியும், அரசியல் பணியும் அவரது இரு குறிக் கோள்கள். இரண்டுக்கும் இடையே பற்பல சமயங்களில் மோதுதல் ஏற் படுவதுண்டு. என்றாலும், வாழ் நாளின் இறுதிவரை இந்த இரு பணி களிலும் தனது கடமையை நிறை வேற்ற அவர் தவறியதில்லை.

1939-ல் 2வது உலகப் பெரும் போர் தொடங்கியது. அந்தச் சமயத் தில் அண்ணல் காந்தி அடிகள் பேச்சுரிமை வேண்டி, தனிநபர் அறப் போரைத் தொடங்கினார். ''நாடு விடுதலை பெறுவதற்குத் தேவை அனைத்து மக்களின் போராட்டமே தவிர, தனிநபர் அறப்போர் அல்ல'' என்று தேவா கூறினார் என்றாலும் தனிநபர் அறப்போரில் ஈடுபட்டுக் கைது செய்யப் பெற்றார், தேவா. 1941-ல் விடுதலை பெற்றார்.

தேவாவின் உடல்நிலை அடிக்கடி சீர்கெட்டது. சில நேரங்களில் தமது கருத்துக்கு மாறுதலான கருத்தை தேவா எடுத்துரைத்த போதும் கூட அவரிடம் அண்ணல் காந்தி அதிக மதிப்பு வைத்திருந்தார். அவரது உடல்நிலையை விசாரித்துக் கடிதம் எழுதுவார்.

சிறிது காலம் தன்னுடன் வார்தா வுக்கு வந்து தங்குமாறு அடிக்கடி தேவாவிடம் வேண்டிக் கொண்டார் அண்ணல். ஆனால் தேவா ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லித் தட்டிக் கழித்து வந்தார்.

1942-ன் துவக்கத்தில் வார்தா வில் நடைபெற்ற காங்கிரஸ் செயற் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட தேவா, அண்ணலின் வேண்டுகோளின் படி வார்தாவில் சில நாட்கள் தங் கினார். அவருக்குச் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

அப்போது ஒரு நாள், தேவா வின் உடல்நிலை மிகவும் மோசம் அடைந்தது. மருத்துவர்களே அஞ்சி விட்டனர். இரவு ஒரு மணியிருக்கும்; அண்ணலை எழுப்பிச் செய்தியைச் சொன்னார்கள். அன்று அண்ண லின் பேசா நோன்பு தினம் என்றா லும், தேவாவுக்காகத் தனது பேசா நோன்பைக் கைவிட்டு விட்டு, எழுந்து வந்தார். அவசர வாகனத் துக்கு ஏற்பாடு செய்து, அனுபவமிக்க மருத்துவர்களை வரவழைத்துச் சிகிச் சைக்கு ஏற்பாடு செய்தார்.

மறுநாள், தேவாவின் உடல் நிலை சற்றுத் தேறியது. அன்று அண்ணல் டில்லிக்குச் சென்று சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸைச் சந்திக்க வேண்டியிருந்தது. தேவாவை அந்த நிலையில் விட்டுச் செல்ல மன மில்லை. தேவாவின் வற்புறுத் தலுக்குப் பின்னர் அண்ணல் டில்லிக்குச் சென்றார். அங்குச் சென்ற போதும் தேவாவின் நினை வாகவே அவர் இருந்தார். அதனால் வார்தாவுக்கு விரைவில் திரும்பி விட்டார்.

1942 ஆகஸ்ட் போராட்டத் தைக் குறித்து அண்ணல் முனைப் பாகச் சிந்தித்த போது, தேவா அவ ருடன் இருந்தார் என்பதும் அண்ணல் தெளிவான முடிவினை மேற்கொள் வதற்கு, தேவாவுடன் நடத்திய கலந்துரைதான் காரணம் என்பதும் வரலாற்றுச் செய்திகள்.

1942 ஆகஸ்ட் எட்டாம் நாள் பம்பாயில் கூடிய அனைத்திந்திய காங்கிரஸ் கூட்டத்தில், ''வெள்ளை யனே வெளியேறு'' என்ற தீர் மானத்தைக் கொண்டு வந்தார் அண்ணல். ஜவகர்லால் நேரு முன் மொழிந்தார். நரேந்திர தேவா முழு மனத்துடன் தீர்மானத்தை வழி மொழிந்து பேசினார்.

ஆகஸ்ட் போராட்டம் தொடங் கியது. நாடெங்கும் மக்கள் போர் முரசு கொட்டினர். ஆங்கில அரசு அடக்குமுறை ஆயுதத்தைப் பயன் படுத்தியது. அண்ணல், கைது செய்யப் பட்டு எரவாடா சிறையில் வைக்கப் பட்டார்.

நரேந்திர தேவா, அபுல்கலாம் ஆசாத், ஜவகர்லால் நேரு, வல்லபாய் படேல் ஆகியோர் கைது செய்யப்பட்டு அல்மோரா சிறையில் அடைக்கப்பட்டனர்.

தலைவர்கள் பலர் சிறையில் அடைக்கப்பட்ட போதிலும் போராட் டம் நீடித்தது. நாட்டு விடுதலையை நாடிய இந்திய மக்கள் எல்லாரும் ஈடுபட்டதால், போராட்டம் வலுப் பெற்றது. ஆங்கில அரசு அஞ்சி நடுங்கியது. இனிமேல் இந்தியர்களை அடக்கி ஆள முடியாது என்ற முடி வுக்கு வந்தது.

சிறை வைக்கப்பட்ட தலைவர்கள் எல்லாரும் 1945 ஜூன் 14 ஆம் நாளன்று விடுதலை செய்யப் பட்டனர்.

1946ல் இடைக்கால அரசு ஏற்பட்டது. பண்டித ஜவகர்லால்

நேரு இந்தியப் பிரதமரானர். 1947ல் இந்திய நாடு இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் இரு பிரி வாக்கப்பட்டு, சுதந்திரம் பெற்றது.

காசி வித்யாபீடத்தில் தேவா ஆற்றிய பணியைக் கண்ட சில நண் பர்கள், லக்னோ பல்கலைக் கழகத் தில் துணை வேந்தர் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று அவரிடம் வேண்டினர். புதிய சூழ்நிலை அவரது நோயைக் குறைக்க உதவும் என்று சொல்லப்பட்டது. அதன் காரண மாகவும் லக்னோ பல்கலைக் கழகப் பேராசிரியர்களின் தொடர் முயற்சி யாலும் தேவா, லக்னோ பல்கலைக் கழகப் பணியை ஏற்றுக் கொண்டார்

தேவாவின் உடல்நிலை 1951ல் மிகவும் மோசமான நிலையை அடைந்தது. அதனால் லக்னோ பல்கலைக் கழகப் பணியைத் துறந் தார். ஆனால் மத்திய கல்வி அமைச்சர் அபுல்கலாம் ஆசாத் அவர்களின் வற்புறுத்தலின் காரண மாக 1952ல் மீண்டும் காசி வித்யா பீடத்தில் துணைவேந்தர் பதவியை ஏற்கலானார். தொடர்ந்து நீண்ட காலம் அவரைப் பணி ஆற்ற விட வில்லை - ஆஸ்துமா நோய்! 1954 வாக்கில் அப்பதவியையும் துறந்து, அரசியலில் முழு ஈடுபாடு கொண்டார்.

1956-ஆம் ஆண்டு வாக்கில் தேவாவின் உடலநிலை மிகமிக மோசமாகியது. அப்போது சென்னை மாகாணத்தில் ஆளுநராக இருந்த ஸ்ரீபிரகாசா, தேவாவின் உற்ற நண்பர் ஆவார். தேவாவை 'ஆச்சார்ய' என்று அழைத்தவரும் இவரே!

''பனிக்காலத்தில் தமிழகத்தில் குளிர் மிதமாக இருக்கும். இங்கு (பெரியார் மாவட்டத்தில் உள்ள) பெருந்துறையில் சிறந்த மருத்துவ மனை உள்ளது. எனவே இங்கு வந்து சிகிச்சை பெறலாம்'' என்று தேவாவுக்கு வேண்டுகோள் விடுத் தார் ஸ்ரீபிரகாசா.

தேவா ஒப்புக் கொண்டு சென் னைக்கு வந்தார். அவரைப் பெருந் துறை மருத்துவமனையில் சேர்த்தார் ஆளுநர். தேவாவின் உடல்நிலை தேறி வந்தது. ''கடந்த ஐந்து ஆண்டு களாக எனது உடல்நிலை இவ்வளவு நன்றாக இருந்ததில்லை; இப்போது நன்றாக உள்ளது'' என்று சொல்லி மகிழ்வெய்தினார் தேவா.

பிப்ரவரி 6-ஆம் நாளன்று அவரைச் சந்திப்பதற்காகச் சென்ற ஸ்ரீபிரகாசா, அவர் நலம் பெற்று வருவது கண்டு மகிழ்ந்தார். அவரைத் தனது காரில் வைத்துச் சிறிது தூரம் சுற்றுப் பயணம் செய்தார். அந்தப் பயணம் தேவாவின் உடல் நலத்தைப் பாதித்துவிட்டது. பிப்ரவரி 8-ஆம் நாளன்று படுத்த படுக்கையாகி விட்டார்.

அச்சமயம் - தேவாவின் அறி வுரைக்காக பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழுக் கூட்டம் பிப்ரவரி 11,12,13 ஆகிய நாட்களில் பெருந்துறையில் கூட்டப் பட்டது. மருத்துவர்கள் தடுத்தும்கூட அந்தக் கூட்டத்தில் 45 நிமிடம் மொழிவாரி மாநிலப் பிரிவினை குறித்துத் தேவா உரையாற்றினார். அந்தச் செயலும் அவரது உடல்நலக் குறைவை அதிகரித்து விட்டது.

தேவாவின் உடல்நிலை மோச முற்றதை அறிந்த ஸ்ரீ பிரகாசா, உடனே பெருந்துறைக்கு விரைந்தார். தேவாவை லக்னோவுக்கு அனுப்பி வைக்கத் திட்டமிட்டார். பிப்ரவரி 19-ஆம் நாளன்று தேவாவையும் அவரது துணைவியாரையும் தமது காரில் அமர்த்திக் கொண்டு, கோவை விமான நிலையத்தை நோக்கிப் புறப்பட்டார் ஸ்ரீ பிரகாசா

பெருந்துறையிலிருந்து 10 மைல் தொலைவில் உள்ள ஈரோடு செல்லும் போதே நிலைமை மிகவும் மோச மாகிவிட்டது. அங்குள்ள பிராஜக்ட் அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டு, படுக்க வைக்கப்பட்டார். சில விநாடிகளில் தேவாவின் இன்னுயிர் பிரிந்துவிட்டது.

தேவாவின் மரணச் சேதி நாட்டில் உள்ள எல்லாத் தரப்பினரையும் உலுக்கிவிட்டது.

20-ஆம் தேதி அவரது உடல் - லக்னோவை நோக்கி விமானத்தில் பறந்தது. உயிருடன் அவரை அனுப்பி வைக்க நினைத்த ஸ்ரீபிரகாசாவின் எண்ணம் நிறைவேறவில்லை; உயி ரற்ற உடலாகத்தான் அனுப்பிவைக்க முடிந்தது.

அன்று மாலையே தேவாவின் உடல், மோதிலால் மைதானத்தில் எரியூட்டப்பட்டது. மக்கள் வடித்த கண்ணீருக்கு அளவே இல்லை. தேவா எரியூட்டப்பட்ட இடத்தில் அவரது நண்பர் சி.பி. குப்தா அவர்களின் முயற்சியால் ஒரு நூலகம் உருவாக்கப்பட்டது.

அவர் உயிர்நீத்த ஈரோடு பிரா ஜக்ட் அலுவலகத்தில் தேவாவின் திருவுருவப்படமும் நினைவுக் கல்லும் அமைக்கப்பட்டன. அன்றைய முதல்வர் காமராஜர் தலைமையில், ஆளுநர் ஸ்ரீபிரகாசா நினைவுக் கல்லையும், திருவுருவப் படத்தையும் திறந்துவைத்தார்.

ஆண்டுக்கு ஒரு முறை பிப்ரவரி 19-ஆம் நாள் அன்று தேசபக்தர்களும்- சோஷலிஸ்டுகளும் அங்கே சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தேவா மறைவெய்திய அந்த மாளிகைக்கு 'ஆச்சார்ய நரேந்திர தேவ் நினைவு விடுதி' என்ற பெயரை 27.3.'89 அன்று தமிழக அரசு சூட்டி, அவருக்குப் பெருமை சேர்த் துள்ளது.

இந்திய நாட்டின் விடுதலைப் போரில் பெரும் பங்கு வகித்த ஆச்சார்ய நரேந்திர தேவா - இந்திய மக்கள் அனைவரும் ஏற்றிப்போற்றும் சிறப்புக்கு உரியவராக விளங்கினார். வரலாற்றில் அவருக்குத் தனி இடம் உண்டு. ●



சுயராஜ்ய கட்சி தொடர்பாக உரையாற்றுவதற்கு திலகர் 1907-ல் அலகாபாத்திற்குச் சென்றபோது அவரை வரவேற்க மாணவ சமு தாயம் ஆயிரக்கணக்கில் திரண்டெ ழுந்தது. திலகரை ரயில் நிலையத் திலிருந்து நகருக்குள் அழைத்து வரு வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கோச் வண்டியின் குதிரைகளை அவிழ்த்துவிட்டு விட்டு, சில மாணவாகள் தாங்களே வண்டியை இழுத்துச் செல்ல ஆர்வம் காட்டினர். திலகர், அவர்களைத் தடுத்து விட் டார். வண்டியை இழுக்க வந்த தீவிரமான மாணவர்களில் முதன் மையாக நின்றவர் அப்போது அலாகாபாத்தில் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த 17 வயது டைய நரேந்திர தேவா என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

8-ஆம் பக்கத் தொடர்ச்சி





திருமதி பொன்னுத்தாய் (நாதசுரம்)



திரு. தனபாண்டியன் (இசை ஆராய்ச்சியாளர்)

## திரு. ஆர். நடராஜன் (ஓவியர்)

கேரள மாநிலத்தைச் சேர்ந்த திரு. இராமகிருஷ்ணன், திருமதி தாயம்மாள் ஆகியோரின் மகனாக 1924 ஏப்ரல் 13 ஆம் நாளன்று பிறந்தவர் திரு. ஆர். நடராஜன் அவர்கள்.

தனது பத்தாவது வயதில் தந்தையாரிடம் 10 ஆண்டுக் காலம் ஓவியக் கலையைக் கற்றுக் கொண்ட இவர், பின்னர் ஓவிய மன்னர் திரு. கே. மாதவன் அவர்களிடம் பயிற்சி பெற்றார்.

கடந்த 45 ஆண்டுகளாக இவர் ஓவியம் தீட்டி வருகிறார். இவரது அரிய ஓவியங்கள் இந்தியா முழுதும் பரவியுள்ளதுடன் வெளிநாடுகளுக்கும் சென்று இவருக்குப் புகழ் ஈட்டிவருகின்றன. பல்வேறு பரிசுகள் பெற்றிருக்கிறார்.

## திரு. சித்தூர் கோபாலகிருஷ்ணன் (வயலின்)

முந்தைய சென்னை மாகாணத்தைச் சேர்ந்த சித்தூரில் திரு வேதாசல ஐயர், திருமதி மீனாட்சி அம்மாள் ஆகியோரின் மகனாக 1921 ஆகஸ்ட் 12 ஆம் நாளன்று பிறந்தவர் திரு சித்தூர் கோபால கிருஷ்ணன் அவர்கள்.

தமது 13-வது வயதில், (1934) தந்தையாரிடமே வயலின் கலையைப் பயிலத் தொடங்கினார். அதற்கு முன்னரே, வாய்ப்பாட்டு, ஹரிகதை ஆகியவற்றில் பயிற்சி உண்டு.

இவரது கலைப்பணி 53 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. திருவையாற்றில் உருவான தென்பிராந்திய கலாச்சார மையத்தின் அமைப்பாளராக 1987 நவம்பர் முதல் பணியாற்றி வருகிறார்.

## திரு குருவாயூர் துரை (மிருதங்கம்)

கேரள மாநிலத்தைச் சேர்ந்த குருவாயூரில், திரு ஜி.எஸ். கிருஷ்ண ஐயர், திருமதி என்.வி. மீனாட்சி அம்மாள் ஆகியோரின் மகனாக 1935 ஜூலை 2-ஆம் நாளன்று பிறந்தவர் திரு குருவாயூர் துரை அவர்கள்.

தமது எட்டாவது வயதில் (1943), பாலக்காடு சுப்பய்யர் அவர்களிடம் மிருதங்க இசை பயிலத்தொடங்கிய இவர், பின்னர் பழனி சுப்பிரமணியபிள்ளை அவர்களிடம் பயின்றார். நாற்பதாண்டுகளுக்கு மேலாகக் கலைப்பணி ஆற்றிவருகிறார். தமிழகத்தில் மட்டுமின்றி, அமெரிக்கா, மலேசியா, ரஷ்யா, ஜெர்மனி, சிங்கப்பூர், கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், லெபனான், ஹங்கேரி, போலந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான், துபாய் ஆகிய நாடுகளுக்கெல்லாம் சென்று கச்சேரிகளில் கலந்து கொண்டிருக்கிறார்.

## மதுரை எம்.எஸ். பொன்னுத்தாய் (நாதசுரம்)

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தைச் சேர்ந்த பழனி நகருக்கு அருகில் உள்ள புது ஆயக்குடியில் திரு ஸ்ரீபதி, திருமதி சுப்புத்தாய் ஆகியோரின் புதல்வியாக 1929 ஜூலை 5-ஆம் நாளில் பிறந்தவர் எம்.எஸ்.பொன்னுத்தாய் அவர்கள்.

தமது பத்தாவது வயதில் (1939) மதுரை நாதஸ்வர வித்துவான் பொன்னுச்சாமி பிள்ளை அவர்களின் குமாரர் நடேச பிள்ளையிடம் நாதஸ்வர இசைப் பயிற்சியில் சேர்ந்தார். நான்காண்டுகள் பயின்றார். பின்னர் மன்னார்குடி குருசாமி பிள்ளை, கோவில்பட்டி ராமையா பிள்ளை ஆகியோரிடம் பயின்றார்.

புகழ்பெற்ற நாதஸ்வர மேதை டி.என். ராஜரத்தினம் பிள்ளை அவர்களுடன் துணை நாதஸ்வரக் கலைஞராகவும் சில இசை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற பெருமை இவருக்கு உண்டு. திருச்சி வானொலி நிலையத்தில் 30 ஆண்டுக் காலம் தனி இசை நிகழ்ச்சி நடத்தியுள்ளார். கொழும்பு வானொலியிலும் இவரது நாதஸ்வரநிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. பம்பாய், செகந்திராபாத் போன்ற வெளி மாநிலங்களிலும், தமிழகத்தின் பட்டி தொட்டிகள் - நகரங்கள் ஆகியவற்றிலும் இவரது நாதஸ்வர இசை நிகழ்ச்சி நடந்துள்ளது.



திரு. வைரமுத்து (திரைப்படப் பாடல்)



திரு. லியோ பிரபு (நாடகம்)







திரு. கள்ளபார்ட் நடராஜன் (நாடகம்)



திரு. செந்தாமரை (திரைப்பட நடிகர்)

## திரு து.ஆ. தனபாண்டியன்
## (இசை ஆராய்ச்சியாளர்)

தஞ்சை நகரத்தில் திரு பெ. துரைப் பாண்டியன், திருமதி மரகதவல்லி தம்பதிக்கு 1921 அக்டோபர் 24-ஆம் நாளன்று மகனாகப் பிறந்தவர் திரு து.ஆ. தனபாண்டியன் அவர்கள்.

எட்டாவது வயது முதல் 20-வது வயது வரை தாயார் மரகதவல்லி அவர்களிடம் வாய்ப்பாட்டு இசைப்பயிற்சி பெற்றார். திரு எம்.என். நடராஜ பிள்ளையிடம் 1944-ல் புல்லாங்குழல் பயிற்சி பெற்றார்.

கலைத்துறையில் 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றி வருகிறார் இவர், 1982 ஜனவரி முதல், தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இசைப் பேராசிரியராகப் பணி ஆற்றிவருகிறார்.

## திரு வைரமுத்து
## (திரைப்படப் பாடல்)

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வடுகபட்டியில், திரு இராமசாமித் தேவர், திருமதி அங்கம்மாள் ஆகியோரின் மகனாக 1954 ஜனவரி 15-ஆம் நாளன்று பிறந்தவர் திரு வைரமுத்து அவர்கள். பள்ளியில் பயில்கின்ற காலத்திலேயே கவிதை எழுதுவதில் இவருக்கு மிகவும் ஆர்வம் ஏற்பட்டது. பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன் ஆகிய கவிஞர்களிடம் இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. பேரறிஞர் அண்ணா - கலைஞர் ஆகியோரின் எழுத்துக்கள் இவரைக் கவர்ந்துள்ளன. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் முதுகலை பயின்றவர் இவர்.

திரைப்படத் துறையில் பாடல் ஆசிரியராகப் பத்தாண்டுக் காலத்திற்கு மேல் ஒளி வீசித்திகழும் இவர், சிறந்த பாடலாசிரியருக்கான தமிழக அரசின் விருதினை 1984 ஆம் ஆண்டிலும் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை 1986 ஆம் ஆண்டிலும் பெற்றுள்ளார்.

## திரு. லியோ பிரபு
## (நாடகம்)

கோயம்புத்தூரில் திரு முத்து, திருமதி ஆரோக்கிய மேரி ஆகியோரின் மகனாக 1941 அக்டோபர் 10-ஆம் நாளன்று பிறந்தவர் திரு லியோ பிரபு அவர்கள்.

பழம் பெரும் நடிகர் திரு எஸ்.வி. சகஸ்ரநாமம் அவர்களின் சேவா ஸ்டேஜ் நாடகக் கல்வி நிலையம் நடத்திய பயிற்சி வகுப்பில் 4 மாதம் பயிற்சி பெற்ற இவர், பின்னர் தேவி நாடக சபாவில் ஓராண்டுக் காலம் பணியாற்றினார். பின்னர் மீண்டும் சேவா ஸ்டேஜ் குழுவின் நடிகரானார். 33 ஆண்டுகளாகக் கலைப்பணி புரிந்து வரும் இவர், லிட்டில் ஸ்டேஜ், சாந்தி நிகேதன், கோல்டன் ஸ்டேஜ், நாடகப் பிரியா ஆகிய நிறுவனங்களின் நாடகங்களில் நடித்திருக்கிறார். நடிப்பதுடன், எழுத்து, இயக்கம், தயாரிப்பு ஆகிய துறைகளிலும் ஈடுபாடு கொண்டு பணியாற்றி வருகிறார்.

## கள்ளபார்ட்
## திரு டி.ஆர். நடராஜன்
## (நாடகம்)

தஞ்சையில், திரு கள்ளபார்ட் ராமலிங்கம், திருமதி பரிபூரணத்தம்மாள் ஆகியோரின் மகனாக 1925 நவம்பர் 11-ஆம் நாளன்று பிறந்தவர் திரு டி.ஆர். நடராஜன் அவர்கள்.

தமது பத்தாவது (1935) வயதிலேயே நாடக மேடை ஏறியுள்ளார் இவர். பின் பாட்டு அப்பிராவ் அவர்களிடம் நடிப்புப் பயிற்சி பெற்று பின்னர் நவாப் திரு ராஜ மாணிக்கம் பிள்ளை அவர்களது நாடக நிறுவனத்தில் 12 ஆண்டுக்காலம் குருகுல வாசம் செய்திருக்கிறார். நாடகங்களில் கதாநாயகன் வேடம், பெண் வேடம், வில்லன் வேடம் எனப் பல்வேறு விதமான பாத்திரங்களைத் தாங்கி நடித்தவர் இவர்.

1935-ஆம் ஆண்டிலிருந்து கலைப்பணி புரிந்து வரும் இவர், திரைப்படத்துறையில் அறிமுகமாகி, பல படங்களில் நடித்துள்ளார்.

## திரு செந்தாமரை
## (திரைப்பட நடிகர்)

செங்கை அண்ணா மாவட்டத்தின் தலைநகரான காஞ்சிபுரத்தில் திரு திருவேங்கடம், திருமதி வேதம்மாள் ஆகியோரின் மகனாக 1935 ஏப்ரல் 13-ஆம் நாளில் பிறந்தவர் திரு செந்தாமரை அவர்கள்.

காஞ்சிபுரத்தில் பிறந்ததால் இவர் சிறு



திரு. ராதா ரவி (திரைப்பட நடிகர்)



திரு. பிரபு (திரைப்பட நடிகர்)





திரு. எஸ்.எஸ். சந்திரன்
(நகைச்சுவை நடிகர்)



திரு. சோமு
(திரைப்பட இயக்குநர்)



வயது முதலே அறிஞர் அண்ணா அவர்களுடன் பழக வாய்ப்புப் பெற்றிருந்தார். அதனால் அண்ணா எழுதி நடித்த சந்திரமோகன், சந்திரோதயம் நாடகங்களில் இவரும் நடித்தார். நடிக்கத் தொடங்கிய ஆண்டு 1956. பேரறிஞர் அண்ணாவின் நாடகக்குழுவில் பணியாற்றிய இவர், பின்னர் எம்.ஜி.ஆர் நாடகக்குழு, சிவாஜிகணேசன் நாடகக்குழு, உதய சூரியன் நாடகக்குழு ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.

34 ஆண்டுகளாகக் கலைப்பணி ஆற்றி வரும் இவர், திரைப்படத்தில் சிறந்த வில்லன் நடிகராக நடித்ததற்காகத் திரைப்பட ரசிகர் சங்கத்தால் 3 முறை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

## திரு. ராதா ரவி
## (திரைப்பட நடிகர்)

நடிகவேள் எம்.ஆர்.ராதா, திருமதி ஆர். தனலட்சுமி ஆகியோரின் மகனாக திருச்சிராப்பள்ளியில் 1953 ஜூலை 29-ஆம் நாளில் பிறந்தார் திரு ராதா ரவி அவர்கள்.

தமிழக நாடகத் துறையில் தனிப் பெரும் இடத்தைப் பெற்ற தமது தந்தையிடமே இவர் நடிப்புக் கலையைக் கற்றுக் கொண்டார். மாணவப் பருவத்திலேயே பள்ளியில் நடைபெற்ற 'ஜூலியஸ் சீஸர்' என்னும் நாடகத்தில் பங்கேற்றுப் புகழ் ஈட்டினார். 1969 முதல் நாடகங்களில் நடித்து வரும் இவர், 1974-ஆம் ஆண்டில் திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கினார்.

வி.கே.ஆர். நாடகக் குழு, டி.கே.எஸ் சந்திரன் நாடகக் குழு, எம்.ஆர்.ஆர். வாசு நாடகக்குழு ஆகியவற்றில் நடித்துப் பக்குவப்பட்ட இவர், நடிகவேள் தியேட்டர்ஸ் என்ற பெயரில் சொந்தத்தில் ஒரு நாடகக் குழுவை அமைத்துள்ளார். கலைஞரின், 'தூக்கு மேடை' மற்றும் 'ரத்தக் கண்ணீர்' ஆகிய நாடகங்களை அவ்வப்போது நடத்தி வருகிறார்.

## திரு. பிரபு
## (திரைப்பட நடிகர்)

சென்னை நகரில் திரு. சிவாஜி கணேசன் திருமதி கமலா ஆகியோரின் மகனாக 1956 டிசம்பர் 31 ஆம் நாளன்று பிறந்தவர் திரு. பிரபு அவர்கள்.

1982-இல் திரைப்படத்தில் நடிக்கத் தொடங்கிய இவர் இதுவரை 80 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். இவர் நடித்து பல படங்கள் 100 நாட்களைத் தாண்டி ஓடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு அமைப்புகள் சிறந்த நடிகர் என்ற விருதை இவருக்கு அளித்துள்ளன. அறுவடைநாள் என்ற படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகர் என்று இவர் 1987-இல் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்.

## திரு எஸ்.எஸ். சந்திரன்
## (நகைச்சுவை நடிகர்)

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைச் சேர்ந்த சிவகங்கையில் திரு சேது ராமன், திருமதி சீதாலெட்சுமி தம்பதியின் மகனாக 1941 மே 21-ஆம் நாளில் பிறந்தவர் திரு எஸ்.எஸ். சந்திரன் அவர்கள்.

சிவகங்கையில் ராஜா உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போதே தமது 14வது வயதில், இவர் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். திரு ராஜேந்திரன், திரு நாகராஜ ஐயர், திரு லெனின் ஆகியோரின் நாடகக் குழுக்களில் பணியாற்றி, சிறுவயதிலேயே நகைச்சுவைப் பாத்திரங்களை ஏற்று நடித்தார் இவர். ஏறக்குறைய 33 ஆண்டுகளாகக் கலைத்துறையில் அங்கம் பெற்றிருக்கும் இவர், சில நாடகங்களை இயக்கியும் இருக்கிறார். திரைப்படங்களில் நகைச்சுவைப் பாத்திரத்தை ஏற்று நடித்து வரும் இவர்,உதவி இயக்குநராகவும் பணியாற்றி அனுபவம் பெற்றுள்ளார்.

முதல்வர் கலைஞர் அவர்களிடம் 'நகைச்சுவைச் செல்வர்' என்ற பட்டம் பெற்ற சிறப்பும் இவருக்கு உண்டு.

## திரு கே. சோமு
## (திரைப்பட இயக்குநர்)

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தைச் சேர்ந்த பழனியில் திரு கா. கந்தசாமி பிள்ளை, திருமதி சந்திர பூரணம் அம்மாள் ஆகியோரின் மகனாக 1917 ஜூன் 12 ஆம் நாளன்று பிறந்தவர் திரு கே.சோமு அவர்கள்.

தொடக்கத்தில் நடிப்புத்துறையில் ஈடுபட விரும்பிய இவருக்கு அந்தத் துறையில் வாய்ப்புகள் அதிகம் கிட்டவில்லை, சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தில்





திரு. மலேசியா வாசுதேவன்
(பின்னணிப் பாடகர்)



திருமதி ராஜேஸ்வரி
(பின்னணிப் பாடகி)



திரு. ராமமூர்த்தி
(திரைப்பட இசை)





திரு. சொர்ணம்
(திரைப்பட உரையாடல்)

திரைப்பட உதவி இயக்குநர் பணி கிடைத்தது. அங்கு 6 ஆண்டுக்காலம் 15 படங்களில் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தார். இவர், முதன் முதலாக இயக்குநராகப் பொறுப்பேற்ற படம் 'மாங்கல்யம்' ஆகும். 1948-ஆம் ஆண்டிலிருந்து 1978 இறுதிவரை, திரைப்படத்துறையில் பணியாற்றிய இவர், 15 படங்களுக்கு மேல் இயக்கியுள்ளார்.

## திரு மலேசியா வாசுதேவன் (பின்னணிப் பாடகர்)

மலேசிய நாட்டில் போர்ட்டிக்ஷன் என்னும் ஊரில் திரு கே.சாத்து, திருமதி அம்மாளு அம்மையார் ஆகியோருக்கு மகனாக 1944 ஜூன் 15-ஆம் நாளன்று பிறந்தவர் திரு மலேசியா வாசுதேவன் அவர்கள்.

இவர், தமது 8-வது வயதிலேயே, (1952) தந்தையாரிடம் நாடகக் கலையைக் கற்றார். 5 ஆண்டுக்காலம் பயின்ற பின், தமது மூத்த சகோதரரிடம் இசைக் கலையைக் கற்றார். தொழில் நாடகக் கலைஞராக 5 ஆண்டுகளுக்கு மேல் இருந்திருக்கிறார். கடந்த 38 ஆண்டுகளாகக் கலைப்பணி ஆற்றிவரும் இவர், தமிழக அரசு வழங்கும் சிறந்த திரை இசைப் பாடகர் விருதினைப் பெற்று உள்ளார்.

## திருமதி எம்.எஸ். ராஜேஸ்வரி (பின்னணிப் பாடகி)

மதுரை நகரில், திரு குப்புசாமி, திருமதி பி.வி. ராஜசுந்தரி தம்பதிக்கு மகளாக 1935 பிப்ரவரி 5-ஆம் நாளன்று பிறந்தார் திருமதி எம்.எஸ். ராஜேஸ்வரி அவர்கள்.

இவர் 4வது வயதிலேயே தம் தாயாரிடம் இசைப் பயிற்சி பெற்றார். இவரது தாயார் நாடகங்களில் பங்கு கொண்டவர் என்பதும், திரைப்படக் கலை தொடங்கிய காலத்தில் விப்ர நாராயணா, அரிச்சந்திரா போன்ற படங்களில் நடித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1942 -ல் எச்.எம்.வி. நிறுவனத்தாரின் முழு நீள இசைத்தட்டில் பாடல்கள் பாடியிருக்கிறார். இவர், முதன் முதலில் பின்னணி பாடிய திரைப்படம் ''நாம் இருவர்'' ஆகும். இவர் இந்தி, மலையாளம், தெலுங்கு,கன்னடம் ஆகிய வேற்றுமொழிப் படங்களிலும் பின்னணி பாடியிருக்கிறார்.

## திரு டி.கே. ராமமூர்த்தி (திரைப்பட இசை)

திருச்சியில் திரு கிருஷ்ணசாமி, திருமதி நாகலக்குமி ஆகியோரின் மகனாக 1922 மே 18-ஆம் நாளில் பிறந்தவர் திரு டி.கே. ராமமூர்த்தி அவர்கள். தமது 12 வயதிலேயே (1934) தமது தந்தையாரிடம் கர்நாடக இசையை நான்காண்டுக் காலம் கற்றுக் கொண்டார். இவரது தந்தையார் புகழ்பெற்ற வயலின் இசைக் கலைஞர் ஆவார்.

1939-ஆம் ஆண்டின் இறுதியில் எச்.எம்.வி இசைத் தட்டு நிறுவனத்திலும் 1941-ஆம் ஆண்டில் கொலம்பியா நிறுவனத்திலும் (சரஸ்வதி ஸ்டோர்ஸ்) வயலின் இசைக் கலைஞராகப் பணியாற்றியிருக்கிறார். புகழ்பெற்ற திரைப்பட இசையமைப்பாளர் திரு சி.ஆர். சுப்புராமன் அவர்களிடம் உதவியாளராகச் சேர்ந்து, பல படங்களில் வயலின் இசைத்திருக்கிறார்.

. விசுவநாதனுடன் சேர்ந்து இவர் இசை அமைத்த படங்களில் பல, வெள்ளி விழாக்களைக் கொண்டாடியுள்ளன;

1965-க்குப் பின்னர், இவர் தனியாக இசை அமைக்கும் பணியை மேற்கொண்டார். இசை அமைத்த படங்களில் குறிப்பிடத்தக்கது 'மறக்க முடியுமா' ஆகும்.

## திரு. கே. சொர்ணம் (திரைப்பட உரையாடல்)

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவாரூரில் , திரு. டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி திருமதி மீனாட்சி அம்மையார் ஆகியோரின் மகனாக 1935 செப்டம்பர் 12 ஆம் நாளன்று பிறந்தவர் திரு. கே. சொர்ணம் அவர்கள்.

முரசொலி உதவி ஆசிரியராகப் பணி புரிந்த இவர் திரைப்படத் துறையில் கதை வசன ஆசிரியராகவும், பின்னர் பட இயக்குநராகவும் பணியாற்றியிருக்கிறார்.

31 ஆண்டுகளாகக் கலைப்பணி ஆற்றிவரும் இவர், சிறந்த திரைப்பட வசன ஆசிரியர் என்பதற்குரிய தமிழக அரசின் விருதை 1971-ஆம் ஆண்டில் பெற்றுள்ளார். தற்போது தமிழ்நாடு அரசின் திரைப்படக் கல்லூரித் தலைவராகப் பணிபுரிந்து வருகிறார்.



திருமதி சீதா
(திரைப்பட நடிகை)





திரு மஸ்தான்
(திரைப்பட ஒளிப்பதிவாளர்)



திரு. எல். பழனிசாமி (பரத நாட்டிய ஆசிரியர்)





திரு. தனஞ்சயன் (பரத நாட்டியக் கலைஞர்)

## திருமதி பி.எஸ். சீதா (திரைப்பட நடிகை)

சென்னை நகரில் திரு பி.எஸ். மோகன் பாபு, திருமதி சந்திரா ஆகியோரின் மகளாக 1970-ல் பிறந்தவர் திருமதி பி.எஸ். சீதா அவர்கள்.

சிறுவயதிலேயே கலை ஆர்வம் கொண்ட இவர், திரையுலகில் சேர்ந்து, நடிப்புத்துறையில் ஒளிவீசித் திகழ்கிறார். தமிழ்த் திரைப்படங்களிலும், மலையாளத் திரைப்படங்களிலும் இவர் நடித்துள்ளார்.

## திரு மு. மஸ்தான் (திரைப்பட ஒளிப்பதிவாளர்)

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு பா.கா. முஹம்மது இஸ்மாயில், திருமதி மீரா நாச்சியார் ஆகியோரின் புதல்வராக 1915 டிசம்பர் திங்களில் பிறந்தவர் திரு மு. மஸ்தான் அவர்கள். சிறுவயதிலேயே திரைப்படத் துறையில் ஒளிப்பதிவுப் பிரிவில் பணி யாற்ற விரும்பிய இவர், தமது 23வது வயதில் (1938) நியூடோன் ஸ்டுடியோ வில் தலைமை ஒளிப்பதிவாளராகப் பணி யாற்றிய ஜித்தன் பானர்ஜி அவர்களிடம் உதவியாளராகச் சேர்ந்தார்1956 ல் தனிப் பட்ட முறையில் பணிபுரியத் தொடங் கினார். சிறிது காலம் இலங்கைக்குச் சென்று சிங்களப் படங்களில் ஒளிப் பதிவு, இயக்கம் ஆகியவற்றை மேற்கொண்ட இவர், திரைப்படத் துறையில் 50 ஆண்டு அனுபவம் பெற்றவர் ஆவார்.

## திரு. எல். பழனிசாமி (பரத நாட்டிய ஆசிரியர்)

கோவை நகரில் திரு. என். லட்சுமண முதலியார், திருமதி அங்க முத்தம்மாள் ஆகியோரின் மகனாக 1924 டிசம்பர் 29-ஆம் நாளன்று பிறந்தவர் திரு. எல். பழனிசாமி.

தனது 9வது வயதில் (1937) தனது பெரிய தந்தையார் திரு. பந்த நல்லூர் வெங்கடாசல நட்டுவனாரிடம் பரதக் கலையைக் கற்றார். பின்னர் வழுவூர் ராமய்யா பிள்ளை, பதம் கௌரி அம்மாள் ஆகியோரிடமும் மற்றும் பலரிடமும் கற்றார்.

50 ஆண்டுகளாகக் கலைப் பணி ஆற்றிவரும் இவர், பல்வேறு விருதுகள் பெற்றுள்ளார். ஆயிரத்துக்கு மேற்பட்ட கலைஞர்களை உருவாக்கியுள்ளார்.

## திரு வி.பி. தனஞ்சயன் (பரதநாட்டியக் கலைஞர்)

கேரள மாநிலத்தில், கண்ணனூர் மாவட்டத்தில் உள்ள பையனூரில், திரு ஏ.ராம பொதுவால், திருமதி மாதவி அம்மா ஆகியோரின் மகனாக 1939 ஏப்ரல் 17 ஆம் நாளன்று பிறந்தவர் திரு வி.பி.தனஞ்சயன் அவர்கள்.

நாட்டியக் கலையில் பேரார்வம் கொண்டு, தமது 13 ஆம் வயதில் (1953) சென்னை கலாசேத்ரா கல்வி நிலையத்தில் சேர்ந்து பயின்றார்.

கடந்த 37 ஆண்டுகளாகக் கலைப் பணி ஆற்றிவரும் இவர், பரதகலாஞ்சலி என்னும் நாட்டியக் கல்வி மையத்தை அமைத்துப் பயிற்சி அளித்து வருகிறார்.

## திரு வி.பி. ராமதாஸ் (பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர்)

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வழு வூரில் திரு பி.பக்கிரிசாமி பிள்ளை — திருமதி ராஜம்மாள் ஆகியோரின் மகனாக 1936 ஜூன் 15 ஆம் நாளன்று பிறந்தவர் திரு வி.பி. ராமதாஸ் அவர்கள்.

தமது பதின்மூன்றாவது வயதில் (1949) மிருதங்க இசையைக் கற்கத் தொடங்கி, 7 ஆண்டுகள் பயின்றார்.

தமிழக அரசின் இசைக் கல்லூரியில் மிருதங்க விரிவுரையாளராக 7 ஆண்டுக் காலமாகப் பணியாற்றி வரும் இவர், கடந்த 34 ஆண்டுகளாகக் கலைப்பணி யில் ஈடுபட்டுள்ளார்.

## திரு ஐ.எஸ். முருகேசன் (பல இசை)

கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த இடிகரையில் திரு வி. சுப்பிர மணிய முதலியார், திருமதி எஸ். பொன்னம் மாள் ஆகியோரின் மகனாக 1930 ஆகஸ்ட் 4-ஆம் நாளன்று பிறந்தார் திரு ஐ.எஸ். முருகேசன் அவர்கள்.

தனது பத்தாவது வயதில், (1940) தவில் வித்வானாக தமது தந்தையாரிடம் தவில் வாசிக்கக் கற்றுக் கொண்ட இவர், நாளடைவில் பல்வேறு இசைக் கருவி களை இயக்குவதற்குத் திறமை பெற்றார்.

கடந்த 50 ஆண்டுகளாகக் கலைப் பணி ஆற்றிவரும் இவர், திரைப்பட இசைத் துறையிலும் நீண்ட காலம் பணிபுரிந்திருக் கிறார்.



திரு. வி.பி. ராமதாஸ் (பரத நாட்டிய மிருதங்கக் கலைஞர்)





திரு "மியூசிக்" முருகேசன் (பல இசை)

TNPSC

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## பிழை திருத்தங்கள்

1.9.1989 நாளிட்ட தமிழரசு பத்திரிகையில் பக்கம் 19-32-ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்/கீழே கலம் 2-இல் குறிப்பிட்டுள்ளபடி சில சாதிகளின் பெயர்கள் தவறுதலாக அச்சிடப்பட்டுள்ளன, இச்சாதிகளின் சரியான பெயர்களைக் கலம் 3-இல் குறிப்பிட்டுள்ளபடி திருத்தி வாசிக்கவும்.

| பட்டியலில் வரிசை எண். (1) | தவறுதலாக அச்சிடப்பட்ட சாதியின் பெயர் (2) | சரியான சாதியின் பெயர் (3) |
|---|---|---|
| 11 | கோவை | சேர்வை |
| 15 | சயலக்காரர் | சவலக்காரர் |
| 41 | கலர் பணிக்கர் | கலா பணிக்கர் |
| 43 | பெரிய சூரிய கள்ளர்கள் | பெரிய சூரியூர் கள்ளர்கள் |
| 45 | கால்வே கௌண்டர் | கால்வேலி கௌண்டர் |
| 58 | கார்ஜி | கார்வி |
| 86 | நன்குடி வேளார் | நன்குடி வேளாளர் |
| 102 | பெரும் சொள்ளர் | பெரும் கொள்ளர் |
| 120 | சந்தரம் செட்டி | சுந்தரம் செட்டி |
| 141 | வகுக ஆயர் | வடுக ஆயர் |
| 165 | மவுண்டான் | மவுண்டாடன் |
| 173 | புன்னனர் | புன்னான் |
| 180 | வள்ளார் | வண்ணார் |
| 188 | சுரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் | சூரியனூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 204 | கோரல தொட்ட போலா | கோரல தொட்ட போயா |
| 214 | கவிஞ்சி | கலிஞ்சி |
| 231 | புல்லாக் | புன்னான் |
| 237 | குரமாரி | சூரமாரி |
| 238 | சேம்ப நாடு | செம்பநாடு |
| 244 | ஜராஸி கவுண்டர்கள் | ஊராளி கவுண்டர்கள் |

நாள்: 1.2.1990

செயலாளர்.

TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தேர்வாணையத்தில் 1989-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ஆம் நாள் தமிழ்நாடு கைத்தறி மற்றும் நெசவுப் பணியில், கைத்தறி மற்றும் நெசவு உதவி இயக்குநர் பதவிக்கு நடத்தப்பட்ட முதன்மை எழுத்துத் தேர்வு முடிவின் அடிப்படையில் தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவு எண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு சென்னை - 2, அண்ணா சாலை அரசினர் தோட்டத்திலுள்ள அரசுப் பணியாளர் தேர்வாணையம் அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்வுக்கான நாள் மற்றும் நேரம் ஆகியன குறித்த விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படும். இப்பட்டியலில் இடம் பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 26 | 75 | 124 | 127 | 128 | 268 | 282 | 288 | 292 | 303 | 328 | 330 | 352 | 380 |
| 426 | 442 | 447 | 458 | 568 | 608 | 657 | 662 | 671 | 716 | 795 | 850 and 930 | | |

DIPR/568/MS/90/MCS

# TNPSC

# தொகுதி VII, VIII மற்றும் IX முதல் நிலைத் தேர்வுகள்

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தன்னுடைய விளம்பர எண். 55-ல் தொகுதி VII-ல் அடங்கிய செயல் அலுவலர், தரம் ஒன்று மற்றும் மூன்று தொகுதி VIII-ல் அடங்கிய தீயணைப்பு நிலைய அலுவலர் ஆகியவைகளுக்கு நேரடித் தேர்வு மூலம் நியமிக்கப்பட விண்ணப்பங்கள் கோரப்பட்டது. இப்பதவிகளுக்கு முதல் நிலைத் தேர்வு நடத்த தேர்வாணையம் முடிவு செய்துள்ளது. தேர்வாணைய அறிக்கை எண். 55-ல் தீயணைப்பு நிலைய அலுவலர் பதவிக்கு அறிவிக்கப்பட்டதுபோல் அல்லாமல் விண்ணப்பதாரர்கள் முதல் நிலைத் தேர்விற்கு (Preliminary Examination) உட்படுத்தப்பட்டு பின்னால் உடற் தகுதித் தேர்விற்கு அனுமதிக்கப்படுவார்கள். இப்பதவிகளுக்கு உண்டான முதல்நிலைத் தேர்வின் தேதி மற்றும் நாள்கள்கீழே ஒவ்வொரு தொகுதிக்கும் நேரே குறிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். (1) | பணி (2) | தேதி மற்றும் நாள் (3) | நேரம் (4) | தேர்வுத் தாள் (5) |
|---|---|---|---|---|
| 1. | தொகுதி VIII (எஸ்.எஸ்.எல்.சி. தகுதி) | சனிக்கிழமை 31.3.'90 | காலை 10 மணி முதல் 12 மணி வரை | பொது அறிவு, பாகம் ஒன்று (கொள் குறி) (Objective Type) மற்றும் பொது அறிவு, பாகம் இரண்டு (விரிவுரை மற்றும் சிறு குறிப்பு) (Descriptive Type) |
| 2. | தொகுதி VII (பட்டப்படிப்பு தகுதி) | சனிக்கிழமை 7.4.'90 | " | " |
| 3. | தொகுதி IX (மேல்நிலைக் கல்வித்தகுதி) | ஞாயிற்றுக்கிழமை 8.4.'90 | " | " |

தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு (Hall Ticket) தேர்வுக்கான இடம், நேரம் முதலியவை தேர்வுக்குப் பத்து தினங்களுக்கு முன்னதாகவே விண்ணப்பதாரர்களுக்குத் தனித்தனியே அனுப்பப்படும். தேர்வு நாளுக்கு ஒருவாரம் முன்னதாக தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு (Hall Ticket) கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே விண்ணப்பத்துடன் அனுப்பிய நிழற் படத்தின் மற்றொரு நகல் நிழற்படத்துடன், செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

சென்னை-600 002.

வி.குணாளன், இ.ஆ.ப.,
தேர்வு கட்டுப்பாடு அலுவலர்

DIPR/572/MS/90/ARIES

# தமிழ்நாடு மின்சார வாரியம்

## வட சென்னை அனல் மின்திட்டம்

### ஒப்பந்த விளம்பரம்

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்காக தனித்தனியே அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வரிசை எண். (1) | வேலையின் விபரம் (2) | விவரக் குறிப்பு (3) | வைப்புத் தொகை (4) | ஒப்பந்த வரையறைப் படிவம் பெற்றுக் கொள்ள கடைசித் தேதி (5) |
|---|---|---|---|---|
| (1) | ஒன்று "2 இ" வடிவ அரை நிரந்தரக் குடியிருப்பு (எண். 5 மட்டும்) கட்டுமானப் பணி அத்திப்பட்டு முகாமில் செய்வது சம்பந்தமாக | எஸ்.இ/சி. II 15/89-90 | ரூ. 3,500/- | 24-3-90 பகல் 12 மணி வரை |
| (2) | இரண்டு "4 எப்" வடிவ அரை நிரந்தரக் குடியிருப்பு (எண்கள் 4,5) கட்டுமானப் பணி அத்திப்பட்டு முகாமில் செய்வது சம்பந்தமாக | எஸ்.இ.சி II 16/89-90 | ரூ. 8,000/- | 24-3-90 பகல் 12 மணி வரை |

ஒவ்வொரு வேலைகளுக்கான ஒப்பந்த வரையறை

படிவத்தின் விலை — ரூ. 100/- தமிழ்நாட்டிற்குள்

— ரூ. 115/- தமிழ்நாட்டிற்கு வெளியே

ஒப்பந்த வரையறைப் படிவம் 12.3. 90 முதல் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவம் கடைசித் தேதியில் திறப்பதற்கு முன்னாள் மாலை 4 மணிக்குப் படிவம் கொடுப்பது நிறுத்தப்படும்.

ஒப்பந்த வரையறைப் படிவம் வேண்டுவோர் அந்தந்த வேலைக்கு மேலே குறிப்பிட்ட தொகையைப் பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ விளக்க விபர எண்ணையும், சுய முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட்டு துணை நிதிக்கட்டுப்பாடு அதிகாரி, வடசென்னை அனல் மின் திட்டம், எண்ணூர், சென்னை-57 என்ற முகவரியில் செலுத்தி அவர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அஞ்சல் மூலம் பெறப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தப் படிவத்திற்கும் ரூ. 15/- அதிகம் செலுத்த வேண்டும். அஞ்சல் மூலம் அனுப்பப்படும், ஒப்பந்த வரை படிவங்கள் உரியவருக்குச் சேராவிட்டாலோ, தாமதமாகப் போய் சேர்ந்தாலோ அதற்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒப்பந்த வரையறைப் படிவங்களில் சமர்ப்பிக்கப் படாத ஒப்பந்த வரையறைப் படிவங்களும் மேற்குறிப்பிட்ட நாள், நேரத்திற்குள் சமர்ப்பிக்கப் பெறாத ஒப்பந்த வரையறைகளும் திறக்கப்படமாட்டாது.

சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்த வரையறைகள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரார்கள் வந்தவர்கள் முன்னிலையில் பிற்பகல் 2-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்த வரையறை ஏற்கும் அதிகாரி எந்த ஒப்பந்த வரையறைகளையும் பிரிக்கவோ அல்லது எந்த ஒரு காரணமும் காட்டாது நிராகரிக்கவோ உரிமை பெற்றவராவார். ஒப்பந்தக்காரர்கள் வைப்புத் தொகையைக் குறிப்பிட்ட தேதியில் காலை 12-00 மணிக்குள் செலுத்தி விடவேண்டும்.

மேற்பார்வைப் பொறியாளர்/பொது II
வடசென்னை அனல் மின்திட்டம்,
எண்ணூர், சென்னை-57

டிஐபிஆர்/121/செஅ/90/ஏடிடி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.

அதி நவீன பட்டு வகைகள்




100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

**கோ-ஆப்டெக்ஸ்**
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

Licence No. TN/MS(C)/PP-23






சென்னை அண்ணா பல்கலைக்கழகப் பொறியியற் கல்லூரி வளாகத்தில் நல்வாழ்வு மையம், மொழிப் பயிற்சியகம் ஆகியவற்றை மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் டாக்டர். க. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தனர். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்களும், அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் வி.சி. குழந்தைச்சாமி அவர்களும் உடன் உள்ளனர். (26.2.90)